
கல்கி
KALKI
8-9-1957
30 நயா பைசா


பாருங்கள்!
ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.


"அதற்கு
சிறிதும் சந்தேகம்
கிடையாது.
அவர் வெகு
அழகாக அணிந்து
கொண்டிருப்பது
பின்னி மில்
துணிகளே"
வாங்குமிடம்:
வெங்கடேஷ்
வஸ்திராலயா
இங்கு வாங்குவதே ஒரு ஆனந்தம்
ரீடெய்ல் ஷோ ரூம்கள்
'கோர்ட் எதிரில் & 2. தம்புசெட்டி தெரு, மதராஸ்–1.
ஷோரூம் நெ. 1
இங்கு நாங்கள் பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்லில் உற்பத்தியான துணிகளை மட்டும் விற்கிறோம்.
ஷோரூம் நெ. 2
இங்கு நாங்கள் பக்கிங்ஹாம் & கர்நாடிக் மில்லில் உற்பத்தியான துணிகளை மட்டும் விற்கிறோம்.
ஷோரூம் நெ. 3
இங்கு நாங்கள் பின்னி மில்லில் உற்பத்தியான துணிகளையும் மற்றும் இதர உயர்ந்த ரக ஜவுளிகளையும் விற்கிறோம்.



மலர் 17
இதழ் 6

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —*பாரதியார்*

ஹேவிளம்பி
ஆவணி 23

சுதந்திர மலேயா வாழ்க!

உலகத்திலே உள்ள சுதந்திர நாடுகளின் அணி வரிசையில் சென்ற மாதம் 31-ந் தேதி இடம் பெற்ற மலாய் நாட்டுக்கு நல்வரவு கூறி அதை வாழ்த்துகிறோம்.

மலேயா செல்வம் கொழிக்கும் காலனியாக இருந்தும் அங்கு பிரிட்டிஷார் தங்கள் ஆதிக்கத்தை விடாப்பிடியாக வைத்துக் கொண்டிராமல் அந்த நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கியது மிகவும் போற்றத் தக்கதாகும்.

மலேயாவில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து வந்த பிரிட்டிஷ் கொடி சென்ற வாரம் இறக்கப்பட்டு, மலாய் நாட்டின் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கி யிருக்கிறது.

பல்வேறு ஜாதி சமய மதங்களைச் சேர்ந்த பதினைந்து கோடிக்கு மேற்பட்ட மக்கள் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்கின்றனர். மலேயா, தென்கிழக்கு ஆசியாவுக்கு இருதயம் போல் திகழ்வதால், மேற்படி நாடுகளில் உள்ள மக்களின் எதிர்கால நல் வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் மலேயாவின் சுதந்திரம் இன்றியமையாததாகும்.

சில மாதங்களுக்கு முன் பிரிட்டிஷ் காலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடான கனாவைப்போல், மலேயாவும் கடுமையான சுதந்திரப் போராட்டம் எதுவுமின்றிச் சுதந்திரம் பெற முடிந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லவா?

பத்து ஆண்டுகளுக்கு முன் வரையில் மலேயாவில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. போதாக்குறைக்குக் கம்யூனிஸ்ட் கலாட்டாக்களும் கலகங்களும் எல்லையின்றி நடந்து கொண்டிருந்தன. அதனால், அந்த நாட்டில் ஏற்பட்ட உயிர்ச் சேதமும் பொருள் நஷ்டமும் அற்ப சொற்பமல்ல. இன்றும்கூட அந்தப் பிரச்னை தீர்ந்தபாடில்லை.

அப்படியிருந்தும் சென்ற பத்து வருஷங்களில் மலேயா மிகவும் முன்னேற்றம் அடைந்தது. இன்று சுதந்திரம் பெறும் நிலைக்கு வந்து விட்டது.

மலாய் நாடு முஸ்லிம்களான மலாய்க்காரர்களுக்குச் சொந்தமானது என்றாலும் அந்த நாட்டைச் சீனர்களும் இந்தியர்களும் கூடத் தாய்நாடாகக் கொண்டிருக்கிறார்கள்.

சீனர்களும், இந்தியர்களும் சேர்ந்து மலாய்க்காரர்களின் தொகையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறார்கள். அதாவது பெரும்பாலோர் சீனர்களும் இந்தியர்களும் தான். இது, வேறு எந்த நாட்டிலும் இல்லாத ஒரு விசித்திர அரசியல் நிலைமையாகும்.

* * * *

நிலப்பரப்பில் இங்கிலாந்துக்குச் சமமான மலாய் நாடு 50,690 சதுர மைல் விஸ்தீர்ணம் உள்ளது.

அந்த நாட்டின் மொத்த ஜனத்தொகை சுமார் 61 லட்சமாகும். அதில் 30 லட்சம் பேர் மலாய்க்காரர்கள்; 23 லட்சம் பேர் சீனர்கள்; 7½ லட்சம் மக்கள் இந்தியர்கள் ஆவர். அரை லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் மற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.

எனவே, மூன்று பெரும் சமூகங்களான மலாயர், சீனர், இந்தியர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டாலன்றி மலேயாவுக்குச் சுதந்திரம் கிடைப்பது அரிதாகியது.

அந்த மூன்று சமூகங்களையும் சேர்ந்தவர்கள், தங்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்டு, மூன்று சமூகங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டணியை

பிளவை இணைக்கும் பாலம்



பாரதியாரின் கவிதைகள் மனித உள்ளங்களை இணைக்கும் அற்புத சக்தி வாய்ந்தவை.

அமைத்து, சுதந்திரம் கோரியதாலேயே மலாய் நாடு இவ்வளவு சீக்கிரத்தில் சுதந்திரம் பெறுவது சாத்தியமாயிற்று?

ஏற்கனவே மலாய் நாட்டில் உள்ள ராஜ்யங்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்டு, சுல்தான்களின் ஆட்சியில் இருந்தன. இப்போது சிங்கப்பூரைத் தவிர அகில மலேயாவுக்கும் புதிய ஏற்பாட்டின்படி ஒரு சுல்தானே தலைவராக இருப்பார்.

பிரிட்டனில் இருப்பது போல், தேர்தல்கள், பிரதிநிதிகள் சபை, மந்திரி சபை போன்ற ஜனநாயக முறைகளை அடிப்படையாகக் கொண்டே அவரது ஆட்சி இயங்கி வரும்.

* * *

மலேயாவின் சுதந்திரத்தைக் குறித்து, மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்திய மக்கள்தான் அதிக மகிழ்ச்சி அடைகிறார்கள். அதற்கு நல்ல காரணமும் இருக்கிறது.

மலேயாவில் ஏழு லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் வாழ்கின்றனர். மலேயாவை உருவாக்கிய மிகப் பெருந் தொண்டில் இந்தியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

மலாய் நாட்டின் செல்வச் செழுமைக்கு முக்கிய காரணமான ரப்பர்த் தோட்டங்கள் இந்தியர்களுடைய உழைப்பினாலும் உதிரத்தினாலும் உருவானவை. வருஷந்தோறும் இருநூற்றைம்பது கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானம் உள்ள ரப்பரைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். உலகத்தில் உற்பத்தியாகும் இயற்கை ரப்பரில் மூன்றில் ஒரு பங்கு மலேயாவில்தான் உற்பத்தியாகிறது எனில், மலேயாவின் சுபிட்சத்தில் இந்தியத் தொழிலாளர்களுக்கு இருந்து வரும் பங்கை உணர்ந்து கொள்ளலாம்.

இதைத் தவிர, சரித்திர பூர்வமாக மலேயாவுக்கும் இந்தியாவுக்கும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு உண்டு.

மலேயாவின் பிரதம மந்திரியான துங்கு அப்துல் ரஹ்மான் விடுத்துள்ள செய்தியில், மலேயாவின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்து வந்த இந்தியாவுக்கு நன்றி செலுத்தியிருக்கிறார். இந்தியாவில் உள்ள சர்வ கலாசாலைகளிலும் மற்றக் கல்வி ஸ்தாபனங்களிலும் மலாய் நாட்டு மாணவர்களுக்கு இடம் அளித்து, அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் கலை ஞான அபிவிருத்திக்கும் தொழில் ஞான வளர்ச்சிக்கும் இந்தியா சந்தர்ப்பம் அளித்திருப்பது பற்றியும் அவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

மலேயாவில் எவ்வித வேற்றுமையுமின்றி எல்லாச் சமூகத்தினரும் மலாயர்களாகவே கருதப்படுவார்கள் என்று மலேயா பிரதம மந்திரி குறிப்பிட்டிருப்பது எல்லாரும் முழு மனத்துடன் வரவேற்கத் தக்க விஷயமாகும்.

மலேயா மக்களுக்கு, பாரதப் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் அனுப்பியுள்ள சுதந்திர வாழ்த்துச் செய்தியில், மலேயா சுதந்திரம் அடைந்தது மலேயாவுக்கு மாத்திர மல்ல, ஆசியாவுக்கே ஒரு பெரும் வெற்றி யாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இது வரை சுதந்திரத்துக்காகப் போராடி வந்த மலேயா எதிர்காலத்தில் சக்திவாய்ந்த ஒரு நாடாகத் திகழும் என்றும், மற்ற ஆசிய நாடு களுடன் சேர்ந்து சர்வதேச தர்மத்துக் காகவும் உலக அமைதிக்காகவும் போராட முன்வரும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

தெய்வமாக் கவிக்குத் திருவிழா

கவிகளைப் போற்றுதவர்கள் கலைகளைப் போற்ற மாட்டார்கள். நாட்டின் நலனுக் கும் மக்களின் நல்வாழ்வுக்கும் உயிர் நாடி போன்ற கலைகளைப் போற்றுதவர்கள், காட்டு மிராண்டிகளாகத்தான் வாழ முடியும் என்று கூறியுள்ளார் ஒரு பேரறிஞர். கவிகளையோ, கலைகளையோ போற்றுவதில் தமிழ்நாடு உற் சாகம் காட்டுவது அதன் பெருமைக்கு உகந் தது அல்லவா? தமிழ் மக்கள் வழக்கம்போல் இந்த ஆண்டிலும் பல இடங்களில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் விழாவைக் கொண் டாடுகிறார்கள். சென்னை மாநகரம், மகாகவி பிறந்த எட்டயபுரம் முதலிய இடங்களிலும் அவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற் பாடு செய்திருக்கிறார்கள். மகாகவி பாரதியார் மறைந்த இம்மாதத்தில் தமிழ் கூறும் நல்லுல கம் எங்கும் அந்தத் தெய்வமாக் கவிக்குத் திருவிழா கோலாகலமாக நடைபெறும்.

மகாகவி பாரதியாரையோ, சோர்ந்து கிடக்கும் மக்களுக்கு ஜீவசக்தியை, தெய்வ பக்தியை, தேசபக்தியை, கடமை உணர்ச் சியை ஊட்டும் அந்தக் கவிசிரேஷ்டரின் பாடல்களையோ தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்; மறக்கவும் முடியாது.

"உள்ளந் தெளியு மொரு
பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்குமொரு
பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர்
பாட்டிலேயடா—ஊற்றுய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர்
பாட்டிலேயடா"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மகாகவி பாரதியாரின் பெருமையைப் பண் ணோடு பாடியுள்ளார். ஆம், அதைக் கேட்டுக் கிறுகிறுக்காதவர்களும் இருக்க முடியுமா? தமிழ் மக்கள் செய்த தவப்பயனால் கிடைத்த அமரகவிக்குத் திருவிழாக்கள் நடத்தி என் றென்றும் நினைவு கூர்ந்து, அவரது அமுததேங் கனைப் பேணிப் பாதுகாத்து வருவோமாக.

நட்சத்திரம் வீழ்ந்தது

திரைப்பட உலகில் ஈடு இணையிலாப் புகழ் பெற்று விளங்கிய நகைச்சுவை பரக திரு என். எஸ். கிருஷ்ணனின் அகால மறைவு தமிழ் மக்கள் யாவரையும் கண்ணீர் வடிக்கும்படி செய்து விட்டது. அவரது பூத உடலின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தமிழ் மக்களின் இருதயத்தில் திரு என். எஸ். கிருஷ்ணன் எத்தகைய இடம் பெற்றிருந்தார் என்பதை உணர்ந்து கொண்டிருப்பார்கள். இரண்டு மைல் தூரம் வரையில் ஊர்ந்து சென்ற ஜன சமுத்திரத்தைப் பார்த்தபோது, மறைந்த கலைமேதைக்கு இறுதி மரியாதை செய்யத் தமிழகமே திரண்டு வந்து விட்டது போல் தோன்றியது. பன்னிரண்டு மைல் தூரம் படித்தவர்களும் பாமரர்களும் நடிகர்களும் ரசிகர்களும் சோகமே உருவெடுத்தாற் போல் சென்ற உருக்கமான காட்சியை என்றும் மறக்க முடியாது.

சினிமா வானில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் சுடர் விட்டு ஒளி வீசிக் கொண்டிருந்த நட்சத்திரம் மறைந்து விட்டது. வாழ்க்கையின் வெற்றிக்கு இன்றியமையாதவை என்று கருதப்படும் கல்லூரிப் படிப்பு, பதவி, பணம் இவற்றில் எதுவுமே இன்றித் தம் உழைப்பினாலும் நடிப்புத் திறமையினாலும் கலை உணர்ச்சியினாலும் மகோன்னத நிலையை அடைந்து தமிழ் மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்ட தனிப் பெருமை திரு என். எஸ். கிருஷ்ணன் ஒருவருக்குத்தான் உரியது. தின்பண்டங்கள் விற்கும் பரம ஏழையாக வாழ்க்கையை ஆரம்பித்த திரு கிருஷ்ணன், நகைச்சுவை மன்னராகி மக்களின் இதய சிம்மாசனத்தில் இடம் பெற்றார். அவர் பொதுமக்களுக்கு ஹாஸ்யச் சுவையை வாரி வழங்கியதுபோல், தாம் சம்பாதித்த பெரும் பொருளையும் ஏழைகளுக்கு வாரி வழங்கி எல்லோருடைய பேரபிமானத்துக்கும் பாத்திரரானார்.

திரு கிருஷ்ணன் கலை பக்தராக இருந்ததுபோல் தேசபக்தராகவும் விளங்கினார். நாகர் கோவிலிலே நாற்பதாயிரம் ரூபாய் செலவில் காந்தி ஸ்தூபி நிர்மாணித்து, அந் நகரில் தேசத் தந்தையின் ஞாபகம் என்றென்றும் நிலைக்குமாறு செய்தார். வில்லுப் பாட்டு மூலம் தேச சரித்திரத்தையும் காந்தி மகானின் உபதேசங்களையும் அவர் பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்ளும்படி செய்தார். அவருடைய உபகாரச் சம்பளத்தால் எண்ணற்ற ஏழை மாணவர்கள் பட்டப்படிப்பு பெற்றிருக்கிறார்கள். எத்தனையோ ஏழைகளுக்குத் தம்முடைய செலவில் திருமணம் செய்து வைத்திருக்கிறார். தம்மைத் தேடி வந்தவர்கள் யாராயிருந்தாலும் அவருக்கு உதவி செய்யத் தவறியதில்லை. இவ்விதம் ஒருங்கே கலைப் பணியிலும் தேசப் பணியிலும் ஈடுபட்டுப் பொதுமக்களின் அன்பையும் மதிப்பையும் கவர்ந்து கலைவாணராகத் திகழ்ந்தவர் வேறு எவருமே இல்லை எனலாம்.

ஐம்பது வயதுக்குள் நூற்றுக்கு மேற்பட்ட படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் திரைப்பட உலகிலேயே அவர் ஒருவர்தான். அவரும் திருமதி டி. ஏ. மதுரமும் சேர்ந்து ஹாஸ்ய தம்பதிகளாக நடித்ததே பல தமிழ்ப் படங்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

அவ்வளவு படங்களில் நடித்தும் கூட அவரது ஹாஸ்யம் பொது மக்களுக்கு அலுப்புத் தட்ட வில்லை. அதற்கு மாறாக, திரு கிருஷ்ணனின் நகைச்சுவை ஒவ்வொரு படத்திலும் புது மெருகுடன் விளங்கியது. இதிலிருந்தே மிகக் கஷ்டமான ஹாஸ்ய நடிப்பில் அவரது தனிப்பெரும் மேதையைத் தெரிந்து கொள்ளலாம். ஹாஸ்யச் சுவைக்குத் திரைப் படங்களில் முக்கிய இடம் உண்டு என்பதை முதன் முதலாக ஸ்தாபித்தவர் திரு என். எஸ். கிருஷ்ணன்தான்.

முதன் முதலாக ருஷ்யாவுக்குச் சென்ற கலாச்சார தூதுகோஷ்டியில் திரு கிருஷ்ணன் கலந்து கொண்டார். தமிழ் நாட்டின் தனிப்பெரும் நகைச்சுவையை உலகம் வியக்கும்படி செய்து காட்டிய மேதை அவர்.

திரு கிருஷ்ணனின் மறைவு பொது மக்களுக்கு எவ்வளவு துக்கத்தை உண்டு பண்ணியதோ, அதுபோல் சினிமா வானில் புகழ் பெற்று விளங்கும் நடிகர்களையும் கண்ணீர் விடும்படி செய்துள்ளது. இன்றையதினம் பிரபலமாகத் திகழும் பல நடிகர்கள் அவரைத் தங்கள் குருவாகக் கருதி வருகிறார்கள்; கருத்து வேற்றுமையின்றி நிபுணர்களான சகல நடிகர்களாலும் திரைப்பட உலகத்தின் இணையற்ற நட்சத்திரம் என்று போற்றப்படும் பெருமைக்கு உரியவராகத் திகழ்ந்தவர் திரு கிருஷ்ணன் ஒருவர்தான். அதனால்தான் திரு என். எஸ். கிருஷ்ணனின் திடீர் மறைவு மக்களின் உள்ளத்தை உலுக்கி விட்டது.

திரு என். எஸ். கிருஷ்ணனின் மரணத்தினால் தமிழ் அன்னை தன் அருமைப் புதல்வனை இழந்தாள். திரைப்படக் கலை உலகம் ஒரு சிறந்த மேதையை இழந்து விட்டது. சென்ற பல ஆண்டுகளாகத் தெவிட்டாத ஹாஸ்ய விருந்து அளித்து வந்த ஒரு கலைசிறந்த நடிகரைப் பொதுமக்கள் இழந்தனர்.

தமது அருமைக் கணவரை இழந்து துடிக்கும் திருமதி டி. ஏ. மதுரத்துக்கு எந்த மொழியில் ஆறுதல் கூறமுடியும்? "துக்கத்துக்கு ஆறுதல் கடிதம் எழுதியோ, நேரில் கண்டு பேசியோ சமாதானம் சொல்வது இயலாத காரியம்; எத்தனை பேர் பங்கு கொண்டாலும், கொள் முதல் குறையாது. கிருஷ்ணன் காலி செய்த இடத்தில் வேறு யாரும் புகுந்து புகழ் பெற முடியாது" என்று ராஜாஜி அவர்கள் திருமதி டி. ஏ. மதுரத்துக்கு எழுதியிருக்கும் ஆறுதலைவிட வேறு என்ன கூறமுடியும்?

அவரது பிரிவால் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவருடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



நகைச்சுவை மன்னர் என்.எஸ்.கிருஷ்ணன்

தோற்றம் 15-11-1908 மறைவு 30-8-1957

பத்துலட்சம் தமிழர்களின் உரிமை

பிரதம மந்திரி ஸ்ரீ பண்டார நாயகாவுக்கும் தமிழ் அரசுக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள மொழி ஒப்பந்தம் வகுப்புக் கலகம் ஏற்படாதபடி தடுத்து விட்டது என்ற அளவுக்கு அதைப் பலரும் வரவேற்ற பொழுதிலும், அந்த ஒப்பந்தத்துக்குப் பிரதம மந்திரி, கல்வி மந்திரி, வர்த்தக மந்திரி முதலான பொறுப்பு வாய்ந்த பல மந்திரிகளும் அடிக்கடி கொடுத்து வரும் வியாக்யானங்களைக் கவனிக்கும்பொழுது தமிழ் மக்கள் கவலையடைய வேண்டியதாகவே இருக்கிறது. இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட மட்டில் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர்களான சுமார் பத்து லட்சம் பேர்களின் நிலைமை என்ன என்பதைத் திரு எஸ். தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சந்தேகத்துக்கு இடம் வைக்காதபடி தெளிவாக வெளியிட்டிருக்கிறது.

ஜனத்தொகைக் கணக்கின்படி இலங்கையிலிருக்கும் தமிழ் பேசும் மக்களில், இலங்கைத் தமிழர்கள் என்று அரசாங்கம் கருதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களைக் காட்டிலும் மத்திய மாகாணத்தில் தோட்டங்களில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர்களான தமிழர்களின் எண்ணிக்கையே அதிகம். ஆகையால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களுக்குத் தங்களுடைய நடவடிக்கைகளைத் தமிழில் நடத்திக் கொள்ள எவ்வளவு தூரம் உரிமையுண்டோ, அதே அளவு உரிமை மத்திய மாகாணத்திலுள்ள அதிக ஜனத்தொகையுள்ள இந்திய வம்சாவளியினர்களுக்கும் உண்டு. தமிழரசுக் கட்சியினர் பிரதம மந்திரியுடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் தமிழில் காரியங்களை நடத்திக் கொள்ள உரிமையிருக்க வேண்டுமென்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதினால் இந்திய வம்சாவளியினர்களான பத்து லட்சம் தமிழர்களின் மொழி உரிமையைத் தமிழ் அரசுக் கட்சி தியாகம் செய்து விட்டதென்ற அபிப்பிராயம் காங்கிரஸ் வட்டாரங்களில் நிலவுகிறது. இந்தப் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களும் வசிக்கும் மாகாணத்தில் சகலமும் சிங்களத்தில் தான் நடைபெறும். அங்குள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் சிங்களத்திலேயே இயங்கும். ஏற்கனவே பிரஜாவுரிமையை இழந்த இந்தியத் தமிழர்களின் மொழி உரிமையும் பறிக்கப் படுவதை, இந்த ஒப்பந்த வாயிலாகத் தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக் கொண்டு விட்டது. இதுதான் காங்கிரஸ்காரர்கள் வெளியிடும் அபிப்பிராயம். இந்த ஒப்பந்தத்தின் விளைவாகக் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டுள்ளபடியினால் இந்திய வம்சாவளியினர்களின் பிரச்னைகளுக்கு ஒரு சமரச முடிவு காண உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதம மந்திரியைக் காங்கிரஸ் வற்புறுத்தி யிருக்கிறது.

* * *

இலங்கையிலுள்ள பெரும்பாலான பள்ளிக் கூடங்களில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களையும் போதிக்க இந்தியப் பட்டதாரிகளே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் இந்தப் பாடங்களைப் போதிக்கக் கூடிய இலங்கையர்கள் போதிய அளவு இல்லாததுதான். அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றே இந்திய ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்பது சட்டம். இலங்கையில் பள்ளிக்கூடங்கள் ஜனவரியில் ஆரம்பித்து டிஸம்பரில் மூடும்பொழுது சில இந்திய ஆசிரியர்களின் நியமன காலம் பாதி வருடத்தில் முடிவதாயிருக்கிறது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதை உணர்ந்த கல்வி மந்திரி எல்லா இந்திய ஆசிரியர்களின் நியமனத்தையும் வருட முடிவு வரையில் நீடித்து வைத்திருப்பதாயும், இனி மேல் ஆசிரியர்களின் நியமனகாலம் வருடம் முழுவதையும் தழுவியதா யிருக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறார். இது இலங்கையிலுள்ள இந்திய ஆசிரியர்களுக்கு ஓரளவு சலுகை அளிப்பதாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து போகும் கொட்டைப் பாக்கு வியாபாரிகளுக்கு இலங்கையில் ஆறு மாத காலம் தங்கியிருக்க விஸா கொடுப்பதென்றும் அரசாங்கம் இப்பொழுது தீர்மானித்திருக்கிறது.

—ரஜனி

கனகாபிஷேகம்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் கனகாபிஷேகம் செப்டம்பர் 6-ம் தேதி சின்னக் காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது. இவ் வைபவத்துக்கு நன்கொடையளித்தவர்களும் ஆஸ்திக அன்பர்களும் விஜயம் செய்து ஆசாரிய சுவாமிகளின் அநுக்ரஹத்துக்குப் பாத்திரர்களாகும்படி கோரப்படுகிறார்கள்.



ஆசாபங்கம்

தமிழாக்கம் : பாரதியார்




டார்ஜிலிங் நகரத்துக்குப் போனேன். (இது இமய மலை மீதுள்ளது.) அப்போது அங்கு ஆகாயத்தை மேசமும் மூடுபனியும் மறைத்திருந்தன. அவ்வித நேரத்தில் வெளியே உலாவுதல் சங்கடமாகத் தோன்றும். ஆனால் வீட்டுக்குள் இருப்பது அதனிலும் கஷ்டம்! நான் ஹோட்டலில் 'காலைத் தீனி'யை முடித்து "பூட்ஸும், ஓவர்க் கோட்"டும் தரித்துக் கொண்டு தினம் போல் உலாவுவதற்குப் புறப்பட்டேன்.

இடையிடையே, தூற்றல் போட்டுநின்ற சமயம். மூடுபனியில் மறைந்திருந்த குன்றுகளைப் பார்த்தால், சித்திரக்காரன் எழுதிப் பின் அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்த படம் போலத் தோன்றிற்று. அங்குள்ள 'கல்கத்தா ரஸ்தா' என்ற சாலை வழியே நான் தனியாக நடந்து போகையில், ஜீவனுக்கு இத்தனை தெளிவில்லாத புறச் சித்திரம் போதாது என்று தோன்றிற்று: அதாவது இந்த மூடுபனி மயமான மேகலோகம் மனிதவாசத்துக்கு யோக்கியமாகத் தோன்றவில்லை. என்னுடைய நெஞ்சம் எல்லாப்புலன்களாலும் பூமி தேவியைச் சேவித்து இறுகத் தழுவி, அவளுடைய பாலைப் பருகி போஷணை பெறுவதற்கு விரும்பிற்று.

அப்போது சமீபத்தில் யாரோ ஒரு ஸ்திரீ அழுது பொருமும் சத்தம் கேட்டது. விசேஷமாகக் கவனிக்கும்படி அது அத்தனை அபூர்வ விஷயமன்று. மற்றொரு சமயத்தில் நான் அதைக் கவனித்திருக்க மாட்டேன். ஆனால் இந்த முடிவற்ற மூடுபனிக்கிடையே அவ்வொலி என் செவியில், பூலோகமே மூச்சு முட்டிப் பொருமும் ஒலி போலக் கேட்டது. அந்த இடத்தருகே போனேன். ரஸ்தா ஓரத்தில் ஒரு ஸ்த்ரீ பாறையின் மேல் வீற்றிருந்தாள். அவள் கூந்தல் முடிமீது சடையாகச் சுற்றியிருந்தது. அதில் வெய்யில் பட்டுச் செந்நிறமாக இருந்தது. அவள் நெஞ்சின் அடியிலிருந்து வந்த அவ்வொலி அவளுடைய ஆசாபங்கத்தின் நெடுங்காலத்துச் சிரமம் அந்த மேகம் மூடிய மலைப்புறத்தின் முழுத் தனிமையான இடத்தைக் கண்டவுடன் திடீரென்று பொங்கி வெளிப்பட்டது போலிருந்தது.

"பேஷ்! இது ஒரு கதை மாதிரிஇருக்கிறது. டார்ஜிலிங் மலை உச்சியில் ஒரு யோகினி அழுது கொண்டிருப்பதைப் பார்த்தல் சாதாரண சம்பவமன்று" என்று நினைத்துக் கொண்டேன். அவள் எந்தப் பைராகிக் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்பதுதெரியவில்லை. ஆதலால் அவளிடம், "நீ யார்? இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டேன்.



ஆரம்பத்தில் அவள் மறுமொழி சொல்லவே இல்லை. மூடு பனியை யும் கண்ணீரையும்ஊடுருவி என்னை ஒருபார்வை பார்த்தாள். ''பயப் படாதே!'' என்றேன். அவள் புன்னகை செய்து, மிகவும் திருத்த மான இந்துஸ்தானியில், ''நான் பயத்தை விட்டு நெடுநாளாயிற்று. நாணத்தையும் அப்படியே. எனினும் நான் அந்தப்புரத்து ஸ்திரீயாக இருக்கும்போது எனது சகோதரன்கூட என்னை அனுமதி யில்லாமல் பார்க்க மாட்டான். பாபுஜி ஐயா!'' என்றாள். என்னை இவள் 'பாபு' என்றது எனக்கு வருத்தமாக இருந்தது. நானோ உடை, நடை யெல்லாம் ஐரோப்பியக் கோலத்தில் இருந்தேன். இந்தப் பாமர ஸ்திரீ பாபு வர்க்கத்தில் சேர்ந்தவனாக என்னை நினைத்தது பற்றி மனம் நொந்தேன். உடனே துரைமாருடைய ரயில் வண்டி மாதிரி, மூஞ்சி யைக் காற்றிலே செல்லவிட்டுப் பின்னே, 'ஸிகரெட்' புகை மிதந்து வர அங்கிருந்து புறப்பட்டு அப்பால் பாய்ந்து விடலாமா என்ற எண்ணம் ஒருக்ஷணம் தோன்றியது. எனினும் அவள் செய்தி முழுதும் தெரிந்து கொள்வோமென்ற அவா ஏற்பட்டது. நிமிர்ந்து கௌரவ மாக நின்று கொண்டு,—''உனக்கு ஏதேனும் உதவி வேண்டுமோ?'' என்று கேட்டேன். அவள் என் முகத்தை வெறித்து நோக்கி, ''பத்ராவன் நவாப் குலாம் காதிர்கானுடைய மகள் நான்''என்றாள்.

பத்ராவன் எங்குள்ளது? அதற்கு நவாப் யார்? அவன் மகள் இப்படி யோகினியாய்க் 'கல்கத்தா ரஸ்தா'வின் வளைவிலே உட் கார்ந்து அழும்படி நேர்ந்த அதிசயம் யாது? எனக்கொன்றும் புலப்படவேயில்லை. நம்புவது கூடக் கஷ்டமாக இருந்தது. இருந்தா லும் நாமேன் அவநம்பிக்கைப்பட வேண்டும்? கதை இன்னும் கேட்க ரஸமாக இருக்கக்கூடும் என்றெண்ணி பயபக்தியுடன் தாழ்ந்து, ஸலாம் போட்டு, ''ராஜகுமாரியே! நீ யார் என்று நான் தெரிந்து கொள்ளா மல் நடந்ததைப் பொறுத்தருள வேண்டும்'' என்றேன்.

அந்த 'ராஜகுமாரி' சற்றே முகமலர்ச்சி கொண்டு சமீபத்தி லிருந்த ஒரு பாறையைக் காட்டிக் கையை அசைத்து, ''உட்காரும்'' என்றாள். அவளுடைய தோரணையிலிருந்து அவளுக்குச் சகஜமான விலாசமும், ஆக்ஞை சக்தியும் உண்டென்று உணர்ந்தேன். பாசி போர்த்த வலிய, ஈரப்பாறை மேல் அவள் அருகே வீற்றிருந்தது எதிர் பாராத பெருமையென யாங்ஙனமோ என் மனம் கருதிற்று. அன்று காலை நான் ஹோட்டலிலிருந்து 'ஓவர்கோட்' மாட்டி வெளி யேறினபோது 'ராஜ்ய ஜோதி' என்றோ, 'ஜகஜ்ஜோதி' என்றோ பெயர் வைத்திருக்கக்கூடிய பத்ராவன் நவாப் மகளுடன் மண் பாறைக்கு மேல் அதுவும் 'கல்கத்தா ரஸ்தா'வின் வளைவிலே உட் காரும் மகிமை நமக்குக் கிடைக்குமென்று நான் கனவிலேகூட நினைத்துப் பார்க்கவில்லை.

நான் அவளை நோக்கி, ''ராஜகுமாரி! நீ இந்த நிலைமைக்கு வந்த காரணம் யாது?''' என்று கேட்டேன். ''எவனால் விளைந்ததோ நான் எங்ஙனம் கூறவல்லேன்? இந்த மலையை மேகத் திரைக்குள் மூழ்குவித் தது யார்? உம்மாலே சொல்ல முடியுமோ?'' என்று வினவித் தனது நெற்றியைத் தொட்டுக் காட்டினாள். அப்போது வேதாந்த வாதம் பண்ண எனக்குச் சம்மதமில்லை. ஆதலால் அவள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டு, ''ஆமாம்! உண்மைதான். விதியின் ரகசியத்தை ஆழங்கண்டோர் யார்? நாம் பூச்சிகளுக்குச் சமானம்தானே!'' என் றேன். மற்றொரு சமயமாக இருந்தால், அவளுடன் அந்த விஷயத்தைத் தர்க்கிக்க விரும்பியிருப்பேன். ஆனால் அப்போது எனக்கு இந்துஸ்தானி பாஷை சரி யாகத் தெரியாததொரு தடையாயிற்று. வேலையாட்க ளிடமிருந்துதான் கற்றுக் கொண்ட சொற்ப ஹிந்தியை வைத்துக் கொண்டு தார்ஜிலிங் ரஸ்தா ஓரத்தில் பத்

*இந்தக் கதையில் வரும் சம்பவத்தைத் தான் இவ்விதம் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார் ஓவியர் மணியம்.





ராவன் ராஜகுமாரியிடத்திலேனும், அன்றி எவரிடமேனும் 'விதி பெரிதா; மதி பெரிதா?' என்ற விஷயத்தை வாதிப்பது சாத்தியப் பட்டிராது.

ராஜகுமாரி சொன்னாள்: "என் வாழ் நாளின் அந்தக் கதை இன்று காலையோடு முடிவு பெற்றது. உனக்குக் கேட்கச் சம்மத மானால் உன்னிடம் சொல்வேன்" என்றாள். அதற்கு நான், "சம்மதமா! எனக்கு அது ஒரு பாக்கியம்" என்றேன்.

'நான் ஹிந்துஸ்தானி பாஷையை அனுஷ் டானத்தால் கௌரவப்படுத்துவதைக் காட் டிலும், பங்கத்தால் அதிகக் கௌரவப்படுத்தி யிருப்பேன்.' அதாவது தப்பும் தவறுமாக உளறியிருப்பேன் என்பது என்னையறிந்தோர் எளிதாக ஊகித்துக் கொள்ளக்கூடிய விஷயம். ஆனால் அந்த ராஜகுமாரி என்னுடன் பேசிய போது, அவளுடைய சொற்கள் பொன்னிறக் கதிர்கள் மின்னும் வயல்களின் மீது காலை இளங் காற்று வீசுவது போலேயிருந்தன. அவளுடைய பேச்சில் தெளிவான பாய்ச்ச லும், அற்புதமான சொல் வளமும் இயற்கை யிலேயே அமைந்திருந்தன. என் மறுமொழி களோ குறுகிய சிதறிய சொற்கள்.

அவள் சொன்ன கதை பின்வருமாறு:—

"என் பிதா டில்லி ராஜவம்சத்தின் ஒரு கிளையிலே தோன்றியவர். ஆதலால் எனக்குத் தக்க வரன் கண்டு பிடித்தல் சிரமமாயிற்று. என்னை லக்னௌ நவாப்புக்கு மணம் செய்யப் போவதாக வார்த்தை நடந்தது. ஆனால் என் பிதாவுக்கு அதில் பூரண மான சம்மதமில்லை. இப்படி யிருக்கையில் பகதூர் கும்பினி யாருக்கு (அதாவது ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்கு) விரோதமாகச் சிப்பாய்ச் சண்டை ஆரம்பித்தார். ஹிந் ஸ்தானம் பீரங்கிப் புகை யாலே கருமை கொண்டது" என்றாள்.



ஸ்திரீகளின் வாயினால் இத் தனை செம்மையான ஹிந்துஸ் தானி என் வாழ்நாளில் அதற்கு முன் நான் எப்போ துமே கேட்டது கிடையாது. அந்த ஹிந்துஸ்தானி வர்த் தகரும், இரும்பு யந்திரங்க ளும் ஆதிக்கம் பெற்றிருக்கும் இக்காலத்துக்குத் தகுந்த பாஷை இல்லை என்றும் அப் போதுதான் தெரிந்து கொண் டேன்.

ஆங்கிலேயரின் மலைவாச ஸ்தலமாகிய டார்ஜிலிங்கில் அவள் பேசினாள். ஆனால் அந்த வாக்கி லிருந்த ஒரு மந்திர சக்தியானது, என் கண் முன்னே—வெள்ளைப் பளிங்கினால் செய்த பழைய மொகலாய ராஜமாளிகைகளின் வானளாவிய ஸ்தூபிகளையும், மிகவும் நன்றாக அலங்கரித்த குதிரைகள் வாலையாட் டிக் கொண்டு செல்லும் காட்சியையும், சிங் காரமான அம்பாரிகளேற்றிய யானைகளையும், பலவிதமான பளபளப்பு வர்ணங்களுடைய பாகைகள் அணிந்த ராஜ சபைப் பிரபுக்களை யும், அற்புதமான இருப்புக் கச்சையில் தொங்கவிட்ட உடைவாள்களையும், முனை உயர்ந்த ஜரிகைக் கறை போட்ட செருப்பு களையும், உடம்பின் மீது சாவகாசமாக வழிந்து கிடக்கும் மஸ்லின் அல்லது பட் டாடைகளையும், எல்லையில்லாத மொகலாய தர்பார்ச் சடங்குகளையும் தோன்றும்படி செய்தது.

ராஜகுமாரி மேலே கதை சொல்லுகிறாள்: "எங்களுடைய கோட்டை யமுனைக் கரை யில் இருந்தது. அதற்குக் காப்பதிகாரி கேசவ லால் என்ற ஹிந்து பிராமணன்."

இந்தக் கேசவலால் என்ற நாமத்தை அவள் உச்சரித்த போது அவளுடைய குரலின் குறை யற்ற சங்கீதம் முழுவதையும் அதில் சிந்தி விடு வாள் போல் இருந்தது. என்னை யறியாமல் என்னுடைய கைத்தடி நழுவி விழுந்தது. நான் நிமிர்ந்து கெட்டியாக உட்கார்ந்து கொண்டேன்.

அவள் பின்னும் கதை சொல்லுகிறாள்: "கேசவலால் வைதிகன்: தினந்தோறும் காலை நேரத்தில் என் ஜன்னல் சாளரத்தின் வழியே அவன் யமுனா நதியில் மார்பளவு ஜலத்தில் நின்று கொண்டு ஜபம் பண்ணுவ தைப் பார்ப்பேன். பிறகு அவன் துணியில் ஜலம் சொட்டச் சொட்ட நதியின் சலவைக் கல்படிகளில் உட்கார்ந்து வாய்க்குள் மந்திரம் சொல்லுவான். பிறகு தனது தெளிந்த அழகிய குரலில் ஏதேனும் பகவான் மீது கீர்த் தனம் பாடிக் கொண்டு வீட் டுக்குப் போவான். நானோ மகமதியப் பெண். இருந்தும் எங்கள் மத சித்தாந்தங்களை எனக்கு யாரும் கற்பிக்க வில்லை. நான் எவ்விதமான ஆராதனை செய்வது மில்லை. எங்கள் இனத்தார் அந்த நாட் களில் தெய்வபக்தியை மறந்து சிற்றின்பப் பிரியராகி விட்ட னர். அந்தப்புரங்கள் தெய்வ பக்தி துரத்துண்ட போகஸ் தலங்கள் மாத்திரமேயாய் விட்டன. ஆனால் எனக்கு மாத்திரம் எப்படியோ பார மார்த்திக விஷயங்களில் இயற் கையான தாகம் இருந்தது. காலை உதயத்தின் ஒளியில், நீல யமுனையின் தெளிந்த சாந்தமான நீர் மீது, தாழ்ந்த வெள்ளைப் படிகளில் அந்த பக்திமானுடைய செயலைக் கண்ட போது, என் இருதயம் புதிய விழிப்பெய்தி, அதில் சொல்ல முடியாத பக்தி இன்பம் ததும்பியது.

"என்னிடத்தில் ஹிந்துப் பெண் ஒருத்தி வேலை செய்யும் தாதியாக இருந்தாள். காலை தோறும் கேசவலாலின் பாத தூளியைத் தலை மீது தரித்துக் கொள்வாள். இந்தச் செய்கை யைப் பார்க்கும் போது அது எனக்கு ஒரு விதத்தில் இன்பமாகவும் சற்றே பொறாமைக்கு இடமாகவும் இருக்கும். சுபதினங்களில் அந்தப் பெண் சில பார்ப்பாருக்கு அன்னமிட்டு,

தானங்கள் கொடுப்பதுண்டு. அப்போது செலவுக்குப் பணம் நான் கொடுப்பேன். ஒரு முறை நான் அவனுடைய பிராமண போஜனத்தில் கேசவலாலையும் அழைக்கும்படி சொன்னேன். அவள் தலை நிமிர்ந்து நின்று, "எனது சுவாமி கேசவலால், பரான்னம் புசிக்க மாட்டார். தானம் வாங்கவும் மாட்டார்" என்றாள்.

எனவே, நான் கேசவலாலிடம் கொண்ட பக்தியை நேரில் செலுத்தவும், அன்றி மற்றோர் வழியே செலுத்தவும் இடமில்லாமல் போனது பற்றி என் இருதயம் தவித்தது. என் பாட்டனார் ஒரு பிராமணப் பெண்ணை வலிக் கொணர்ந்து அந்தப்புரத்தில் வைத்திருந்தார். அவள் வழியில் நான் பிறந்த படியால் அவள் பிராமண ரத்தம் என் நரம்புகளிலோடுவதாக நினைத்துக் கொண்டேன். இதில் எனக்குத் திருப்தி உண்டாயிற்று. கேசவலாலும் நானும் ஒரு குலம்தானென்று நினைக்க இடமாயிற்று. எனது ஹிந்துத் தாதி புராணங்களிலிருந்து, ஹிந்து தேவர், தேவிகளின் அற்புதக் கதைகளை யெல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லுவாள். நான் அதை யெல்லாம் கவனத்துடன் கேட்பேன். அதிலிருந்து, தேவச் சிலைகள், பூஜை மணியோசை, சங்குகளின் நாதம், தங்க ஸ்தூபிகளுடைய ஆலயங்கள், புஷ்பாஞ்சலி, சந்தனத்தின் வாசனை, அமானுஷ சக்தியுடைய யோகிகள், பிராமணரின் தெய்வத் தன்மை, பூமியில் மனிதராய் வந்த ஹிந்து தேவரின் சரித்திரங்கள்—இவை யெல்லாம் என் உள்ளத்தில் நிறைந்து பெரிய, ஸ்பஷ்டமில்லாத, தூரமான கற்பனா லோகத்தை உண்டாக்கின. எனது இருதயம் அதில் பறந்தது, பழைய காலத்து விசாலமான மாளிகை யொன்றில், மாலை நேரத்தில் அறைக்கு அறை பறந்து செல்வதொரு சிறு பக்ஷியைப் போல.



"அப்போது அந்தப் பெரிய சிப்பாய்ச் சண்டை உண்டாயிற்று. அதன் வேகம் எங்கள் சிறிய பத்ராவன் கோட்டையிலும் மோதத்தான் செய்தது. பண்டு ஹிந்துஸ்தான் சிங்காசனத்துக்காக ஹிந்து மகமதியர் ஆடி நிறுத்தியிருந்த சொக்கட்டானாட்டத்தை மறுபடியும் தொடங்கவும், பசுவைக் கொல்லும் வெளிறிய முகத்தினரை ஆரியரின் நாட்டிலிருந்து துரத்தவும் காலம் வந்துவிட்டது என்று யோசித்தார்கள்.

"எனது பிதா, குலாம் காதிர்கான் ஜாக்கிரதையுள்ளவர். ஆங்கிலேயரை வாய்க்கு வந்தபடி நிந்திப்பார். ஆனால் அதே காலத்தில், 'இந்த மனுஷர்கள் அசாத்தியமான காரியங்கள் செய்யவல்லோர், ஹிந்துஸ்தானத்து ஜனங்கள் இவர்களுக்கு நிகரில்லை. வீணுக்காசைப்பட்டு எனது சிறிய கோட்டையையும் இழந்து விடும் மனிதன் நானன்று. பஹதூர்! கும்பினிக்காரருடன் நான் போர் செய்ய மாட்டேன்' என்றும் கூறுவார். ஹிந்துஸ்தானத்தில் ஒவ்வொரு ஹிந்து மகமதியனுடைய ரத்தமும் கொதித்துக் கொண்டிருந்த சமயத்தில் என் பிதா இப்படி எச்சரிக்கையை அனுசரித்தது கண்டு எங்களுக்கெல்லாம் வெட்கமாக இருந்தது. அந்தப் புரத்து ராஜ ஸ்திரீகள்கூட யுத்தப் பிரியராயினர். அப்போது கேசவலால் தனது முழுப்படை வலிமையுடன் என் பிதாவிடம் வந்து 'நவாப் சாஹேப்! நீ எங்கள் பக்கத்திலே சேரா விட்டால், சண்டை முடியும் வரையில் நான் உன்னைக் கைதியாக்கி வைத்துக் கோட்டையை நானே காப்பேன்'' என்றான்.

அதற்கு என் பிதா, "கவலைப்பட வேண்டியதில்லை. நானும் கலகக் கூட்டத்தில் சேரத்தான் போகிறேன். பொக்கிஷத்திலிருந்து பணம் கொடுக்கும்படி கேசவலால் கேட்டதற்கு ஒரு சிறிய தொகை கொடுத்து இன்னும் அவசியமானபோது அதிகம் தருவதாக வாக்களித்தார்.

"தலை முதல் கால் வரை நான் பூண்டிருந்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றி எனது ஹிந்துத் தாதி மூலமாகக் கேசவலாலுக்கு ரகசியமாக அனுப்பினேன். அவற்றை அவன் ஏற்றுக் கொண்ட போது, அந்த பூஷணங்களைக் கழற்றிய எனது அவயவங்கள் புளகமடைந்தன. பழைய காலத்து பீரங்கிகளையும், நெடுநாள் பழக்கமின்றிக் கிடந்த வாள்களையும் எடுப்பித்துக் கேசவலால் போருக்கு ஆயத்தங்கள் செய்யலானான். அப்போது திடீரென்று ஒரு நாள் மாலை செவ்வுடை தரித்த வெண் படைகளுடன் கமிஷன் துரை கோட்டைக்குள் புகுந்தான்!

"என் பிதா, குலாம் காதிர்கான், கேசவலாலுடைய சூழ்ச்சியை இவனுக்கு ரகசியமாகச் சொல்லி அனுப்பிவிட்டார். அப்போது கூட அந்தப் பிராமணனுக்கு இருந்த செல்வாக்கு மிகுதியால், அவனுடைய சொற்பத் தொகையான பரிவாரத்தார் உபயோகமற்ற பீரங்கிகளையும் துரு ஏறின கத்திகளையும் வைத்துக் கொண்டு சண்டை செய்யத் தயாராக இருந்தனர். எனது இருதயம் வெட்கத்தால் உடைந்து விடும் போலிருந்தது. கண்களோ நீர் சிந்தவில்லை. என் உடன் பிறந்தானுடைய உடையைத் தரித்துக் கொண்டு ரகசியமாக அந்தப்புரத்திலிருந்து வெளியேறிச் சென்றேன். அப்போது போரின் தூளியும், புகையும், சிப்பாய்களின் ஆரவாரமும், பீரங்கியின் இடிகளும் நின்று போய் விட்டன. மண்ணிலும் வானத்திலும் மரணத்தின் பயங்கரமான சாந்தி உண்டாயிற்று. யமுனையின் நீலத்திரைகளைச் செந்நிறமாக்கி சூரியன் ரத்த மயமாக அஸ்தமித்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

"கமல நிலையம்" அதிபர் திரு மண்டயம் ஸ்ரீனிவாஸாச்சாரியாரின் அனுமதியுடன் வெளியிடப் பெறும் இக் கதை இதுவரை பாரதி நூல் தொகுதிகளில் வெளிவராதது.



'எங்களுக்குப் பாடமாக உள்ள ஆங்கிலப் பாடல்கள், தமிழ்ப் பாடல்கள் இவற்றையும் 'இலக்கியச் செல்வ'த் தொடரில், விமர்சனம் செய்யக் கூடாதா ?' என்று கல்லூரி மாணவர்கள் பலர்கேட்கிருர்கள். 'செய்தால் என்ன ?' என்று உற்சாகப்படுத்துகிருர் 'கல்கி' ஆசிரியர்; செய்யலாமா என்று எண்ணுவதற்குள், ஒரு குரல் காதில் விழுகிறது. 'சரி, சரி, இனிமேல் ஆசிரியருக்குக் கொண்டாட்டந்தான். தற்குறிப் பேற்றம், உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை, பொருள் மொழிக் காஞ்சி, இடந் தலைப்பாடு என்றெல்லாம் விளாசத் தொடங்கி விடுவார். இல்லா விட்டால், ஹோமரைப் பின்பற்றிய உவமை, எதுகையிலாச் செய்யுள், யதார்த்த வாதம், இலட்சிய வாதம், ரொமாந்திக் இயக்கம், இப்படியாக ஆங்கில இலக்கிய விசார சங்கேதச் சொற்களை அள்ளி வீசித் திணற அடித்து விடுவார்' என்று கவலைப்படுகிறது அந்தக் குரல்.

அப்படி ஒன்றும் பயப்பட வேண்டாம். இதுவரை இருந்ததுபோலவே, இனியும், 'இலக்கியச் செல்வ'த் தொடர் பாடல்களில் உள்ள பொருள் வளத்தையும், கவிதைப் பாங்கையுமே தரும். இதனால், மாணவர்களுக்கு, சிறந்த உதவி கிடைக்கும். மாணவரல்லாதமற்றவர்களும்கவிதையின் அழகை நுகர்வார்கள். பாடமாக அமைந்து விட்டது என்ற காரணத்தினால், பாடல் ஒன்றின் கவிதைத் தன்மை குறைந்து விடுமா ? விடாது. பாடமாக உள்ள பாடலைப் பற்றிப் பேசுகிறேன் என்பதால், பாடலை மறந்து பாடத்துக்குப் போய்விடவா போகிறேன் ? அதுவுமில்லை. பாடலை மறந்தால் பிறகு பாடந்தான் ஏது? பாடலை உணர்வதற்காகத் தானே பாடமும் வகுப்பும் ? வாருங்கள், போகலாம், அற்புதமான பாடம் ஒன்றைக் காணுவதற்கு.

சாவடியில் தீப்பிடித்தது.

'சோம்பல் அம்பலம் வேகுதடா ?' என்று குரல் கொடுத்தான், அங்கே படுத்துக் கிடந்த முதற் சோம்பேறி.

'வாயைத்தான் வலிக்காதோ?' என்று அங்கலாய்த்தான் இரண்டாமவன்.

'சந்தை இரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே!' என்று சலிப்புடன் கண்ணை மூடிக்கொண்டான் மூன்ருவது பேர்வழி.

தமிழ் நாட்டிலே வழங்கி வரும் கதை இது. ஒரு சாவடி, மூன்று சோம்பேறிகள். இதற்குப் பதிலாக, ஒரு நாடு முழுவதுமே சோம்பல் அம்பலமாகி விட்டால்? அந்த நாட்டு மக்கள் அனைவருமே, எந்தவிதமான உழைப்பையும் வெறுத்து, செயலில் இருந்து ஒதுங்கி நின்று, சும்மா இருக்கின்ற சமுதாயமாக அமைந்து விட்டால்? இத்தகைய விசித்திரமான நாடு ஒன்றைப் பற்றிய குறிப்பு ஹோமர் என்ற கிரேக்க கவிஞன் பாடிய காவியத்தில் வருகிறது.

ஹோமர் என்ற கவிஞன், கிரேக்க நாட்டில், சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகச் சொல்லுகிருர்கள். அவன் குருடன் என்றும், தான் இயற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர் ஊராக அலைந்தான் என்றும் கூறப்படுகிறது. இது ஒரு கட்சி. ஹோமர் என்ற ஒருவன் இருந்ததே இல்லை என்பது மற்றொரு கட்சி. பழங்காலத்து கிரேக்கப் பாடல்களை, யாரோ பிற்காலத்துப் புலவன் ஒருவன் தொகுத்து வைத்து, ஹோமர் எழுதியதாகச் சொல்லி விட்டான் என்று இந்தக் கட்சி பேசுகிறது. உண்மை எதுவானுல் என்ன? இன்று ஹோமர் எழுதியதாக, இரண்டு பெரும் காவியங்கள் உலக இலக்கியத்திலே இடம் பெற்றுள்ளன. ஒன்று இலியது† என்ற காவியம்; மற்றொன்று ஒதஸ்ஸே†† என்பது.

ஆசியா மைனர் என்று இப்போது அழைக்கிருேமே அந்தப் பிரதேசத்தில், மிகப் பழமையான காலத்தில், இலியம் என்ற நகரம் ஒன்றுஇருந்ததாக, ஹோமருடைய காவியங்கள் கூறுகின்றன. காவியங்களிலே உள்ள வரலாற்றின்படி இந்த நகரம், துரோயன்††† என்ற இனத்தாரின் தலைநகராக இருந்தது. இந்நகரை, கிரேக்க அரசர் பலர் ஒன்று சேர்ந்து, படை திரட்டி, கடல் கடந்து வந்து, முற்றுகை இட்டார்கள். பத்து ஆண்டுகள் நடைபெற்ற இம்முற்றுகையைப் பற்றியும், கடைசியில் துரோயன் நகரான துரோய்† என்ற இலியம், தீயில்

†The Iliad ††The Odyssey †††Trojan.

அழிந்ததைப் பற்றியும், ஹோமருடைய இலியது என்ற காவியம் பேசுகிறது.

இந்த முற்றுகையில் பங்கு கொண்ட கிரேக்க அரசர்களில் ஒருவன் ஓதஸூஸ்†† என்பவன். அவன் இதாகா††† என்ற சிறு தீவின் அரசன், போர்த் திறமை மிக்கவன், அஞ்சா நெஞ்சன், ஒப்பற்ற வில்லாளி. எல்லாவற்றிற்கும் மேலாக, கூர்மையான அறிவு படைத்தவன். அவனுடைய சூழ்ச்சியின் மூலமாகத்தான் இலியம் தீக்கிரையாயிற்று. இலிய நகர வீழ்ச்சிக்குப் பிறகு, கப்பல் ஏறி, போரில் எஞ்சிய தனது வீரர்களோடு, தாய்நாடான இதாகா தீவை நோக்கி, ஓதஸூஸ் புறப்பட்டான். ஆனால் ஊர் போய்ச் சேர்வதற்குள் பத்து ஆண்டுகள் கழிந்தன. இந்தநீண்ட காலத்தில், நடுக்கடலில், திசை கெடு மாறி, ஓதஸூஸ் அலைந்தான், அலைந்தான், அப்படி அலைந்தான். எத்தனையோ புயல்கள், பயங்கரங்கள், விசித்திரங்கள், பரிபவங்கள், சோதனைகள்,- இவற்றை யெல்லாம் சமாளித்தான். கடைசியில், ஒரு வழியாக ஏதோ ஊர் போய்ச் சேர்ந்தான். அங்கேயும், என்ன, அமைதி காத்திருந்ததா? இல்லை. அரசையும், தன் மனைவியையுங்கூட, பலரோடு போரிட்டு, மீட்க வேண்டி இருந்தது. இந்த வீரப் பிரயாணத்தையும், அதன் முடிவையுமே ஒதஸ்ஸே என்ற காவியம் சித்திரிக்கிறது. இராமனுடைய வீரக் கதையைத் தரும் காவியத்தை இராமாயணம் என்று அழைக்கிறோம் அல்லவா, அது போலவே ஓதஸூஸ் என்ற வீரன் சரிதையைக் கூறும் கிரேக்க காவியம் ஒதஸ்ஸே ஆயிற்று.

†Troy ††Odysseus †††Ithaca

நடுக்கடலில் ஓதஸூஸ் அலைக்கப்பட்ட போது, விசித்திரமான நாடு ஒன்றில், அவனுடைய கப்பல்கள் ஒதுங்கின. இதைப் பற்றி ஹோமர் சொல்வதைக் கேட்போம். ஓதஸூஸ் என்ற காவிய நாயகனே சொல்வதாக அமைந்திருக்கிறது இந்த வரலாறு:

'விம்மிப் பல்கிப் புழுத்த பள்ளக் கடலின்மீது, நாசகாரப் புயல்கள் எங்களை அடித்துச் சென்றன. போனோம், போனோம். பத்தாம் நாள் கப்பல்கள் கரை தொட்டன. லோடஸ்* என்ற ஒருவகை மலர்ப் பூண்டை உணவாகக் கொள்ளும் மக்கள் வாழும் நாடு அது. அந்த நாட்டிலே கால் வைத்தோம், கரையிலே இறங்கி, தண்ணீர் கொண்டோம். கப்பல்களின் அருகிலேயே அமர்ந்து, பகல் உணவு அருந்தினோம்.

* Lotos. இது நம்முடைய தாமரையைக் குறிக்கும் Lotus அன்று. ஹோமர் குறிப்பிடும் லோடஸ் (Lotos) அவனுடைய கற்பனையில் உதித்து, காவிய உலகில் மட்டும் பயிராகும் ஒரு பூண்டு. அதன் மலரையும், கனியையும் தின்றால், சோம்பலும், தூக்கமும், மயக்க மின்மையும் உண்டாகுமாம். துயிற் செருந்தி என்று தமிழில் அதை அழைக்கலாம்.



பிறகு, எங்களில் மூவரைப் பொறுக்கி, அந்த நாட்டு மக்கள் எப்படிப்பட்டவர் என்பதைப் பார்த்துவர அனுப்பினேன். போனார்கள். போய், அம் மக்களோடு உறவாடினார்கள். அவர்கள் தந்த லோடஸ் கனியை (துயிற் கனியை) அருந்தினார்கள். தேன்போல் இனித்த அந்தக் கனியைத் தின்றதும், திரும்பி வரவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு அற்றுப் போயிற்று. துயிற் கனி உண்ணும் மக்களோடேயே இருந்து காலத்தைக் கழித்து விடலாம் என்று அவர்களுக்குத் தோன்றியது. ஊருக்குத் திரும்பும் எண்ணம் அறவே அழிந்தது. ஆகவே, நானே சென்று, போனவர்களை, அவர்கள் விருப்பத்துக்கு மாறாக இழுத்து வந்தேன். அழுது கொண்டே வந்தார்கள். என்னோடு வர அவர்களுக்கு மனமே இல்லை. கப்பலுக்கு இழுத்துச் சென்று, அவர்களைக் கட்டிப் போட்டேன். எனக்கு பயம், என் அன்புக்கு உரிய வீரர் மற்றவர்களும், லோடஸ் என்ற துயிற்கனியைத் தின்று, இந்தக் கதிக்கு ஆளாகி விட்டால்?.... ஆகவே, எல்லோரையும் உடனே கப்பல் ஏறும்படி கட்டளை இட்டேன். ஏறினார்கள். 'புறப்படுங்கள்' என்றேன். வரிசை வரிசையாய் அமர்ந்தார்கள், கப்பலின் இருமருங்கும் உள்ள ஆசனங்களில். துடுப்புக்கள் ஓங்கி, சாம்பல் வண்ணக் கடல் வெள்ளத்தைத் தடிந்தன. கப்பல்கள் நகர்ந்தன. வேதனை நிறைந்த உள்ளத்தோடு நாங்கள் போகலானோம்.'

ஒதஸ்ஸே என்ற காவியத்தில் ஹோமர் தரும் செய்தி * இவ்வளவுதான். ஹோமரை மகாகவி என்று சொல்கிறார்களே, இந்தச் சிறு வரலாற்றில் என்ன கவிதை இருக்கிறது என்று கேட்கலாம். ஹோமரைப் பற்றி விரிவாகப் பேசுவதற்கு இங்கே இடமில்லை. நாம் வேறொரு கவிஞனுடைய உலகத்துக்குப் போகவே லோடஸ் நாடு என்ற துயில் நாட்டைப்பற்றி, ஹோமர் தரும் இந்தக் குறிப்பை நினைவுபடுத்திக் கொண்டோம். ஹோமருடைய மகா காவியத்தில் நாம் இங்கே பார்த்தது ஒரு சிறு துணுக்குத்தான். ஹோமருடைய பெருமை முழுவதையும் இங்கே கண்டு விட முடியாது. இருந்தாலும் இங்கேயும் கவிதை இல்லாமல் இல்லை.

'விம்மிப் பல்கிப் புழுத்த பள்ளக் கடல்' என்று ஹோமர் பேசுவதைப் பாருங்கள். கடல் விம்முகிறது. போகப் போகப் பல்குகிறது. அதாவது பெருகிப் பெருகி, கடக்க முடியாது என்ற மலைப்பைத் தரும் முடிவிலா நெடும் பாழ் ஆகக் காட்சி அளிக்கிறது. அதன் உள்ளேதான் எத்தனை பயங்கரங்கள் எண்ணிறந்தனவாய்ப் பல்குகின்றன. செல்லச் செல்ல விரிந்து, 'என்னையும் தாண்ட முடியுமோ' என்று விம்முகின்ற கடலின் கொடுமையும், நீரில் சுழலும் பிரும்மாண்டமான மீன்கள். (அவை ஒன்றா, இரண்டா, கோடி கோடியாக அல்லவா கடல் வயிற்றில் புழுத்து விட்டன!) விளைக்கும் அச்சமும், 'விம்மிப் பல்கிப் புழுத்த பள்ளம்' என்ற சொற்களில் கிடைக்கவில்லையா? 'புழுத்த' என் பதிலேதான் எவ்வளவு அருவருப்பு!

'கப்பல்களின் அருகிலேயே அமர்ந்து பகல் உணவு அருந்தினோம்' என்கிறான் ஹோமருடைய ஒதஸேஸ். ஏன் கப்பல்களின் அருகிலேயே அமர்ந்தார்கள்? தெரியவில்லையா? கடலிலே எறிபட்டு எறிபட்டு, ஏதாவது கரையைத் தொடுவோமா என்று ஏங்கினார்கள். இப்போது கரை சேர்ந்ததும், கப்பல்களோடு ஒட்டிக் கொள்ளுகிறார்கள். புதிய நாடு, இனம் தெரியாத தேசம், எந்தச் சோதனை, எந்த அபாயம் எங்கிருந்து வருமோ என்று அஞ்சுகிறார்கள். எவ்வளவோ குரூரமாக இருந்த கடல்கூட, உருத் தெரியாத பயங்கரப் புதிரான அந்த லோட்டஸ் நாட்டை எண்ணும் போது, ஏதோ அடைக்கல மனையாகத் தோன்றுகிறது. 'கப்பல் அருகிலேயே அமர்ந்து' என்ற சிறு செய்தியிலேதான் இந்தக் கிரேக்கக் கவிஞன் எவ்வளவு பொருளை அடக்கி விட்டான்! அடித்துத் தள்ளுகின்ற தாயின் காலைக் கட்டிக் கொண்டு, இருட்டில் போக மாட்டேன் என்று அழுகின்ற குழந்தையின் மனோபாவத்தை இச்சொற்கள் தருகின்றன.

ஒன்று கவனித்தீர்களா? கிரேக்க வீரர்கள் துயில் நாட்டை விட்டு, கடலில் ஏறும்போது, கடல் அலைகள் நீலமாய் இல்லை. வெயில் அவற்றிலே மின்னிச் சௌந்தர்ய சோபையைப் படைக்கவில்லை. பிறகு? சாம்பல் வண்ணம் ஏற்று, அவற்றைக் கடக்க முயலும் வீரர்களின் உள்ளத்தைப் போல, ஒளி மழுங்கி, சூனியமாய்ப் புரளுகின்றன. சாம்பல் வண்ண அலைகளில், சோர்ந்த வீரர்களின் துடுப்புக்கள் மோதுகின்றன. உற்சாகம் இல்லாமல் இயந்திரம் போல அவர்கள் புறப்படுகிறார்கள். தரை ஏமாற்றி விட்டது. துயில் நாடு அவர்கள் உள்ளத்தையே குலைக்க முற்பட்டது! கடலோ சாம்பல் நிற அலைகளை உருட்டி அவர்கள் உடலைச் சதைக்க விம்முகிறது. 'சாம்பல் வண்ணக் கடல்' என்ற இந்த ஒரு குறிப்பு போதுமே, ஹோமரின் கவிதைப் பெருமைக்குச் சாட்சி சொல்ல. **(தொடரும்)**

* The Odyssey - Book IX

கதவு



ஒரு தேசத்தில் ஒரு ராஜா இருந்தான். அவன் தன் மந்திரியிடம் "மூலம் எது?" என்று கேட்டான். மந்திரி யோசனை பண்ணிப் பண்ணிப் பார்த்தான். ராஜா எதனுடைய மூலத்தை விசாரணை செய்கிறான் என்பதே மந்திரியின் புத்திக்குப் புலப்படவில்லை. அந்த ராஜாவிடம் திரும்ப விளக்கச் சொல்லிக் கேட்கக் கூடாது. அவனிடம் குறிப்பறிந்து வேலை செய்ய வேண்டும்.

ஆதலால் மந்திரி சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, "நாளை வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு போனான்.

அன்று மந்திரி தன் வீட்டுக்கு வந்து, இரவில் போஜனம் செய்யாமல் உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருந்தான். அவனுடைய பத்தினி ஒரு பொற்கிண்ணத்தில் பாலும் சோறும் பிசைந்து கொண்டு வந்தாள். இரண்டு கொய்யாப் பழங்களும் கொண்டு வந்தாள். அவன் அவற்றைக் கவனியாமல் யோசனை செய்துகொண்டிருந்தான்.

"என்ன யோசனை செய்கிறீர்?" என்று மந்திரியின் பத்தினி கேட்டாள்.

"ராஜா ஒரு கேள்வி கேட்டான். எனக்கு ஜவாப் தெரியவில்லை. திகைத்துக் கொண்டிருக்கிறேன்."

மந்திரியின் பத்தினி "அது என்ன கேள்வி?" என்று வினவினாள்.

'மூலம் எது?' என்று மந்திரி ராஜாவின் வினாவைத் திருப்பிச் சொன்னான்.

மகாகவி பாரதியார்

சிவா

மந்திரியின் மனைவி "எதன் மூலம்?" என்று கேட்டாள். "அதை ராஜா குறிப்பிடவில்லை" என்றான் மந்திரி.

அப்பொழுது மந்திரியின் பத்தினி "உலகத்துக்கு மூலம் ஓம்" என்றாள்.

சரி யென்று சொல்லி அவள் கொண்டு வந்த உணவை உண்டு மகிழ்வெய்தி அன்றிரவு நித்திரை செய்தெழுந்து மறுநாள் ராஜனிடத்தில் போய் உலகத்துக்கு மூலம் ஓம் என்று சொன்னான்.

"ஓம் என்பது யாது?" என்று ராஜா கேட்டான். அது பரப்ரஹ்மஸ்வரூபத்துக்குப் பெயர் என்று மந்திரி சொன்னான்.

"சரி! ஓம் என்ற மந்திரத்தை முதலாவது கண்டு பிடித்தது யார்?" என்று ராஜா கேட்டான்.

மந்திரி, "இதென்னடா பயித்தியம் கொண்டவன் கேட்கிற கேள்விபோல் இருக்கிறதேயன்றிச் சமர்த்தனுடைய கேள்வியாகத் தோன்றவில்லை. ஓம் என்ற மந்திரத்தை ஆரம்பத்தில் எவன் கண்டு பிடித்தானோ! எவன் கண்டான்?



இந்த மூடன் நம்மைக் கேட்கிறானே! நாம் எப்படி விடை சொல்லக் கூடும்?" என்று மனசில் சஞ்சலப்பட்டு விட்டுக் கடைசியாக முன்போலவே "நாளை வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான்.

வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் ராஜனுடைய கேள்வியைச் சொல்லி, "இந்தச் சங்கடத்துக்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

அப்போது மந்திரியின் மனைவி "நம்முடைய நகரத்துக்கு மேற்கே இரண்டு காதம் தூரத்தில் ஒரு மலை இருக்கிறது. அந்த மலையில் ஒரு குகையில் மௌன ஸ்வாமிகள் என்பதாக ஒரு பரதேசி இருக்கிறார். அவரிடம் போய்க் கேட்டால் இதற்கு விடை எழுதிக் காட்டுவார்" என்று சொன்னாள்.

மறுநாள் பொழுது விடிந்தவுடனே, மந்திரி பல்லக்கில் ஏறி மலைக்குப் போய் மேற்படி மௌனஸ்வாமியிடம் "ஓம் என்ற மந்திரத்தை ஆரம்பத்தில் கண்டு பிடித்தது யார்?" என்று கேட்டான்.

அவர் பின்வருமாறு கையினால் மணல் மேல் எழுதிக் காட்டினார்.

இந்த மந்திரம் ஆதியில் பராசக்தியால் பரமசிவனுக்கு உபதேசம் செய்யப்பட்டது. அதன் குறிப்பே விநாயகர். செவி பெரியதாகவும், வாய் மூடியும் விநாயக முத்திரை தரித்து வீடேறி எவன் சக்தி உபாசனை செய்கிறானோ அவனுக்கு மூலாதாரத்தில் ஓம்கார மந்திரம் தெரியும்படி விநாயகர் கருணை செய்வார். இது அநாதியான மந்திரம். ஆனால் பூமண்டலத்தில் இது முதலாவது அகஸ்தியருடைய புத்திக்குப் பிரகாசப்பட்டது. இங்ஙனம் மௌனஸ்வாமி கையால் எழுதிக் காட்டியதை மந்திரி ஓர் ஏட்டில் எழுதுவித்துக் கொண்டு ராஜனிடம் கொடுத்தான்.

ராஜா: அந்த மௌனஸ்வாமி யிருக்கும் இடத்துக்கு நான் நேரில் போய் அவரிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று சொல்லி மந்திரியையும் அழைத்துக் கொண்டு இருவருமாக மௌனஸ்வாமி இருக்கும் குகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ராஜா மௌனஸ்வாமியிடம் கேட்டான், மூலம் எது என்று! அப்போது மந்திரியை நோக்கி மௌனஸ்வாமி கண்ணைக் காட்டினார்.

மந்திரி "உலகத்துக்கும் ஓம்காரமே வேர்" என்றான்.

அதற்கு ராஜா—"உம்மைக் கேட்கவில்லை, நீர் சும்மா இரும். நான் மௌனஸ்வாமியிடம் இன்னும் தெளிவான மறுமொழியை எதிர்பார்க்கிறேன்" என்றான். அப்போது மௌனஸ்வாமி எழுதிக் காட்டுகிறார்:—"ஓம்காரமே சிருஷ்டியின் காரணம். ஓம்காரமாவது காதல்—ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தொடர்பு. அதனால் படைப்புண்டாகிறது. அந்தக் காதலைச் சாமான்ய மனுஷ வியாபாரமாகக் கருதி நடப்போர் மிருகங்கள். தேவ வியாபாரமாக அதாவது ஆத்ம சம்பந்தமாக அதாவது ஸதியாகிய பத்தினியைச் சக்தியாகவும் தானேயாகவும் எண்ணி நடப்போர் தேவர். இந்த அறிவு ஞானம் அன்பைத் தவிர வேறு ஞானம் கிடையாது. ஏசுநாதர் அன்பின் அவதாரமாக வந்தவர். அவர் சொன்னார், நானே கதவு என்று. அதாவது அன்புதான் கதவு. அதைத் திறந்தால் விடுதலையாகிய மாளிகைக்குள்ளே பிரவேசிக்கலாம்" என்று மேற்படி மௌனஸ்வாமி எழுதிக் காட்டினார்.

இன்பத்தை அடைய வேண்டுமானால் அதற்குத் தானாகிய கதவை அகலத் திறந்து அன்பு வடிவமாக நிற்பதே உபாயம் என்பது இந்தக் கதையின் தாத்பர்யம். பராசக்தி துணை.

பாரதியார் இருந்த காலத்திலேயே வெளியான "கதாமாலிகா" என்ற நூலில் வெளியான கதை. திரு ரா. அ. பத்மநாபன் உதவியது. இதுவரை பாரதி நூல் தொகுதிகளில் வெளிவராதது.

அநுமகரத்வஜா

ஷட்குண மகாத்வஜா
சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத் திஞல் மிகவும் சிறிய அளவில் ஆஞல் பிரமாத சக்தி வாய்ந்த தாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத் திரை வடிவம் ஆக்கப்பட்டிருக் கிறது. உபயோகிப்பதற்கு மிக வும் சுலபம். மற்ற மகரத்வஜங் களை விடச் சக்தி வாய்ந்தது.

O★O

14 மாத்திரைகள்
ஒரு புட்டியில் இருக்கின்றன
(7 முழு அளவுகள்)

O★O

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

ஆர். எல். கௌடர் & கம்பெனி
59, பந்தர் தெரு : சென்னை-1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

சத்ய நாராயண பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

மதுரை
தோற்றம்: 1943

*

கிளைகள்: கோயமுத்தூர், சேலம் புதுக்கோட்டை, ராயவரம், ரேஞர் கண்டனூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

தலைவர்:
கருமுத்து தியாகராசன்


எமது கிளை நிலையங்கள் கீழ்க் கண்ட தேதிகளில் திறக்கப்படும்

அறந்தாங்கி ... 9-9-57
பொன்னமராவதி ...12-9-57
தேவகோட்டை ...16-9-57

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி

நிச்சயமாக வாங்க வேண்டியது!

ரீஸா ரேடியோ



A W P 5
'பாபுலர்' மாடல்
நிகர விலை ரூ. 225/-

ஏஸி., ஏஸி./டிஸி., மற்றும் பாட்டரியில் இயங்கும். 5,6, வால்வ் மாடல்களும் உண்டு
12 மாத உத்தரவாதம்

ரீஸா கம்பெனி
20, ஹால்ஸ் ரோடு
கீழ்ப்பாக்கம் :: சென்னை-10
போன்: 61515 தந்தி: ASSEMBLER


இப்பொழுது வெற்றிகர-
மாக ஓடிக்கொண்டிருக்கிறது
சென்னை
மற்றும் தென்னிடெங்கும்
நரசு ஸ்டுடியோஸ்
இரு சகோதரிகள்
டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா
BHARAT
STUDIO

வர்த்தகம் செழிக்க வேண்டும்!

எஸ்.வி.எஸ்.

சுபிட்சக் கடவுளான திருமால் ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரர்! தமக்கு ஏகபத்தினி விரதம் சரிப்பட்டு வராது என்று கண்டு கொண்டார். அவர் பூதேவியை மட்டும் மணந்து கொள்ளாமல், ஸ்ரீ தேவியையும் மணந்து கொண்டார். இரண்டு பேருடைய அன்பையும் பெற்றார்!

அதேபோல் ஒரு நாடு சுபிட்சமான நாடாக விளங்க வேண்டும் என்றால் அந்த நாடு பூதேவி ஸ்ரீதேவி ஆகிய இருவருடைய பேர் அருளையும் கண்டிப்பாய்ப் பெற்றிருக்க வேண்டும்.

பூதேவி என்றால் நிலமகளைத்தான் குறிக்கும். ஒரு நாட்டில் விவசாயம் சிறந்து விளங்கினால் அந்நாடு பூதேவியின் கருணையைப் பெற்றிருக்கிறது என்று சொல்வார்கள்.

அதேபோல் ஒரு நாட்டில் வர்த்தகம் சிறந்து விளங்கினால் அந்நாட்டில் ஸ்ரீதேவி தன்னுடைய அருளைச் சுரந்திருக்கிறாள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

இந்த இரு தெய்வங்களின் பூரண அருள் பெற்றுவிட்ட தேசத்தில் சுபிட்சக் கடவுள் தானாகவே வந்து குடிபுகுந்து விடுவார்.

*　　　*　　　*

பாரத தேசம் சுதந்திரம் பெற்றதிலிருந்து சுபிட்சக் கடவுளை இங்கு குடிபுகுவதற்குப் பெரும் முயற்சிகள் எடுத்து வருகிறார்கள்; திட்டங்கள் வகுத்து வேலை செய்து வருகிறார்கள்! நமது சர்க்கார் எல்லாத் திட்டங்களையும் பூரணமாக நிறைவேற்றி ஒரு கை பார்த்து விடுவது என்றுதான் நிர்மானித்திருக்கிறார்கள்.

சர்க்காரின் அதிர்ஷ்டம் அவர்களுக்கு திரு கே. ரங்கசாமியைப் போன்ற ஒரு சில அசகாய சூரர்கள் கிடைத்திருக்கிறார்கள். திரு கே. ரங்கசாமி அவர்கள் வல்லாள கண்டர். அவர் சுபிட்சக் கடவுளைக் கொண்டு வரக் குறுக்கு வழி ஒன்று காண முயன்றிருக்கிறார். மெள்ள ஸ்ரீதேவியை அழைத்து வந்து விட்டால் தானாகவே திருமாலும் - சுபிட்சக் கடவுளும் - வந்து சேருகிறார் என்கிறார். அவர் ரொம்பவும் உலக அனுபவம் பெற்றவர். 'பெண்டாட்டி பின்னால் எந்தப் புருஷனும் போய்த்தானே யாக வேண்டும்' என்கிறார்.

அடேடே! யார் இந்த ரங்கசாமி என்பதைச் சொல்ல மறந்து விட்டேனே!

திரு கே. ரங்கசாமி அவர்கள், சென்னையில் ஏற்றுமதி இறக்குமதி கண்ட்ரோல் காரியாலயத்தில் பிரதம கண்ட்ரோலராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் சமீபத்தில் ஒரு காரியம் செய்தார். சென்னை வர்த்தகப் பிரமுகர்களை யெல்லாம் திரட்டி, "ஏற்றுமதி அபிவிருத்தி செய்யும் குழு" ஒன்றை அமைத்தார். இந்தக் குழுவை ஆரம்பித்து வைக்க மத்திய சர்க்கார் வர்த்தக மந்திரியை வரவழைத்தார். வர்த்தக மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், சென்னை ராஜாஜி ஹாலில் சென்ற ஆகஸ்ட் 23-ம் தேதியன்று மாலை இந்தக் குழுவைத் துவக்கி வைத்தார். ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சென்னை பிரபல வர்த்தகர்கள் எல்லாரும் இந்த வைபவத்துக்கு வந்திருந்தனர்.

இந்த விழாவில் திரு ரங்கசாமி அவர்கள், இக் குழுவின் நோக்கங்களைப் பற்றி விவரமாகவும் வெகு அழகாகவும் விளக்கினார்.

நான் அத்துடன் திருப்தியடையாமல், "ஐயா! இக்குழு அமைப்பதற்கு இப்பொழுது என்ன அவசரம் வந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன காரணங்களும் விளக்கங்களும் மிக ரஸமாக இருந்தன.

*　　　*　　　*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மூன்று பெரும் எஃகு இயந்திரச் சாலைகள் ஏற்படுத்த நமது சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த இயந்திரச் சாலைகளுக்கு வேண்டிய இயந்திரங்கள் பிரிட்டனிலிருந்தும் ருஷியாவிலிருந்தும் வருகின்றன. அதன் காரணமாக மேனாட்டிலிருந்த நமது அந்நிய மூலதனம் பெரும் அளவு குறைந்து விட்டது. 'ஸ்டர்லிங் நிதி' குறைந்து விட்டது! மீண்டும் அந்த ஸ்டர்லிங் நிதியை எப்படிச் சேமிப்பது என்ற கவலை சர்க்காருக்கும் பொருளாதார நிபுணர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது!

இதைச் சமாளிக்க ஒரு ஒரே வழிதான் உண்டு; நமது வர்த்தகம் மேல்நாடுகளில் பெருகினால் ஸ்டர்லிங்நிதி சேமிப்பு வளரும். நமது பொருளாதார நெருக்கடியும் தீரும்.

நமது நாட்டிலிருந்து மேல்நாடுகளுக்கு முக்கியமாக மூலப்பொருள்களையே இது காறும் ஏற்றுமதி செய்து வருகிறோம். இனி நமது வர்த்தகர்கள், அந்த மூலப் பொருள்களைக் கொண்டு செய்யக்கூடிய சாமான்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவேண்டும். அப்போதுதான் நமது ஸ்டர்லிங்நிதிபெருகும்.

உதாரணமாக சென்னையிலிருந்து ஏராளமாகத் தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தத் தோல் பிரிட்டனுக்குப் போகிறது. உலக மார்க்கெட்டில் நமது தோல் தரம் வாய்ந்த தோல் என்ற நல்ல பெயர் இருப்பதால் ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வர்த்தகர்கள் பிரிட்டனுக்கு வந்து நமது தோலை வாங்கிச் செல்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நாட்டினரும் நமது தோல்களினால் செய்யப்படும் எந்தப் பொருள்களை விரும்புகின்றனர் என்று கண்டு கொண்டு, நாமே அப்பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தால் நமது வர்த்தகம் பெருகும்; ஸ்டர்லிங் நிதியும் வளரும்!

ருஷ்யா நம்மிடமிருந்து ஏராளமான பூட்ஸுகள் வாங்கியுள்ளது. ஆப்கானிஸ்தானமும் வாங்கியுள்ளது. தோலினால், செய்யப்படும் பைகள், பெட்டிகள், செருப்புகள், பூட்ஸுகள் ஆகிய எல்லாவற்றுக்குமே மேல் நாட்டில் நல்ல கிராக்கியிருக்கிறது.



சென்ற ஆகஸ்டு 23ம் தேதியன்று மத்திய சர்க்கார் வர்த்தக மந்திரி திரு மொரார்ஜி தேசாய், ''ஏற்றுமதி அபிவிருத்திக் குழு''வைத் துவக்கி வைத்தார். இந்த வைபவத்துக்குச் சென்னை வர்த்தகப் [பிரமுகர்கள் ஏராளமான பேர்கள் விஜயம் செய்தனர். திரு மொரார்ஜி தேசாய் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்தான் திரு கே. ரங்கசாமி அவர்கள்.

ஆகையினால் தோல் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், மேற்கூறிய சாமான்களையே நமது நாட்டிலேயே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் திரு கே. ரங்கசாமி.

அன்று திரு கே. ரங்கசாமி அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது நமது வர்த்தகர்களிடையேயுள்ள ஒரு பெரும் குறையைச் சொன்னார். நல்ல சாமான்களை உற்பத்தி செய்து விட்டு, அதை மிக மோசமான முறையில் கண்ணுக்குக் கவர்ச்சியில்லாத முறையில் 'பாக்' செய்து அனுப்புகிறார்கள். இதனால் நமது வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்று கூறினார்.

தமிழ் நாட்டுக் கைத்தறித் துணிகளுக்குக் கிழக்குலக நாடுகளில் நல்ல கிராக்கியிருக்கிறது. ஆனால் ஜப்பான், தனது துணிகளை மிகக்கவர்ச்சிகரமான முறையில் 'பாக்'செய்து அனுப்புவதால் நமது மார்க்கெட் குறைந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது! நமது துணி வியாபாரத்துக்கு ஜப்பானின் போட்டி கடுமையாக இருக்கிறது! இதை ஈடு கொடுத்தாக வேண்டிய பொறுப்பு நமது வர்த்தகர்களுடையது என்று எச்சரித்திருக்கிறார்.

முந்திரி விஷயத்தில் ஒரு எச்சரிக்கை செய்தார். அமெரிக்கர்கள், ஒரு டின் நிறையவுள்ள முந்திரிப் பருப்புகளில், ஒரு பருப்பில் சிறு பூச்சியிருந்தாலும் போதும், அத்தனையையும் தூர எறிந்து விடுவார்கள். அவர்களுக்கு அவ்வளவு பயம். ஆகவே, முந்திரியை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக்கிறது.

இவ்விதம் அன்று திரு ரங்கசாமி அவர்கள் நமது வர்த்தகத்திலுள்ள குறைகள் பற்றியும், இன்னும் எந்த எந்தத் துறையில் வர்த்தகத்தைப் பெருக்கலாம், எதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றியும் விரிவாகச் சொன்னார். சர்க்காரும் நமது வர்த்தகர்களுக்குச் சலுகைகள் அளிக்கத் தயாராக இருக்கிறார்கள். நாம் மூலப்பொருள்களை அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, அழகான பொருள்களாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தால், அப்படி இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருள்கள் மீதுள்ள இறக்குமதி வரி குறைக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திரு ரங்கசாமி, நமது வர்த்தகர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்திருக்கிறார். அவர்களுக்கு உற்ற நண்பராக விளங்குகிறார். ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடு இலாக்காவில் நீண்ட நாட்களாக வேலை செய்வதாலும், அந்நிய தேச வர்த்தகத் தூதர்களுடன் சமீப காலத்தில் அவர் இலங்கையிலும், புதுடில்லியிலும் நெருங்கிப் பழகியிருப்பதாலும் நமது அந்நிய வர்த்தகம் பெருகுவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது என்று பரிபூரணமாக நம்புகிறார். அதனால் தான் சென்னை நகர வர்த்தகப் பிரமுகர்களுக்கு இந்தத் துறையில் ஊக்கமும் உற்சாகமும் அளிக்க ஒரு குழு அமைத்திருக்கிறார். மத்திய சர்க்கார் வர்த்தக மந்திரியை அழைத்து, அவர்களை உற்சாகப் படுத்தி இருக்கிறார்.

சமீபத்தில் வர்த்தக சமுதாயத்தினரிடையே '' அரும்பாடுபட்டு, சேமித்த பணத்தைப் பறித்துக் கொண்டு போகத்தான் சர்க்கார் இருக்கிறார்கள்'' என்ற ஒரு எண்ணம் நிலவி வருகிறது. இச்சமயத்தில், ''அப்படியில்லை, உற்சாகமாக வேலைசெய்யுங்கள். சர்க்காருடன் உங்களுக்காகப் பரிந்து பேச நான் தயாராய் இருக்கிறேன்!''என திரு ரங்கசாமி கூறுகிறார்.


வர்த்தகப் பிரமுகர்கள் திரு ரங்கசாமி அவர்களின் யோசனைகளைக் கேட்டுப் பயன் அடைவார்கள் என்று நம்புகிறேன்!

தென்னாட்டு வர்த்தகம் சிறப்பதாக. ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்ற நம் முன்னோர்களின் வாக்கை வர்த்தகப் பிரமுகர்கள் மெய்ப்பிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அண்மையி லிருப்பவரிடமிருந்து

ஜாம்ஷெட்பூர், ரௌர்கேலா இவைகளுக்கு, இடையே நெருங்கிய தொடர்பு அவசியமே. எல்லா எஃகு தொழிற் சாலைகளுள் ரௌர்கேலாவில் ஸ்தாபிக்கப்பட்டு வருவது, இந்தியாவின் முதல் எஃகு நகரமாகிய ஜாம்ஷெட்பூருக்கு மிக அருகில் இருக்கிறது.

இவ்வித நெருங்கிய தொடர்பு, தொழில் அனுபவத்தையும், உயரிய கருத்துக்களையும் உபயோகமான முறையில் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள வழி காட்டுகிறது.



இதுவும் அவசியமே. ஏனெனில் ஜாம்ஷெட்பூர் 50 வருட காலமாக எஃகு உற்பத்தி செய்து வருகிறது. ரௌர்கேலாவிற்காக எஞ்சினீர்களையும், தொழில் நிபுணர்களையும் பயில்வித்து உதவி புரிவதில் ஜாம்ஷெட்பூர் மிக சந்தோஷம் அடைகிறது. அப்படிப்பட்ட 150 பேர்கள் (வேலைக்குத் தேவையான முக்கிய அங்கத்தினர் முதல் தொழிலாளர் வரை) ஜாம்ஷெட்பூரில் இருக்கிறார்கள்.

ரௌர்கேலாவிற்கு நல்வாழ்த்துக்கள்

இவ்வித சிநேகத்தை பலப்படுத்தும் முறையில் ஜாம்ஷெட்பூரில் இருந்த பலரை ரௌர்கேலாவில் காணலாம். அவர்களுக்கும், அவர்களது சக தொழிலாளர்களுக்கும் ஜாம்ஷெட்பூரின் வாழ்த்துக்களும், அவசியம் உரித்தாகுக.

தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

TN 1500

பாவை விளக்கு

அத்தியாயம் 7

பொன்வயல்

நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, நதிச் சிறப்பு இவற்றைத் தொடக்கத்திலேயே கூறுவது நம்முடைய தமிழ் மரபு. இந்தக் காலத்தில் முழுவதும் அதை நாம் ஒட்டிப் போகவும் முடியாது; வெட்டிப் பேசவும் முடியாது. பொன்வயலைப் பற்றி ஒரு சில விவரங்களாவது தெரிந்திருப்பது நல்லது.

பொன்வயல் ஒரு இரண்டுங் கெட்டான் நகரம். கிராமத்தின் வசதிகள் கிடையாது; நகரத்தின் தொல்லைகள் உண்டு. முன்பு பெரிய கிராமமாக இருந்து இப்போது நெருக்கடி மிகுந்த பட்டணக் கரையாக மாறிக் கொண்டு வருகிறது. விவசாயமும் கைத்தறியுமாக இருந்த பழைய அமைதிக்குப் பதிலாக, இப்போது பஞ்சாலைச் சங்குகளின் ஊளையும், நெசவாலை குழாய்களின் கரிப்புகையும் ஊரை வளைத்துக் கொண்டிருக்கின்றன. அக்கம் பக்கத்துக் கிராமவாசிகள் அடித்துப் பிடித்துக் கொண்டு குடியேறியதால், அந்த ஊரில் பத்தடிக் குச்சுக்குப் பத்து ரூபாய் வாடகை. வாடகை கொடுக்க முடியாதவர்கள் தெருக் குடித்தனம் நடத்தினார்கள்.

நகரத்தின் சுகாதார வசதிகளை வெளியில் சொல்லாத வரையில் அது அந்த ஊர் நகரசபைக்குப் பெருமை.

பெரும்பாலான தெருக்களில் ஒதுங்குமிடம் கிடையாது. வெளியூர்க்காரர்கள், ஏழை எளியவர்கள், ஏன்? பொதுவாக அந்த நகரத்துப் பெருமக்களே 'வெளியில் தெருவில்' போக வேண்டுமென்றால் வெளியில் அல்லது தெருவில்தான் போகவேண்டும்! நகரசபையாரும் இதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யாமலில்லை. 'இங்கே அசுத்தம் செய்யாதே!' என்று நூற்றுக் கணக்கான பலகைகளில் எழுதி மாட்டியிருந்தார்கள். ஆனால் 'எங்கே அதைச் செய்வது?' என்ற கேள்வி இன்னும் அவர்களுக்கு உதயமாகவில்லை.

இப்போதைக்கு அதன் சிறப்பை இவ்வளவு சொன்னால் போதும்.

தணிகாசலம் ரயிலடியில் மாட்டு வண்டியைப் பிடித்து, சாமான்களை ஏற்றி, தானும் உட்கார்ந்து கொண்டான். தேவகியின் கடிதம் பாதி படித்த படி அவன் சட்டைப் பைக்குள் இருந்தது. அதைப் பிரித்து மறு பாதியையும் படித்து முடித்தான்:—

"தணிகாசலம்! எனக்கு நீ பேசிய பேச்சுக்களை எப்போது நினைத்தாலும் புல்லரிக்கும். மற்றவர்களால்சுலபமாக நம்பமுடியாத ஒரு காட்சியை நீபேசிக்கொண்டிருக்கும்போது நான்கண்டேன். நீயே அதை நம்புகிறாயோ, என்னவோ!

வானத்துக்கும் பூமிக்கும் உயர்ந்த மனிதனை நீ எனக்குத் தோற்றமளித்தாய். உன்னுடைய நெஞ்சின்மத்தியிலிருந்து ஒரு நெருப்புக் கீற்று புறப்பட்டுத் தாழைமடலைப் போல் ஒளியாடியது. மின் வெட்டும் அந்த நேரத்தில்



நீ என்னை நெருப்பில் குளிப்பாட்டி எடுத்துவிட்டாய். மறு பிறவி எடுக்கச் செய்து விட்டாய். ஏனோ எனக்கு அந்த நிமிஷத்தில் என் செத்துப்போன கணவனின் நினைவு வந்தது. அதற்குப் பிறகு திரும்பத் திரும்ப அது என் நினைவில் வந்து கொண்டே இருக்கிறது. இனி நான் எந்த ஒளியைப் பார்த்தாலும் அவரை நினைத்துக் கொள்வேன்.

நடந்ததைப் பற்றி நான் வெட்கப்படவோ, துக்கப்படவோ, சஞ்சலப்படவோ இல்லை. நீயும் நானும் அதை அப்படியே மறந்துவிட வேண்டும். அதற்காக என்னை நீ தாழ்வாக மதிக்க வேண்டாம். என்னிடமும் இனி பழைய சலனத்துக்கு இடமில்லை.

நான் உன்னுடைய தேவகி அக்காள். நீ என்னுடைய அன்புத் தம்பி. பழையபடி இங்கே வந்து நீ தொடர்ந்து படிக்க வேண்டும். அப்படிப் படிக்க வராவிட்டால் நான் மிகப் பெரிய குற்றம் செய்தவளாவேன். அறியாப் பிள்ளையின் வாழ்வில் அறியாத்தனத்தால் குறுக்கிட்டுக் கெடுத்தவளாவேன். கட்டாயம் நீ திரும்பி வா. உனக்கு நான் செய்யும் உதவிகளைத் தட்டாமல் ஏற்றுக் கொள். இந்த வருஷம் நானே சிவகாமி அண்ணியிடம் நேரில் பேசி, உனக்கு அவள் தொல்லை கொடுக்காமல் பார்த்துக் கொள்கிறேன். நீ என் குருநாதன்; என் தம்பி. கட்டாயம், கட்டாயம், கட்டாயம் வா.

உன் தேவகி அக்காள்

கடிதத்தை மடித்துப் பைக்குள் வைத்தான் தணிகாசலம். தன்னைப் பற்றித் தேவகி மிகவும் உயர்வாக எழுதியிருப்பதைக் கண்டவுடன் நெஞ்சுச் சுமை இறங்கி விட்டது.







அன்றைக்கு இரவில் நடந்த மற்றொரு சம்பவம் எவ்வளவு மோசமானது! அதை அவள் தெரிந்து கொண்டிருந்தால் இப்படி ஒரு கடிதம் எழுதுவாளா? தன்னை 'குரு நாதன் - வழிகாட்டி.' என்றெல்லாம் நம்பிக் கொண்டிருப்பாளா? இப்படிச் சலனம் நிறைந்த மனத்தை வைத்துக் கொண்டு இனி எப்படி அவள் முகத்தில் விழிப்பது? எப்படி அந்த வீட்டிலேயே அவளுக்குப் பக்கத்தில் மற்றொரு வருடம் இருந்து, எப்படிக் காலம் தள்ளுவது? வேண்டாம்; இனி அங்கு போகவே வேண்டாம்.

மேல் படிப்பு? இந்தத் தேர்வின் முடிவு வந்தவுடன் அதைப்பற்றி யோசித்து ஒரு முடிவு செய்து கொள்ளலாம்.

ரயில்வே ஸ்டேஷனை விட்டுக் கடைத் தெருவுக்குள் திரும்பியது மாட்டு வண்டி. அந்த ஊரையோ அதன் தெருக்களையோ வேடிக்கை பார்க்க அவனுக்குத் தோன்றவில்லை.

என்றைக்குமே பொன்வயல் வாழ்க்கையை அவன் வெறுத்து வந்தான். அந்த மண் அவனை மனத்தில் ஒட்டவில்லை. தகப்பனாரைக் கொண்டு பிறந்த பிள்ளை அவன். தாய் பிறந்த குடும்பத்துக்கும் தகப்பனார் பரம்பரைக்கும் எத்தனை வித்தியாசம்! புதுப்பட்டி கிராமத்தின் செல்வாக்கு மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர் தந்தை. இப்போது அங்கே செல்வமில்லை; ஆனல் செல்வாக்கு உண்டு. படிப்பு, உத்தியோகம், அதிகாரம், மிராசுத் தனம், சுயசிந்தனை - இவை தந்தையின் ரத்தத்தில் ஊறியவை. தாயோ படிப்பு வாசனையற்ற, உடல் உழைப்பால் முன்னுக்கு வந்த, அப்பாவிகளான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள். விதிவசத்தால் ஏற்பட்ட சம்பந்தம். கல்யாணம் செய்து கொண்ட பிறகு அவள் தந்தை தம் மனைவிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாராம். பின்னல், தையல், நாகரிகம் இவற்றுக்குப் பழக்கப்படுத்தினாராம்.

காளியம்மன் கோயில் தெருவில்தான் தணிகாசலத்தின் தாயார் வீடு. வண்டியிலிருந்து அந்தத் தெருவைக் கண்டவுடனேயே முகம் சுளித்தான் அவன்.

காளியம்மன் கோயில் தெரு அந்த நகரத்தின் கவனிப்பாரற்ற தெருக்களில் ஒன்று. காளிதேவியும் அதில் குடியிருந்தாள். அவள் மகிமை வாய்ந்த தெய்வமாக இருந்ததால்தான், இன்னும் அந்தத் தெரு மக்களை வாந்தி பேதி வந்து வாரிக் கொண்டு போகவில்லையே தவிர, அதற்கு வேறொரு காரணமும் இல்லை. சுகாதார இலாகா என்பது அந்தத் தெருவைப் பொறுத்தமட்டில் செத்துப் போய்விட்டது.



எதிரும் புதிருமாக, வரிசைக்கு முப்பது கூரை வீடுகள். திருஷ்டி பரிகாரம் போல் நாலைந்து ஓட்டு வில்லைகள் குறுக்கே தெரிந்தன. தெருவுக்கென்று தனிக் குப்பைத் தொட்டிகளோ, பத்து வீடுகளுக்கு ஒரு தண்ணீர்க் குழாயோ கிடையாது. முதல் நாள் முதல் வீட்டுக்காரி தன் வாசல் குப்பையை அடுத்த வீட்டில் தள்ளினால், அடுத்த நாள் அடுத்த வீட்டுக்காரி அதையும் சேர்த்து முதல் வீட்டுக்கே தள்ளி விடுவாள். இது நடைமுறைச் சம்பிரதாயம். தெருவுக்கென்று உள்ள ஒரே குழாயில் பல அற்புதங்கள் நிகழ்வதுண்டு. மண் பானைகள் நொறுங்க, பித்தளைக் குடங்கள் நெளிய, செப்புத் தவலைகள் அப்பளமாகப் பல அற்புதங்கள் நிகழ்வதுண்டு. பல பெண்கள் அந்தக் தெருவின் சக்தி வாய்ந்த



தெய்வமான காளியுருக் கொண்டுவிடுவார்கள். அவ்வளவுதான். பாத்திரங்களுக்கு நேரும் கதி மனிதர்களுக்கு நேர்ந்தாலும் கேட்பார் இல்லை.

இந்தத் தெருவில்தான் தணிகாசலத்தின் குடும்பத்தைப் போன்ற சில வாயில்லாப் பூச்சிகளும் வாழ்ந்தன.

மாமாவின் ஓட்டு வில்லை வீட்டிலிருந்து ஒரு சிறுமி துள்ளிக் குதித்து அடுத்தாற்போலிருந்த தன் தாயாரின் கூரைக்குள் நுழைவதைக் கண்டான் தணிகாசலம். அவன் எதிர்பார்த்த பாவாடையும் தாவணியும் காற்றில் பின்னோக்கிப் பறந்தன. காதில் குலுங்கிய லோலாக்குகள் பளிச்சென்று மின்னி மறைந்தன. முதன் முதலில் தன்னைக் கண்டவள் கௌரி என்ற நினைவில் அவன் இலேசாகப் புன்னகை செய்தான்.

தாயார் கல்யாணி அம்மாள் தெருவுக்கு ஓடி வந்து தன் மகனைக் கண்களில் ஆனந்தம் பொங்க வரவேற்றாள். தங்கை லட்சுமி வண்டியிலிருந்து சாமான்களை இறக்கி வைத்தாள். திண்ணையில் போய் உட்கார்ந்த தணிகாசலம் கதவிடுக்கைக் கவனித்தான். அதற்குள் முகத்தை உள்ளே இழுத்துக்கொண்டாள் கௌரி. ‘பிறக்கும்போதே இந்தப் பெண்களுக்கு இப்படி வெட்கம் வந்து விடுகிறதே!’ என்று நினைத்தான் தணிகாசலம்.

தாயாரும் தங்கையும் அவனிடம் கேள்விமேல் கேள்வியை அடுக்கினார்கள். உடம்பைப் பார்த்து மெலிந்திருப்பதாய் உருகிப் போனாள் கல்யாணி. இத்தனைக்கும் அவன் தேவகியின் பராமரிப்பில் இரண்டு சுற்று பருத்துப் போயிருந்தான்! லட்சுமி தன் அண்ணனுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்தாள்.

கௌரி வெளியில் தலைகாட்டாமலே வீட்டுக்குள் ஒளிந்து கொண்டிருந்தாள். அவளைப் பிடித்து வெளியில் இழுத்து வந்து, ‘‘கௌரி! இதற்குள் எப்படி வளர்ந்திருக்கிறாள் பார், அண்ணா!’’ என்றாள். ‘‘திண்ணைக்கு வந்தால் உன்னை நன்றாய்ப் பார்க்க முடியாதென்று இந்தத் திருட்டுத்தனம் செய்கிறாள். இன்னமும் இவளை நீ பச்சைப் பிள்ளையென்று நினைத்துக் கொண்டிருக்காதே; ரொம்பப் பொல்லாதவள்!’’

கௌரி லட்சுமியின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு தன் வீட்டுக்கு ஓடி மறைந்தாள்.

அடுத்தாற்போல் அரைமணி நேரத்தில் அடுத்த தெருவுக்குப் போயிருந்த மங்களத்துப் பாட்டி தன் இரட்டை நாடிச் சரீரத்தைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தாள். கொடுத்த கடன் வராததால் யாரையோ திட்டிக்கொண்டு வந்தவள், பேரனைக் கண்டவுடன் பேச்சை நிறுத்திக்கொண்டு அவன் மேலேவிழுந்து உச்சி முகர்ந்தாள்.

‘‘வாடா ராஜா, வா! எப்போது நீ வந்தாய்? வந்திருப்பது கௌரிக்குத் தெரியுமோ? அவள் உன்னை வந்து பார்த்தாளோ? உன் மாமா வீட்டுக்குப் போய் வந்தாயோ?’’

பாட்டியின் கேள்வியைப் புரிந்து கொண்டு சிரித்தான் தணிகாசலம். ‘‘இல்லை. இனிமேல்தான் போக வேண்டும்’’ என்றான்.

‘‘போய்ப் பார்த்துவிட்டு வா. மாமா, அத்தை இரண்டுபேரிடம் மாத்திரம் முகம் கொடுத்துப் பேசு. அங்கே உன் அத்தையைப் பெற்ற இன்னொரு கிழம்

வந்திருக்கும். அந்த வம்புக்காரியிடம் வாய் கொடுக்காதே. பொல்லாத முகடு அந்த வீரம்மாள்!''

பக்கத்து வீட்டுக்குச் சென்று உள்ளே கிடந்த மரப்பலகையில் உட்கார்ந்தான் தணிகாசலம். மாமா தங்கசாமி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். ''அத்தான் வந்திருக்கிறார், அம்மா!'' என்ற கௌரியின் ரகசியமான குரல் சமையல் உள்ளிருந்து வெளி வந்தது. அத்தையும் அவனைப் பெற்றவளும் கூடத்துக்கு வந்தார்கள். மாமா அவனுடைய சாப்பாட்டு வசதிகளை விசாரித்தார். அத்தை ரங்கநாயகி படிப்பைக் கேட்டாள். அவனுடைய தாயார் அவனைப் பார்த்த பார்வை தணிகாசலத்துக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''ஏண்டாப்பா! யாரோ முன்பின் தெரியாதவன் வீட்டிலே போய்ச் சாப்பிடுகிறாயாமே? இப்படிப் பிறத்தியாருக்குப் பாரமாய் இருந்து நீ படிக்காவிட்டால் என்ன? தாயார் படுகிற கஷ்டத்தைப் பார்த்து, படிப்பை நிறுத்தி விட்டு, தறி நெசவுக்குப் போனாலாவது தினம் நாலணாக் கூலி கிடைக்குமே!''



முகட்டுவீரம்மாளின் குரலில் பொறாமை ஒலித்தது. அவளைக் கோபத்தோடு ஏறிட்டுப் பார்த்தான் தணிகாசலம். அவள் கழுத்தில் கிடந்த நான்கு வடம் தங்கச் சங்கிலி அவளை இப்படிப் பேசச் செய்கிறது என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டான். ஐந்து நிமிஷம் கூட அவன் அங்கு தங்கவில்லை.

இரவில் படுக்கப் போகும்போது இந்த இரண்டு பாட்டிகளையுமே ஒப்பிட்டுப் பார்த்தான். மங்களத்துப் பாட்டி இரட்டை நாடி என்றால், அவள் எலும்புக் கூடு. இந்த இரண்டு கிழங்களுமே தங்கள் தங்கள் மகன் வீட்டில் வசதியாக இருப்பதை விட்டு விட்டு எதற்காக மகள் வீட்டில் வந்து கஷ்டப்படுகின்றனர்? மங்களத்துப் பாட்டி தன் மருமகளை அதிகாரம் செய்வதை விட்டு விட்டு, மகள் வாழ வேண்டுமென்பதற்காகத் தெருத் தெருவாய் அலைந்து தையற்கூலி வசூலித்துவருகிறாள். வீரம்மாளோ பக்கத்துக் கிராமத்தில் பெரிய பண்ணையை மறந்து சந்தடி நிறைந்த நகரத்துக்கு வந்து விட்டாள். மங்களத்துப் பாட்டி தன் மகளுக்காகக் காலி செய்து வந்த இடத்தை அவள் நிரப்பி விட்டாள் போலும்!

உண்மையான காரணத்தைத் தணிகாசலம் தெரிந்து கொள்வதற்குச் சில நாட்கள் சென்றன.

மறுநாள் பொழுது விடிந்தது. சுறுசுறுப்பாகக் கையால் சுற்றும் யந்திரத்தைத் திண்ணையில் எடுத்து வைத்துக் கொண்டு துணி தைக்கத் தொடங்கினாள் கல்யாணி. நாற்பதாவது வயதைத் தாண்டி விட்டதால் கண்களில் கண்ணாடியை மாட்டிக்கொண்டு ஊசியில் நூலைக் கோத்தான். அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு லட்சுமி வந்திருந்த புதுத் துணிகளைக் குழந்தைச் சட்டைகளுக்கும், பெண்களின் ரவிக்கைகளுக்கும் ஏற்றபடி வெட்டிக் கொடுத்தாள். அக்கம் பக்கத்துப் பெண்கள் சிலர் வந்து புதுத்துணி கொடுப்பதும், தைத்த துணியை வாங்கிக் கொண்டு போவதுமாக இருந்தார்கள். தன்னுடைய தகப்பனார் காலத்தில் பொழுது போக்குக்காக அவர் கற்றுக் கொடுத்த தொழில் இப்போது வயிற்றைக் கழுவப் பயன்படுவதைத் தணிகாசலம் கண்டான். அவனுக்குத் தான் மட்டிலும் ஒருவேலையும் செய்யாமல் சும்மா இருக்கும்போது, தன்னுடைய வீட்டுப் பெண்கள் இப்படி உழைத்து வருவது என்னவோ போல் தோன்றியது.

ஒரு வாரத்தில் வீட்டு நிலவரங்கள் அவனுக்குத் தெளிவாகி விட்டன.

ஒரு பக்கம் வீட்டு வாடகையைக் கொண்டும். மறுபக்கம் தையல் கூலியைக் கொண்டும் அவர்கள் காலம் தள்ளினார்கள். மங்களத்துப் பாட்டிக்குச் சொந்தமான பக்கத்துக்கூரையில் மூன்று நெசவாளக் குடும்பங்கள் தலைக்குப் பத்து ரூபாய் வீதம் வாடகை கொடுத்து வாழ்ந்தன. முப்பது ரூபாய் வாடகை என்பது பெயருக்குத் தானே தவிர, ஒரு மாதமாவது அவர்கள் முழுத் தொகை கண்டதில்லை. பாதிப் பணம் வந்து சேரும்; மறுபாதியில் சரி பாதி காலும் அரைக்காலுமாகக் கிடைக்கும்; அடுத்த கால் பகுதி வரவே வராது. கடிந்து கேட்டால் கண்ணீர் வடிப்பார்கள்;

பஞ்சம் தெரியாமல் பெற்றெடுத்த குழந்தைகளைக் காட்டிச் சத்தியம் செய்வார்கள்; சமயங்களில் சொல்லிக் கொள்ளாமல் இரவோடு இரவாக வேறு வீடு பார்த்துக் கொண்டு கிளம்பினாலும் கிளம்பி விடுவார்கள்!

தையல் கூலி வந்து சேர்ந்த லட்சணமும் இதே கதைதான். தைத்த துணியைக் கேட்க வருகிறவள் காசு கொண்டு வரமாட்டாள். காசுக்குப் பதிலாகத் தைப்பதற்கு மற்றொரு துணி வந்து சேரும். இரண்டுக்கும் சேர்த்துக் கூலி கொடுப்பதாகப் பேச்சு வார்த்தை நடக்கும். பிறகு அந்தத் துணியையும் வாங்கிக்கொண்டு அடுத்த நாள் பணம் தருவதாகக் காளியம்மனைச் சாட்சிக்கு இழுப்பாள். அடுத்த நாளென்ன? அடுத்த மாதம்கூட அவளை அந்தத் தெருப்பக்கம் காண முடியாது. அவள் குடியிருக்கும் தெருவுக்கு மங்களத்துப் பாட்டி கடன் வசூலுக்குச் சென்றாலோ, கிடைப்பவை திட்டுக்களும், வசவுகளும், நன்றாகத் தைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்களும்தான். இந்தத் தொழிலையும் இந்த மனிதர்களையும் விட்டால் அவர்களுக்கு வேறு கதியும் இல்லை.

கடன் கொடுக்காத ஏழைகளை எண்ணித் தணிகாசலம் கோபப்படவில்லை. சீர் கெட்டுப்போன இந்தச் சமுதாய அமைப்பை எண்ணித் தனக்குள் பெருமூச்சு விட்டுக் கொண்டான். வாழ்க்கையின் அவல நிலையைக் கண்டு மனிதன் வெறுப்படைய வேண்டுமென்றால் அந்தத் தெருவில் மூன்று மாதம் குடியிருந்தால் போதும்.

ஒரு மாத வாழ்க்கையே தணிகாசலத்துக்குத் தாங்கவில்லை. அதற்குப் பழக்கப்பட்டுப் போக அவனுடைய மனம் மறுத்துப் புரட்சி செய்தது. நல்லவேளையாக அவனுடைய பள்ளி நண்பன் ஒருவன் அவன் பரீட்சையில் தேறி விட்ட செய்தியைக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

பரீட்சையில் தேறி, பி. ஏ.யில் பாதிக் கிணறு தாண்டியாயிற்று. இனிமேல் என்ன செய்வது?

பெட்டிக்கு அடியில் பத்திரமாக வைத்திருந்த தேவகியின் கடிதத்தையும் நண்பனின் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரையோரமாக நடந்தான். தன்னுடைய வாழ்க்கையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக அவன் நடந்தான்.

நாணற் புதர்களின் ஓரமாக நடந்து, நகரத்தின் சந்தடி கேட்காத தொலைவுக்குப் போய், எதிர்க்கரை மணற் சரிவில் உட்கார்ந்தான்.

அத்தியாயம் 8

திரும்பவும் தேவகி

காவேரி நதியில் கலக்கும் சிற்றாறு ஒன்று பொன்வயலை வளைத்துக் கொண்டு செல்கிறது. மழைக் காலங்களில் புது வெள்ளம், மற்றக் காலங்களில் தெளிவான தண்ணீர், கோடையில் மணல்மீது நெளியும் கானல் நீர் இவை அங்கு முறைப்படி ஓடக் காணலாம். இந்த வருஷத்துக் கோடை அவ்வளவு மோசமாக இல்லை. ஆற்றின் எதிர்க் கரையில் சின்னஞ்சிறு வாய்க்காலைப்போல் பத்தடி அகலத்துக்குத் தண்ணீர் பரவியிருந்தது.

தணிகாசலம் சாய்ந்துகொண்டிருந்த மணல் மேட்டுச் சரிவுக்குப் பின்னால் நெருக்கமான தென்னந் தோப்பு. இருபுறமும் அடர்த்தியான நாணற்புதர். எதிரில் நாணம் கொண்ட புதுப் பெண்ணைப் போல் சிற்றாறு அடக்கம் ஒடுக்கமாக ஓடிக் கொண்டிருந்தது. தணிகாசலம் தான் கொண்டு வந்திருந்த இரு கடிதங்களையும் பிரித்துப் படித்தான். படித்து விட்டு யோசனை செய்தான். அவனுடைய யோசனைக்கேற்ற அமைதியான சூழ்நிலையை மாலைச் சூரியனும் மழலை மொழிக் காற்றும் மருண்டோடும் குளிர் நீரும் ஏற்படுத்திக் கொடுத்தன.

அவனுடைய பள்ளித்தோழன் அடுத்த ஆண்டுப் படிப்புக்கு அவனைக் கண்ணபுரத்தில் எதிர்பார்ப்பதாக எழுதியிருந்தான். தேவகியோ, 'கட்டாயம், கட்டாயம், கட்டாயம் வா!' என்று கடிதத்தை முடித்திருந்தாள். அவனுக்கும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று அளவற்ற ஆசைதான். பி. ஏ. படிப்பைக்கூட முழுவதும் படிக்காமல் அரைகுறையாக நிறுத்துவதென்றால் கேட்டவர்கள் சிரிப்பார்கள்.

ஆனால், ஆசை, முயற்சி, மற்றவர்களின் பரிகாசம் இவற்றைச் சிறிதும் சட்டை செய்யாத ஏதோ ஒரு சக்தி வந்து அவன் படிப்புக்கு எதிராகக் குறுக்கிடுகிறதே?

இனிமேல் சுப்பையாவின் வீட்டில் தேவகி பக்கத்திலேயே இருந்துகொண்டு படிப்பைத் தொடர்ந்து நடத்துவதென்பது முடியாத காரியம். தேவகியின் உறுதியில் அவனுக்குச் சிறிதும் சந்

தேகம் இல்லை. ஆனால் அவனுடைய உறுதியில் அவனுக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை!

என்றுமில்லாதபடி தன்னுடைய மனத்தில் புதிய புதிய கற்பனைகளும், கனவுகளும், நினைவுகளும் தோன்றுவது அவனுக்கே வியப்பாக இருந்தது. அடிக்கடி அவன் தேவகியை நினைத்தான்; கௌரியை நினைத்தான்; இந்த இருவருமே இல்லாத ஓர் கற்பனைப் பெண்ணையும் நினைத்தான். இதுபோன்ற நினைவுகள் தன்னிடம் எழக்கூடாதென்பதற்காக அவன் செய்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியுற்றன.

பல பெரியார்கள் எழுதிய பல நூல்களைப் படித்துத் தனக்கென ஒரு வழி வகுத்துக் கொண்டிருந்தான் தணிகாசலம். 'தூய வாழ்க்கை' என்றால் பெண்களின் நினைவில்லாத வாழ்க்கை என்பது அவன் முடிவு. அதற்காக அவன் உடலை வருத்தி ஆசனங்கள் செய்து, உள்ளத்தை நிறுத்தி மூச்சைப் பிடித்து, இன்னும் நூதனமான பழக்க வழக்கங்களையெல்லாம் மேற்கொண்டிருந்தான். எல்லாவற்றையும் நொடிப் பொழுதில் பறக்கச் செய்து விட்டாளே, தேவகி!



தேவகியின் முகத்தை நேருக்கு நேர் பார்க்கும் போது தோன்றாத நினைவுகள் அவள் எதிரில் இல்லாத போது தோன்றின. இனி அவள் ஒருகாலும் தன் முடிவை மாற்றிக் கொண்டு தணிகாசலத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அப்படி இருக்கும்போது எதற்காக அவளுடன் ஒரே வீட்டில் தங்கிக் கொண்டு, அவளை எண்ணிச் சித்திரவதைப்பட வேண்டும்? பெண்பிள்ளை குடியேறிவிட்ட மனத்தில் எங்கே இனி படிப்பு குடியேறப் போகிறது? அறிவுத் தவம் செய்ய அந்த வீடு ஏற்ற இடமில்லை.

வேறு இடத்தில் தங்கிச் சாப்பாட்டுச் செலவு செய்து கொண்டு படிக்கவும் அவனுக்கு வசதி இல்லை.

அவனுடைய குடும்பம் காளியம்மன் கோயில் தெருவில் இருந்து கொண்டு வாழ்வதற்காகப் படும்பாடு படிப்பின் மேல் அவனுக்கு இருந்த ஆசையைப் பரிகாசம் செய்தது.

வறுமையைத் தன்னுடைய உழைப்புப் போர்வையால் இழுத்து மூடப் பார்த்தாள் அவன் தாயார் கல்யாணி. வறுமையின் காலை மூடினால் தலை தெரிந்தது; தலையை மூடினால் கால் தெரிந்தது.

ஆகவே, தணிகாசலம் படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொண்டு, ஏதாவது வேலை செய்து குடும்பத்தைச் சுமக்க முடிவு செய்தான். குடும்பத்தாருக்குச் சோறு போடவும், சேலை வாங்கிக் கொடுக்கவும், தங்கைக்குக் கல்யாணம் செய்து வைக்கவும் தன்னுடைய மேல் படிப்புக்கு முழுக்கு போடுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த முடிவுக்கு வந்தவுடன் அவன் கண்கள் கலங்கின. படிப்பை மூலதனமாக வைத்து அவன் அதை வியாபாரம் செய்து சம்பாதிக்க நினைக்கவில்லை. பட்டத்தை அஸ்திவாரமாகப் போட்டு அவன் சுகபோக வாழ்வு தேடிக்கொள்ள விரும்பவில்லை. கல்லூரி ஆசிரியர்களுக்கு அதே படிப்புள்ள மற்ற உத்தியோகஸ்தர்களை விட, குறைந்த வருமானம் தான். ஆனால் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான இளம் செல்வங்களை வாழ்வுக்குத் தயார் செய்து அனுப்பும் உயர்ந்த பணியல்லவா? அறிவைக் கொடுத்து, அறிவை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்குமல்லவா? தன் தகப்பனாரின் ஆவி தன்னைப் போலவே கண் கலங்கும் என்பதை எண்ணி, அதனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டான். மற்றப்படி குடும்பத்தில் உள்ளவர்களுக்குப் படிப்பின் அருமை தெரியாது. அவர்கள் தட்டிச் சொல்ல மாட்டார்கள். தேவகிக்குச் சமாதானம் சொல்வது எளிதில்லை. எப்படியாவது அவளுக்குத் தன் குடும்ப நிலையே காரணமென்று விளக்கி, அவளை நம்ப வைத்தால் போதும்.

தேவகி! உன்னையறியாமல் நீ என்ன செய்து விட்டாய்!

மாலைச் சூரியன் மேற்கில் விழுந்து செம்பொன் தகடாக மாறியவுடன் மெல்ல எழுந்து வீட்டுக்கு வந்தான் தணிகாசலம். வந்தவுடன் கண்ணபுரத்துக்குச் சுப்பையாவுக்கொரு கடிதமும் புதுப்பட்டிக்குத் தன் சிற்றப்பாவுக்கு ஒரு கடிதமும் எழுதினான். தன் முடிவை

யும் அதற்கான குடும்ப நிலையையும் சொல்லி, தனக்குக் கண்ணபுரம் சமஸ்தானத்தில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். சுப்பையாவுக்கு எழுதிய கடிதம் மறைமுகமாகத் தேவகிக்கு எழுதிய கடிதமே தவிர வேறில்லை. தேவகிதான் அதை முதலில் படித்துப் பார்ப்பாள்.

அவன் எதிர்பார்த்தபடி இல்லாமல் அவன் தாயாரும் தங்கையும் இந்த முடிவைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். படித்த பிள்ளைக்கு மற்றவர்கள் நம்பும்படியாக, முக்கியமாகப் பெண்கள் நம்பும்படியாகக் காரணங்கள் கண்டு பிடிக்கவா தெரியாது? அவனுடைய பாட்டி மங்களத்துக்கு மாத்திரம் பேரப் பிள்ளை புத்திசாலி என்று தோன்றியது.

"நீ சொல்வது சரிதான் ராஜா!" என்றாள் மங்களத்துப் பாட்டி. "வயது வந்த பிள்ளை கல்யாணம் செய்து கொள்கிற பருவத்தில் படித்துக் கொண்டே போனால் உடம்பு என்னத்துக்காகும்? சீக்கிரம் வேலையைத் தேடிக் கொண்டு நாலு காசு சம்பாதிக்கிற வழியைப் பார். வேலை கிடைத்த மறு மாசமே உனக்கும் கௌரிக்கும் கல்யாணம்."

"பாட்டி! பாட்டி! வேண்டாம்!" என்று அவள் வாயை அடக்கப் பார்த்தான் தணிகாசலம். ஊருக்கு வந்த நாளாய்ப் பாட்டியின் கல்யாணத் தொண தொணப்பை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பாட்டிக்குக் கோபம் வந்து விட்டது. "இந்த மாதிரி 'வேண்டாம்' பாட்டு பாடாதே! உண்மையைச் சொல்லி விடு. ஏன், உனக்குக் கௌரியைப் பிடிக்க வில்லையா?"

"பிடித்திருக்கிறது பாட்டி. இன்னும் கொஞ்சம் வயதாகட்டுமே. அவளோ சிறு பெண். எனக்கும்...."

"சின்னஞ் சிறுசுகளுக்குக் கல்யாணம் செய்து வைக்காமல், கிழங்கட்டைகளுக்கா செய்து வைப்பார்கள்? என்னைப் போலக் கிழட்டுப் பெண் எவளையாவது உன் பள்ளிக்கூடத்தில் பார்த்து வைத்திருக்கிறாயா?" கிழவி சிரித்தாள்.

"அதற்கில்லை, பாட்டி. இப்போது கௌரி எட்டாவதுதான் படிக்கிறாள். இன்னும் சரியாகப் பாவாடைகூடக் கட்டத் தெரியவில்லை. நீங்கள் வந்து.."

"நீ நினைக்கிறபடி அவள் ஒன்றும் பச்சைக் குழந்தையில்லை. அடுத்த வருஷமே எனக்குக் கொள்ளுப் பேரனைப் பெற்றுக் கொடுத்து விடுவாள். ஏன், முதலில் கல்யாணம் செய்து கொண்டு, அப்புறம் நீ அவளுக்குப் பாவாடை கட்டிக் கொள்ளக் கற்றுக் கொடேன்."

பாட்டி விழுந்து விழுந்து சிரித்து விட்டு, மிகவும் வினயமாக முகத்தை வைத்துக் கொண்டு, அவனிடம் முக்கியமான செய்தி ஒன்றைத் தெரிவித்தாள்.

"இந்தக் கட்டையில் உயிர் இருப்பதற்குள் இந்தக் கல்யாணம் நடந்தால் தான் நடக்கும். இல்லாவிட்டால் நடக்காது. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போய் விடுவான். அந்த ராங்கிக்காரி வீரம்மாள் எதற்காக மகள் வீடே கதி என்று வந்து கிடக்கிறாள், தெரியுமா? தன்னுடைய மகன் பிள்ளை சங்கரலிங்கத்துக்குக் கௌரியைக் கொத்திக் கொண்டு போக வேண்டுமென்கிற பேராசை அவளுக்கு. அவளுடைய கழுகுக் கண் உன் மேல் பட்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. கூடிய வரையில் அவள் முகத்தில் விழிக்காதே!"

தணிகாசலம் யோசனை செய்தான். யோசனை செய்ய வேண்டிய கட்டம் ஒன்று இப்படித் திடீரென்று முளைக்கும் என்று அவன் எதிர்பார்க்க வில்லை.

"இதோ பார், ராஜா! நான் சீக்கிரம் செத்துப் போக வேண்டுமென்று வீரம்மாள் தினமும் காளிகோயிலுக்கு விளக்குப் போடுகிறாள். அவள் கையில் நிறைய சொத்து இருக்கிறது. அவள் பெற்றெடுத்த மகள்தானே உன் அத்தை? யார் சொல்லை அவள் கேட்பாள்? உன் மாமா இருக்கிறானே தங்கசாமி, தங்கமான பிள்ளைதான். ஆனால் சொந்த மூளை துளிக்கூடக் கிடையாது. வெறும் சாப்பாட்டு ராமன். பெண்டாட்டி சொன்னாலும் தலையாட்டுவான்; நான் சொன்னாலும் தலையாட்டுவான்; மாமியார் சொன்னாலும் தலையாட்டுவான். தன் பெண்ணை யார் கல்யாணம் செய்து கொண்டாலும் கவலையில்லை. கல்யாணச் சாப்பாடு பிரமாதமாக இருந்தால் போதும். நான் என்ன செய்வது? இந்த மாதிரி ஒரு பிள்ளையைக் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். எதற்காக இந்தக் கிழவி இப்படிக் கிடந்து அடித்துக் கொள்கிறாள் என்று யோசனை செய்."

தணிகாசலத்துக்குத் தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. "முதலில் வேலைகிடைக்கட்டும் பாட்டி; பிறகு கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்று அப்போதைக்குச் சொல்லித் தப்பித்துக் கொண்டு விட்டான்.

ஆனால் நீண்ட நாள் இப்படித் தப்ப முடியாது என்றும் தோன்றி விட்டது. இந்தக் கல்யாண விஷயத்தில் பாட்டி

யைப் போலவே அவனுடைய தாயாரும் தங்கையும் பிடிவாதமாக இருந்தார்கள்.

அவனுடைய சித்தப்பாவின் அருமையான கடிதம் புதுப்பட்டியிலிருந்து வந்தது. அதில் அவர் எழுதியிருந்தார்:

அன்புள்ள தணிகாசலத்துக்கு,

ஆசிர்வாதம். உன் கடிதம் கிடைத்தது. உன் விருப்பத்தின்படி நான் இங்கே சமஸ்தானத்து வேலைக்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். சில மாதங்கள் கழித்தே வேலை கிடைக்குமென்று தெரிகிறது. எதற்கும் நீ பொன்வயலை விட்டு விட்டு இங்கே வந்து மனு எழுதிப் போட வேண்டும். பக்கத்தில் இருந்தால் அடிக்கடி நேரில் போய் யாரையாவது பார்த்துச் சிபாரிசு செய்யலாம். அது வரையில் உள்ளூரிலேயே எனக்குத் தெரிந்த மனிதரிடம் சொல்லி, இருபது ரூபாய் சம்பளத்தில் கணக்கு வேலை பேசி வைத்திருக்கிறேன். சமஸ்தானத்தில் இடம் கிடைக்கும் வரை இதைப் பார்க்கலாம். உடனே புறப்பட்டு வா.

சித்தப்பா

பொன்வயலின் சூழ்நிலையில் புழுங்கிக் கொண்டிருந்த தணிகாசலத்துக்கு இந்தக் கடிதம் பேரானந்தம் கொடுத்தது. புதுப்பட்டி மிகச் சிறிய கிராமம்தான். என்றாலும் அந்தக் கிராமத்தின் மண் பரம்பரை பரம்பரையாக வந்த அவனுடைய ரத்தத்தில் ஓடிக் கொண்டிருந்தது. சித்தப்பாவின் உருவத்தில் அந்தக் கிராமமே தன்னை எதிர்பார்த்து அழைப்பதாக எண்ணிக் கொண்டான். புறப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

முதல் நாள் அதற்காக அவனுக்கு மாமாவின் வீட்டில் விருந்தொன்று நடந்தது. மங்களத்துப் பாட்டியின் மறைமுகமான தூண்டுதல் அது என்பது தணிகாசலத்துக்குத் தெரியும். என்றாலும் கௌரியே அதற்குக் காரணம் என்று பாட்டி சாதித்தாள். "இதெல்லாம் கௌரி செய்த வேலை. நீ ஊருக்குக் கிளம்புவதைக் கேட்ட பிறகு அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. உடனே தன் அப்பாவிடம் போய்ச் சொல்லியிருக்கிறாள். விருந்தென்றவுடன் தங்கசாமியே 'மார்க்கட்'டுக்குப் போய்க் காய்கறி வாங்கி வந்திருக்கிறான்."

விருந்து பலமாக இருந்தது.

ஆனால் அந்த விருந்துக்கிடையில் நடந்த சம்பவங்கள் தணிகாசலத்தின் மனத்தைப் பிழிந்தெடுத்தன. இப்படி ஒரு விருந்து நடந்தே இருக்க வேண்டாமே என்று புழுங்கினான். தன்னை மதிப்பதற்காக நடந்த விருந்தா இது? அல்லது தன்னை அவமதிப்பதற்காகச் செய்த முன்னேற்பாடா?

சாப்பாடு நடந்த சமயத்தில் மங்களத்துப் பாட்டி அருகில் இருக்கவில்லை. அவளுக்குத் தெரிந்திருந்தால் அன்றைய தினம் மாமா வீட்டில் ரணகளம் நடந்திருக்கும். கௌரி மட்டிலும் அதைக் கண்டு ஆத்திரம் தாங்காமல் துடிதுடித்தாள். அடுத்த வீட்டுக்கு ஓடி மங்களத்திடம் சொல்லப்போனவளை அவன் நல்ல வேளையாகத் தடுத்து நிறுத்தி விட்டான்.

அது போன்ற ஓர் நெருக்கடியான வேளையில்தான் கௌரியும் துணிவுடன் முன் வந்து தான் யார் என்பதைத் தணிகாசலத்தினிடம் காட்டிக் கொண்டாள். அவளுடைய அன்பு அன்றைக்கு அப்படி வெளிப்பட்டிருக்கா விட்டால் விருந்து விஷமாகவே முடிந்திருக்கும்.

சூடுபட்ட சுயமரியாதையின் சிறு எரிச்சலைத் தாங்க முடியாமல் தன் தாய் வீட்டுத் திண்ணைக்குத் திரும்பினான் தணிகாசலம். வீரம்மாள் பாட்டி பேசிய ஒவ்வொரு சொல்லும் அவனை ஊசி போட்டுத் துளைத்தன. அதை அவன் திரும்பவும் நினைத்துப் பார்ப்பதற்குள் வாசலில் தந்திச் சேவகன் வெகு அவசரமாக வந்து நிற்பது தெரிந்தது.

"சார், தந்தி!"

தந்தி என்று சொல்வதற்கு முன்பே மங்களத்துப் பாட்டி கதறி அழுவதற்குத் தொடங்கி விட்டாள். அவளைச் சொல்லிக் குற்றமில்லை. அது அந்த ஊரின், அதிலும் அந்தத் தெருவின் வழக்கம்.

தேவகி தந்தி கொடுத்திருந்தாள்:

"அண்ணா உன்னை உடனே புறப்பட்டு வரச் சொல்கிறார். நாளைக்கு இங்கே எதிர்பார்க்கிறோம்."

தணிகாசலத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. அண்ணா என்னை வரச்சொல்கிறார் என்றால் அவரே தந்தி கொடுக்கக் கூடாதா? வேண்டுமென்றே இப்படித் தேவகி கொடுத்திருக்கிறாளா? தன்னை அங்கே அவள் அழைப்பதின் நோக்கம் என்னவாயிருக்கும்?

முதலில் கண்ணபுரத்துக்குச் சென்று சுப்பையாவைச் சந்தித்து விட்டு, பிறகு புதுப்பட்டிக்குத் திரும்பி வர முடிவு செய்தான். ஏற்கனவே பிரயாணம் நிச்சயமாகி இருந்ததால் தந்தியைக் கண்டு அதற்காக அவசரப்படும் அவசியம் எழவில்லை. மறுநாள் அதிகாலையில் அவன் கிளம்பினான்.

ரயிலில் உட்கார்ந்த தணிகாசலத்துக்குத் தேவகியின் தந்திகூட அவ்வளவு பரபரப்பைக் கொடுக்கவில்லை. விருந்தின் போது நடந்த விரும்பத்தகாத சம்பவங்களே அவன் மனக்கண்முன் திரும்பத் திரும்பச் சுழன்று வந்தன. (தொடரும்)


பாண்ட்ஸ் டால்கம் பவுடர்

உபயோகிக்கும் பெண்மணி


நாள் முழுவதும் அவன் மனக் கண்முன் நிற்கிறாள்!



என்ன மென்மை! என்ன சுகமணம்! என்ன குளுமை! பாண்ட்ஸ் டால்கம் பவுடர் ஸ்நானத்திற்குப்பின் அநுபவமாகும் புத்துணர்ச்சியை நாள் முழுவதும் நீடிக்கச் செய்கிறது.







இலவச புஸ்தகம்

அழகு பற்றிய குறிப்புகள் கொண்ட Lovelier with Ponds என்ற எமது புஸ்தகத்தை வரவழையுங்கள். பி. ஓ. பாக்ஸ் நம்பர் 1012 டிபார்ட்மென்ட் வி. 28 டி. பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு எழுதவும்

சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

மரகதக் கோட்டை



(சென்றவாரத் தொடர்ச்சி)

5

கி. ராஜேந்திரன்

மறுநாள் காலை காந்தன் சாமந்தசேனரும் சொர்ணமாதேவியும் தங்கியிருந்த மரகதக் கோட்டைக்குள் வந்தார்.

சாமந்தசேனரைப் பார்த்து, "இன்று மாலை உங்கள் புதல்வியின் நாட்டியத்தை இரண்டாவது முறையாக அரங்கேற்ற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

"சொர்ணமா தேவிக்குச் சம்மதமானால் நான் தடை செய்யப் போவதில்லை" என்று சொன்னார் சாமந்தசேனர்.

"எனக்குப் பரிபூரண சம்மதம்" என்றாள் சொர்ணமாதேவி. அவளுடைய கண்கள் காதலர்களுக்கே உரிய சங்கேத பாஷையில் "உங்களுக்காகத்தான் இந்த நடனம்" என்று காந்தனுக்குத் தெரிவித்தன.

முகமூடி அணிந்திருந்த குமார் நூறுபேர்கள் அன்று மாலை நாட்டியத்தைக் காணக் குழுமியிருந்தனர். முகமூடி அணிந்திருந்த வேறு சிலர் நாட்டியத்துக்கு ஏற்ப வாத்தியங்கள் வாசித்தார்கள். இந்த விசித்திரமான சபையினரின் முன் சொர்ணமாதேவி எந்த விதமான தயக்கமும் இன்றி அபாரமாக ஆடினாள். அவள் ஆடியது சபையினருக்கு அல்லவே? அவர்களுக்குத் தலைமை தாங்கி முதன்மையில் அமர்ந்திருந்த தன் இன்னுயிர் காதலனுக்கு மட்டுமே அல்லவா?

இருள் கவிந்ததும் தீபங்கள் ஏற்றப்பட்டன. கடிகாரம் தன் ஒளி குறைவதும் மேலும் மேலும் பிரகாசமடையும் என்பதற்கேற்பத் தீப்பந்தங்களின் ஒளியில் சொர்ணமாதேவியின் உடல் பொலிவு பெற்று விளங்கியது.

நாட்டியம் முடிந்ததும் வீரர்களின் தலைவன் கம்பீரமாகப் பேசலுற்றான்:

"நமது விருந்தாளியான சொர்ணமாதேவியின் நாட்டியத்தைக் கண்டு களித்தோம். நம்மைப் பற்றிய விவரங்களைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தந்தையும் மகளும் விரும்புகிறார்கள். உங்கள் அனுமதி பெறாமல் அதுபற்றி அவர்களிடம் பேச நான் மறுத்து விட்டேன். உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"கூடாது கூடாது! சொல்லக் கூடாது" என்று பல கூக்குரல்கள் எழுந்தன.

காந்தன் அனைவரையும் கையமர்த்தினான். "உங்கள் விருப்பத்துக்கு மாறாக நான் எதையும் செய்துவிட மாட்டேன். ஆனால் என்னுடைய எண்ணத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தந்தையும் மகளும் நம்முடைய விருந்தாளிகளாக நம்முடன் தங்கி யிருக்கிறார்கள். நம்முள் ஒருவராகவே ஆகிவிட்டார்கள் என்று சொன்னாலும் தவறில்லை. அப்படியிருக்க அவர்களுக்கு நம்மைப் பற்றிய விவரங்களைக் கூறுவதே முறை. இதனால் நமக்கு எந்தவிதமான ஆபத்தும் அணுக இடமில்லை. அன்றியும் அவர்களால் நமக்கு நன்மை பயக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது. என் விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. நன்றாக யோசித்துப் பதில் உரையுங்கள்" என்றான்.

வீரர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள்.

"சொல்லுங்கள்" என்று ஒரு குரல் கேட்டது. தொடர்ந்து பல குரல்கள் "சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்றன.

தலைவன் கூறினான்:

"திருமுனைப்பாடி நாட்டைத் திருமுக்கூடலைத் தலைநகராகக் கொண்டு வைதும்பராயன் அரசாண்டு வருகிறான். அவனுடைய முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியை இந்நாட்டில் நிறுவ வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கு எழுந்தது. இதை நிறைவேற்றச் சரியான முறை என்ன என்று யோசித்தார். யாரும் எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி, பச்சைப் பசேல் என்று வளம் கொழிக்கும் இடத்தில் இந்தக் கோட்டை இருப்பதைக் கண்டார். ஆகவே இதற்கு மரகதக்கோட்டை என்று பெயரிட்டு, குடியாட்சி சங்க முகாமை இங்கு ஏற்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார். அதற்கேற்பப் பலருக்கு ஓலை எழுதினார். குடியாட்சியை நிறுவ வேண்டும் என்று விரும்பிய பலர் அந்த ஓலையில்



கண்டபடி, முகமூடி தரித்துக் குறித்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்வாறு விரும்பாதவர்கள் வாளாவிருந்தார்கள். இச் சங்கத்தில் சேர்ந்தவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை எல்லாம் ரகசியமாக வைத்துக்கொள்வதாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

''இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் சங்கத்தில் சேர்ந்தவர்களே ஒருவரைப் பற்றி ஒருவர் அறியார்கள். அனைவரும் முகமூடி தரித்திருப்பதன் காரணம் அதுதான். இதனால் பொருமையினாலோ ஆத்திரத்தினாலோ ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்க வகையில்லை. இந்தக் கூட்டத்தில் அரசாங்க ஊழியர்கள், படைத்தலைவர்கள், இன்னும் மந்திரிமார்கள் கூட இருக்கலாம். ஆனால் யார் யார் இருக்கிறார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆகவே ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்க வழியில்லை. ஏன்? இந்தச் சங்கத்தைக் கூட்டவேண்டும் என்ற எண்ணம் உதித்ததே ஒரு மகானுடைய உள்ளத்தில், அவர் யார் என்பதுகூட நமக்குத் தெரியாது. அவருக்கும் நம்மைப் பற்றித் தெரிந்திருக்க முடியாது. யார் யாருக்கு ஓலை அனுப்பினர் என்பது மட்டும் அவருக்குத் தெரியுமே அன்றி அவர்களில் யார் யார் தம்முடைய அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள், யார் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது அவருக்குத் தெரியாது. இப்படி ஒரு விசித்திரமான சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டோம். முடியாட்சியை ஒழித்து இந்த நாட்டில் நல்ல குடியாட்சியை ஏற்படுத்த முயல்கிறோம். விரைவில் வெற்றி பெறுவோம்.''

காந்தன் இவ்வாறு கூறி முடித்ததும் சபையில் வானளாவிய கரகோஷம் எழுந்தது.

6

நாட்கள் சென்றன. சொர்ணமாதேவியும் சாமந்தசேனரும் அந்தச் சங்கத்தின் முகமூடி தரிக்காத அங்கத்தினர்களாகி விட்டார்கள். அப்போதெல்லாம் சொர்ணமாதேவியினுடைய மனக் கண் முன்னால் உலகமே ஒரு ஆனந்த நந்தவனமாகத் தோன்றியது. அந்த நந்தவனத்திலிருந்த மரங்களும் செடிகளும் பல வர்ணப்புஷ்பங்களுடன் குலுங்கின. அந்த நந்தவனத்தில் குயில்கள் தேனினும் இனிய குரலில் பாடின. மயில்கள் வண்ணத் தோகை விரித்து ஆடின. மான்கள் துள்ளித் துள்ளி ஓடின. பலவர்ணப் பட்டுப் பூச்சிகள் படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு இங்குமங்குமாகப் பறந்தன. கிளிகள் மழலை பேசின. புறாக்கள் ஒன்றோடொன்று கொஞ்சி முத்தமிட்டன. சந்தன மரங்களின் சுகந்தத்துடன் மந்தமாருதம் வீசியது.

நாள்தோறும் இரவில் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. அதன் ஒளியில் சதியாலோசனைகள் நடைபெற்றன. நாட்கள் விரைகின்றன என்றும் சங்கம் தன் கடமைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்றும் பலர் கூறினார்கள். குடியாட்சியை விரைவில் ஏற்படுத்தச் சிலர் யோசனைகளைச் சொன்னார்கள்; வேறு சிலர் அதை மறுத்து மாற்று யோசனைகளைக் கூறினார்கள்.

குடியாட்சி ஏற்படுத்த முதன் முதலில் செய்ய வேண்டிய காரியம் மன்னன் வைதும்பராயனை ஒழிப்பதுதான் என்று ஒருவன் கூற அதனைப் பலர் ஆமோதித்தார்கள்.

''வைதும்பராயனுக்குப் புத்திரர்கள் கிடையாது. மணமாகாதவர். நெருங்கிய பந்துக்கள் கூட இல்லை. அவனைக் கொன்று விட்டால்



பட்டத்துக்குப் போட்டியிட வேறு ஆள் இல்லை. குடியாட்சியை ஏற்படுத்த அந்த நிலைமையைவிட வேறு அரிய சந்தர்ப்பம் கிடைக்காது'' என்ற அவனுடைய பயங்கரக் கூற்றை அனைவரும் ஏகமனதாக ஒப்புக் கொண்டார்கள்.

''ரொம்ப சரி. ஆனால் மக்கள் குடியாட்சிக்குத் தயாராக இருக்கிறார்களா?'' என்று கேட்டான் தலைவன்.


''மக்கள் எப்போதும் தயாராகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்துப் பார்த்தால்தானே தெரியும்? அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்காமலேயே அவர்கள் தயாராக இல்லை என்று சொல்வதில் என்ன பயன்?'' என்று பதில் கிடைத்தது.

''அப்படியானால் எனக்கு ஆட்சேபனை இல்லை'' என்றான் புரட்சித் தலைவன்.

''யார் அந்த மகத்தான காரியத்தைச் செய்வது?'' என்ற கேள்வி எழுந்தது. 'நான்தான் செய்வேன்' என்று பலர் முன்வந்தார்கள். குடியாட்சி நடக்கையில் அதற்குக் காரண பூதனானவன் நான்தான் என்று சொல்லிக் கொள்வதில் யாருக்குத்தான் ஆசையும் விருப்பமுமிராது?

தலைவன், ''என்னுடைய எண்ணத்தில் சொர்ணமா





தேவிதான் இந்தக் காரியத்தைச்செய்ய தகுதியுடையவள்'' என்றான்.

''எப்படி? எப்படி?'' என்று ஆர்வத்துடன் கேட்டன பல குரல்கள்.

''வைதும்பராயன் சிறிது பெண் பித்து பிடித்தவன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சொர்ணமாதேவி எழிலரசியாக விளங்குகிறாள். அற்புதமாக ஆடுகிறாள். வைதும்பராயனுக்கு அருகில் செல்வது அவளுக்குக் கடினமாயிராது. அதன் பின் அவன் அருந்தும் மதுவிலோ அல்லது உணவிலோ அவள் விஷத்தைக் கலந்துவிட வேண்டும். அதுவே மிகவும் சுலபமான வழி.''

''சரி! சரி! அப்படியே செய்வோம்'' என்று பல குரல்கள் எழுந்தன.

சாமந்தசேனர் மனமுடைந்து போனார். தலைவனிடம், 'இத்தகைய மகத்தான அநீதியை இழைத்து விடமாட்டீர்களே? எனக்கு அவள் ஒரே மகள். அவளைக் கண்டு பிடித்துத் தண்டித்து விட்டால் பின்னர் நான் என்ன செய்வேன்?' என்று மனம் பதைத்தார்.



''அவளும் நீங்களும் இந்தச் சங்கத்தில் சேர்ந்து விட்டீர்கள். ஆகவே இப்போது பின்வாங்குவது அழகல்ல. அவளுக்கு ஒருவித ஆபத்தும் நேராது என்று உறுதி கூறுகிறேன்'' என்றான் வீரர் தலைவன்.

சொர்ணமாதேவி சிறிதும் மனப்பதற்றம் அடைந்தவளாகத் தெரியவில்லை. தன் காதலனின் விருப்பத்தை நிறைவேற்ற அவள் தயாராக இருந்தாள். 'அந்த முயற்சியில் நான் இறந்து போனால்தான் என்ன?' என்று அவளுக்குத் தோன்றியது. தனக்குள்ள செல்வாக்கை உபயோகித்து அரண்மனையில் அவளுடைய நடனத்துக்குத் தானே ஏற்பாடு செய்வதாகக் காந்தன் தெரியப்படுத்தினான்.

பௌர்ணமி யன்று பூரணசந்திரனின் ஒளியில் காந்தனும் சொர்ணமாதேவியும் சங்க அங்கத்தினர்களிடமும் சாமந்தசேனரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள். 'வெற்றியுடன் திரும்பி வரவும்' என்று அனைவரும் அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறி வழி யனுப்பினார்கள்.

சொர்ணமாதேவியும் காந்தனும் மூச்சுகூடல் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் நார்த்தா மலைச்சாரலில் குடியாட்சி சங்க முகாமுக்குத் தான் போகும் போதும், அங்கிருந்து திரும்பி வரும் போதும் பிரயாணத்தில் உள்ள வித்தியாசங்களையெல்லாம் சொர்ணமாதேவி எண்ணிக் கொண்டே வந்தாள்.

போகும்போது அவள் தன் காதலனுடன் ஒரே குதிரையில் பிரயாணம் செய்தாள். இப்போது வெவ்வேறு குதிரைகளில் அவர்கள் ஆரோகணித்திருந்தார்கள். போகும் போது அவள் தன் காதலனின் ஸ்பரிசத்தால் இன்பத்தின் எல்லையை அடைந்திருந்தாள். இப்போதோ தன் காதலனைப் பிரிய நேரிடுமோ என்ற எண்ணமே அவளைத் துன்பக் கடலில் ஆழ்த்தியது. போகும் பொழுது அவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதற்கு அவசியம் இருக்கவில்லை. இப்போது அவர்கள் பேசிக் கொண்டே சென்றார்கள்

''என்மீது உனக்குக் கோபமா?'' என்று கேட்டான் காந்தன்.

''கோபமா? எதற்காக?''

''உன்னை நான் இக்காரியத்துக்குத் தேர்ந்தெடுத்தேன் என்பதற்காகத்தான். உன் தகப்பனுக்கு என் மீது ஒரே கோபம்.''

''அவருக்குத் தம் மகள் பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே என்ற கவலை. அதனால் படபடப்பாகப் பேசியிருப்பார். தம் ஒரே மகளின் நல்வாழ்வுக்காகத் தந்தை பயப்படுவது இயல்பே யல்லவா?''

''உனக்குப் பயம் இல்லையா?''

சொர்ணமாதேவியின் உடல் சிலிர்த்தது ''தங்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு நான் சிறிதும் தயங்க மாட்டேன். ஆனால் அப்படி நிறைவேற்றுகையில் நான் இறந்து போக நேரிட்டால் உங்களைப் பிரிய நேரிடுமே என்றுதான் அஞ்சுகிறேன். உங்கள் கட்டளையை நிறைவேற்றும் போது இறந்து போவதை ஒரு பாக்கியமாகக் கருதிய போதிலும் உங்களைச் சந்தித்த வெகு சிறிய காலத்துக்குள் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ள மனம் மறுக்கிறது.'' சொர்ணமாதேவி விம்மி விட்டாள்.

காந்தன் தன்னுடைய குதிரையை அவளுக்கு அருகே செலுத்தினான். ஒரு கரத்தினால் அவளுடைய மென்மையான விரல்களை அன்புடன் பற்றிக் கொண்டான்.

''கண்ணே! நீ சிறிதுகூட மனம் கலங்கலாகாது. நான் உயிருடன் இருக்கும் வரை உனக்கு ஒரு ஆபத்தும் நேரிடாது. நீ அரசவையில் நாட்டியம் ஆடும்போது நானும் அங்கு இருப்பேன். உன்னை எவ்வித ஆபத்தும் அணுகாது காப்பேன்'' என்றான்.

''வேண்டவே வேண்டாம். தயவு செய்து அப்படி ஏதும் செய்து விடாதீர்கள். வெற்றியோ தோல்வியோ என்னோடு போகட்டும். என்னைக் காப்பாற்றும் முயற்சியில் தங்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்....''

காந்தன் பலமாகச் சிரித்தான். மலை அடிவாரத்தில், அந்த வனாந்திரப் பிரதேசத்தில் அவனுடைய சிரிப்பு நாலா பக்கமும் பரவி எதிரொலி செய்தது.

''அளவில்லாத துன்பம் நேரும்போதும் சிரித்து மகிழும் உயர்ந்த பண்பு உங்களிடம் இருக்கிறது. ஆனால் உங்களுடைய சிரிப்பு என்னுடைய வேதனையை மேலும் அதிகமாக்குகிறது'' என்றாள் சொர்ணமாதேவி.



Alembic
க்ளீகோடின்
டெர்ப் வசாகா
க்ளீகோடின்
டெர்ப் வசாகாவினால்
உங்களுடைய இருமல்
விரைவில் நிவாரணமாகிறது
இருமலுக்கு வீட்டிலேயே குணம் அளிப்பது
அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ்
கம். லிட்.-பரோடா - 3.
50வது
ஆண்டு நிறைவு 1907-1957
GTV-57-2A
TM

''உனக்கு வேதனையைத் தருவதானால் நான் சிரிக்கவில்லை. அது போகட்டும். ஆகவேண்டிய காரியத்தைப் பற்றிப் பேசுவோம். மூக்கூடலில் எனக்கு வயதான நண்பர் ஒருவர் இருக்கிறார். அந்தக் கிழவரும் அவருடைய மூதாட்டி மனைவியும் என்னைத் தங்கள் மகனாகவே எண்ணி அன்பு செலுத்துகிறார்கள். உன்னை அவர்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். பின் அரண்மனையில் எனக்கு உள்ள செல்வாக்கை உபயோகித்து உன் நடனத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். நாளை மாலை உன்னை அரண்மனைக்கு அழைத்து வரப் பல்லக்கு அனுப்புகிறேன். நடன மண்டபத்துக்கு நீ வந்து சேருவாய். நடனம் ஆரம்பமாகும். அரசர் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் அருகிலேயே மதுக் கோப்பை வைக்கப்பட்டிருக்கும். நீ நடனம் ஆடும்போதே மதுக்கோப்பையின் அருகே சென்று இந்த மோதிரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிறிய பேழையைத் திறக்க வேண்டும். பேழையில் உள்ள இரு விஷமாத்திரைகளும் மதுக்கோப்பையினுள் விழுந்து விடும்.''

இவ்வாறு கூறிக்கொண்டே காந்தன் சொர்ணமாதேவியின் காந்தள் மலரை ஒத்த விரல்களைத் தன்னுடைய வைரம் பாய்ந்த கரங்களால் பற்றிச் சிறந்த வேலைப்பாடு அமைந்த ஒரு மோதிரத்தை அவளுடைய மோதிர விரலில் மாட்டினான்.

காந்தனுடைய கரங்களைச் சொர்ணமாதேவி தன் அகன்ற நயனங்களில் ஒற்றிக் கொண்டாள். ''அப்படியே செய்கிறேன். ஆனால் நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள்.

''என்ன?'' என்று வியப்புடன் கேட்டான் புரட்சித் தலைவன்.

''முதலாவதாக என் நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்வதிலோ, அதன் பின் நான் பிடிபட்டு விட்டால் என்னைக் காப்பாற்றும் முயற்சியிலோ உங்களை எந்த விதமான ஆபத்துக்கும் ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. இரண்டாவதாக நான் இறந்து போக நேரிட்டால் என் தகப்பனாருக்கு நீங்கள் ஆறுதல் கூறி அவரது வாழ்நாள் முழுவதும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.''

''அப்படியே ஆகட்டும்!'' என்று தயக்கமின்றி வாக்குறுதி அளித்தார் காந்தன்.

7

காந்தன் கூறியபடியே எல்லாம் நடந்தன. அவனுடைய வயோதிக நண்பர்கள் சொர்ணமாதேவியை அன்புடன் உபசரித்தார்கள். மறுநாள் மாலைப் பொழுது நெருங்கியதும் அவர்களுடைய உதவியுடன் சொர்ணமாதேவி தன்னை நாட்டியத்துக்குத் தயார் செய்து கொண்டாள். சிறிது நேரத்தில் வாசலில் ஒரு பல்லக்கு வந்து நின்றது. தன்னை அழைத்துச் செல்லக் காந்தனும் வருவார் என்று எதிர்பார்த்த சொர்ணமாதேவி ஏமாந்து போனாள். எனினும் அரண்மனையில் நாட்டியம் ஆடும்போது நிச்சயம் தன் அருகில் இருப்பதாகக் காந்தன் கூறியிருந்ததால் மன ஆறுதல் அடைந்தாள். தனக்கு அன்புடன் உதவிய வயோதிகத் தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டாள்.



நடன மண்டபத்தை அடைந்த சொர்ணமாதேவி அரசன் வருகைக்காகக் காத்திருந்தாள். அவளுடைய கண்கள் அரசவையைச் சுற்றித் தன் காதலனைத் தேடின. எவ்வளவு தேடியும் காந்தனைக் காண முடியவில்லை. ஏமாற்றமும் துயரமும் கோபமும் அவளை வந்தடைந்தன. சிறிது யோசித்துப் பார்த்ததில் தவறு தன்னுடையதுதான் என்று உணர்ந்தாள். காந்தன் தன்னை எந்த விதமான ஆபத்துக்கும் உள்ளாக்கிக் கொள்ளக்கூடாது என்று வாக்குறுதி பெற்றிருந்தாள் அல்லவா? ஆகவே காந்தன் நடனத்தைக் காணக் குழுமியவரில் ஒருவராக இராததில் வியப்பில்லை.

'ஒருவேளை அவருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு அதனால் நடன மண்டபத்துக்கு வர முடியாது போயிருக்குமோ?' என்ற எண்ணம் தோன்றிச் சொர்ணமாதேவியின் உடலை நடுநடுங்க வைத்தது.

''வைதும்பராய மன்னன் வாழ்க'' என்று கட்டியங் கூறுவோன் முழங்கினான். அரசசபையினர் மரியாதையாக எழுந்து நின்றனர். வைதும்பராயன் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்தான். சொர்ணமாதேவியின் முகம் பூமியை நோக்கி இருந்தது. வைதும்பராயனை ஏறிட்டுப் பார்க்கவும் அவள் விரும்பவில்லை.

''நாட்டியம் ஆரம்பமாகட்டும்'' என்றான் மன்னன் வைதும்பராயன்.

அந்தக் குரலைக் கேட்ட மாத்திரத்தில் சொர்ணமாதேவியின் கண்களுக்கு எதிரே ஆயிரமாயிரம் மின்னல்கள் ஒரே சமயத்தில் மின்னின! லட்சோப லட்சம் பேரிடிகள் அவள் தலையில் விழுந்தன! அவள் நெஞ்சத்திலே கடல் அலைகள் பொங்கி எழுந்தன! அவளுடைய மனம் சண்டமாருதத்தில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தது!

சொர்ணமாதேவி தலை நிமிர்ந்து பார்த்தாள். யாருக்காக அவள் சில நாட்களாக

இன்பமும் துன்பமும் ஒரே சமயத்தில் அனுபவித்து வந்தானோ, யாருடைய இன் சொல்லை நிறைவேற்ற அவன் இந்தப் பரிபாதகமான செயலில் இறங்கினானோ, யாருடைய கட்டளையை நிறைவேற்றும்போது இறந்து போவதையும் பேரின்பமாகக் கருதினானோ, யாருக்காகத் தன் உயிருக்குயிரான தகப்பனாரையே விட்டுப் பிரிந்தானோ அதே காந்தன்தான் வைதும்பராய மன்னனாக அரச பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

சொர்ணமாதேவியின் மனத்தில் எழுந்த புயல் வந்த வேகத்திலேயே அடங்கி விட்டது! அவள் ஆட ஆரம்பித்தாள்!

சொர்ணமாதேவி காந்தன் அளித்த மோதிரத்தை மறந்தாள். மதுக் கோப்பையை மறந்தாள். தான் வந்த காரியத்தை மறந்தாள். தன்னையே மறந்து விட்டாள். அவள் நினைவில் இருந்தது தன் காதலனுக்காகத் தான் நாட்டியம் ஆடுகிறோம் என்ற ஒரே எண்ணம்தான்.

நாட்டியம் முடிந்ததும் சபையோர் தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்குத் திரும்பி வந்த உணர்ச்சியைப் பெற்றார்கள்.

வைதும்பராயன் எழுந்து பேசினான் :

"சபையோர்களே ! மெய் மறந்து நீங்கள் நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். இவ்வளவு அற்புதமாக நாட்டியம் ஆடிய இந்தப் பெண் என்னை விஷமிட்டுக் கொல்வதற்காக இங்கே வந்தாள் !"

"ஆ! ஆ!" என்ற வியப்பொலிகள் அரசவையில் எழுந்தன.

"ஆமாம். வியப்படைகிறீர்கள். ஆனால் அவளை இங்கே அனுப்பி வைத்தது யார் தெரியுமா ....?" என்று வைதும்பராயன் கூறி முடிப்பதற்கு முன், "யார்? யார், அந்தக் கயவன்?" என்று பல குரல்கள் மிகுந்த ஆவேசத்துடன் கேட்டன.

"நான்தான்!" என்றான் வைதும்பராயன்.

இப்போது வியப்பொலிகளும் சிரிப்பொலிகளும் ஒருங்கே எழுந்தன. இந்த நிலைமை சிலருக்கு வியப்பாகவும், சிலருக்கு வேடிக்கையாகவும், வேறு சிலருக்கு ஒன்றுமே புரியாத புதிராகவும் விளங்கியது.

வைதும்பராயன் அவர்களுடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்தான்:

"இந்நாட்டில் குடியாட்சி ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு இயக்கம் நடந்து வருகிறது என்றும் அதில் உயர்தர அரசாங்க அதிகாரிகள்கூட ஈடுபட்டிருப்பதாயும் நமது ஒற்றர் படையினர் மூலம் அறிந்தேன். இதன் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ள விரும்பிப் பல நாட்களுக்கு முன் இச்சங்கம் கூடும் இடத்துக்குச் சென்றேன். மறைந்திருந்து கவனித்ததில் சங்க அங்கத்தினர்கள் முகமூடி தரித்துக் கூடுவதையும் குடியாட்சி ஏற்படுத்தச் சதியாலோசனைகள் நடத்துவதையும் தெரிந்து கொண்டேன். நானும் முகமூடி தரித்து அவர்களில்ஒருவனாகச் சேர்ந்து கொண்டேன். வாள் வேல் முதலியவற்றை உபயோகிப்பதில் நான் மற்றவர்களை விடத் திறமை மிக்கவனாக இருந்தபடியால் விரைவில் அவர்களுடைய தலைவனாகவும் ஆகிவிட்டேன். இந்நாட்டில் குடியாட்சி ஏற்படுத்துவதற்கு முதற்படியாக வைதும்பராயனைக் கொன்று விட வேண்டும் என்று ஒருமுகமாகத் தீர்மானமாயிற்று. அவர்களுடைய தலைவனாகிய நான் அதை மறுத்துக் கூற முடியவில்லை. இந்தப் பெண்ணை அக்காரியத்தைச் செய்வதற்குத் தேர்ந்தெடுத்தோம். ஆனால் இப்பெண் என்னைக் கொல்ல மனமில்லாமல் மதுவில் விஷத்தைக் கலக்காமல் விட்டு விட்டாள். நியாயமாக நான் இச் சங்க அங்கத்தினர்களை அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்த குற்றத்துக்காகத் தண்டிக்க வேண்டும். ஆனால் நான் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறேன். ஏனெனில், நானும் அச்சங்கத்தில் சேர்ந்து குடியாட்சியை ஸ்தாபிக்கப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இக் காரணங்களால் இன்று முதல் என் அரச பதவியைத் துறந்து இந்நாட்டின் ஒரு சாதாரணப் பிரஜையாக வாழ விரும்புகிறேன். அமைதியான முறையில் இந்நாட்டில் குடியாட்சிஏற்படும்."

"வைதும்பராயன் வாழ்க! குடியாட்சி வாழ்க!" என்ற கோஷங்கள் வானளாவின.

*** *** ***

சொர்ணமாதேவியும் வைதும்பராயனும் மரகதக் கோட்டைக்கருகே முன்னொரு நாள் பாறை மீது அமர்ந்திருந்தது போலவே இப்போதும் அதே இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சொர்ணமாதேவி என்பதற்கும் சொர்ணதேவி என்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஆனால் காந்தன் என்ற பெயருக்கும் வைதும்பராயன் என்ற பெயருக்கும் சிறிதளவும் சம்பந்தமில்லையே? வைதும்பராயன் என்ற பெயர் உங்களுக்குச் சிறிதும் பொருத்தமில்லை" என்றாள் சொர்ணமாதேவி.

"என் தகப்பனார் எனக்குப் பொருத்தம் பார்த்துப் பெயர் வைக்கவில்லை. என் தாத்தாவின் பெயரை எனக்கு வைத்தார். உனக்குப் பிடித்தமான பெயராலேயே என்னை அழைக்கலாம். அதுவே எனக்குப் பேரின்பமளிக்கும்" என்றார் காந்தன்.

சொர்ணமாதேவி சிரித்துக் கொண்டே, "முன்னம் நான் கூறியதையே இப்போது என்னிடம் திருப்பிக் கூறுகிறீர்கள். அது போகட்டும், முதன் முதலில் உங்கள் சங்கத்தைப் பற்றி எனக்கும் என் தகப்பனாருக்கும் தெரியப்படுத்தினீர்கள் அல்லவா? அப்போது குடியாட்சியை ஸ்தாபிக்க வேண்டும் என்று ஒரு மகானுக்குத் தோன்றியது என்றும் அதற்காக ஓலைகள் எழுதி அனுப்பினார் என்றும் கூறினீர்களே, அந்த மகான் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?" எனக் கேட்டாள்.

"நேற்றையதினம் உன்னைத் தன் இல்லத்தில் அன்புடன் வரவேற்று உபசரித்தாரே, அந்தப் பெரியவர்தான்."

சொர்ணமாதேவி சிறிது நேரம் யோசித்தாள். பின்னர், "அவரை இந்தக் காரியத்தில் இறங்கும்படி தூண்டியதும் தாங்கள் தானே?" எனறு கேட்டாள்.

"உன் கண்களைப் போலவே உன் அறிவும் பிரகாசமாயிருக்கிறது. கண்ணே! இந்நாட்டில் இனி அரசனும் இல்லை; அடிமையும் இல்லை" என்றார் காந்தன்.

"நீங்கள் நினைப்பது தவறு! இப்பொழுதும் எப்பொழுதும் நான் உங்களுடைய அடிமையே அல்லவா?" என்றாள் சொர்ணமாதேவி.

கப்பல் புறப்பட்டது



எங்கள் பயணத் திருநாள் நெருங்கியது. ஏப்ரல் பதினான்காம் தேதி! பொழுது புலர்ந்தது. புத்துணர்ச்சி மலர்ந்தது. எங்கள் இதயங்களெல்லாம் சுறுசுறுப்பு உதயமாயிற்று.

எல்லோரிடத்திலும் விடைபெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எல்லையற்ற ஆர்வத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் திணறினோம். கண்ணில் தென்பட்ட நண்பர்கள் கலையன்பர்கள் ஒவ்வொருவரும் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப்" பிரியா விடை தந்தனர்.

"கலைத் தூதர்களே! உங்கள் கலைத் தோள்களிலே மகத்தான பொறுப்பைத் தாங்கிச் செல்கிறீர்கள்! எனவே பொறுப்புடன் கலை மணம் பரப்பிச் சிறப்புடன் வருக!" என்று சொல்வன போலிருந்தன, அன்பர்கள் எல்லாம் சூட்டிய அன்பு மாலைகள்!

குழுவினர் முப்பத்தொரு பேர்களில் ஏழு பேர்கள் பெண்கள். அனைவருக்கும் "வாழ்வு சிறிது வளர் கலை பெரிது" என்ற பொன்மொழி பொதிந்த அடையாளச் சின்னங்கள் வழங்கப் பட்டிருந்தன. பொதுச் சின்னம் போதாதென்று பொது உடைகளும் வழங்கப்பட் டிருந்தன. மங்கலான மஞ்சள் வர்ணத்தில் சூட்டும் கோட்டும் ஆண்களுக்குப் பொது உடையாக அமைந்தன. அரக்கு வர்ணப் பட்டுப் புடவையும் பச்சைநிறப் பட்டு ரவிக்கையும் பெண்மணிகளின் பொது உடைகள்.

அத்தனை பேர்களிலும் ஒரே ஒருவர் மட்டும் பொது உடைக்கு விதி விலக்காக நின்றார். அவர் யார் தெரியுமா? அண்ணா திரு டி. கே. முத்துசாமி அவர்கள்தாம். வழக்கம் போல் எளிதான முறையில் வெள்ளை வேட்டியும் முழுக்கை வெண் சட்டையும் அணிந்துகொண்டு தான் புறப்பட்டார். ஆயினும் அடையாளப் பொதுச் சின்னத்தை அணிந்து கொள்ள அவர் தயங்கவில்லை. அனைவருக்கும் தலைவர் என்ற நிலையில் அதுவே அவருக்கு ஒரு சிறப்பாக இருந்தது.

பொது உடை அவசரம் அவசரமாகத் தயாரிக்கப் பட்டது என்பதையும் அவசியம் குறிப்பிட வேண்டும். புறப்படும் அன்றைக்குத்தான் குழுவினர் தையற்காரரிடமிருந்து வாங்கி அணிந்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவு என்ன, தெரியுமா? ஒரு சில கோட்டுகளில் போதுமான பித்தான்கள் வைக்கத் தையற்காரர் மறந்துவிட்ட வேடிக்கையைக் கண்டோம்! வேறு சில கோட்டுகளில் கழுத்துப் பட்டை





யின் இரு முனைகளும் தென் துருவம் வட துருவம்போல் வக்கரித்து நின்றன! ஒரிரு கால் சட்டைகளோ கெண்டைக் காலுக்குக் கீழே இறங்குவது மிகவும் மரியாதைக் குறைவான காரியம் என்று மேலேயே நின்று விட்டன!

இந்தப் போது உடைகளில் சிலவற்றுக்குக் கப்பலில் ஒரு விபத்து ஏற்பட்டது. என்ன விபத்து என்பதைப் பின்னால் அறிவீர்கள்.

ஒவ்வொருவரும் பயணமூட்டைகளை முன்தினமே கப்பலில் அவரவர்க்கு உரிய அறைகளில் வைத்துப் பூட்டி விட்டோம். ஆதலால் கனமான மூட்டை முடிச்சு எதுவும் இல்லாமல் கம்பீரமாகக் கையை வீசிக் கொண்டே கப்பலடிக்குச் சென்றோம்.

துறைமுகத்தில் பொதுமக்களின் ஆரவாரம் எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. தேசியத் திருவிழாக்களில் மக்கள் ஆசையோடு கூடுவது போல் ஆங்காங்கு ரசிகர்கள் ஆவலோடு குழுமி நின்றனர்.

முதன் முதலாகச் சுகாதார அதிகாரிகளிடம் சென்றோம். ''உடல் நிலை கப்பல் பிரயாணத்துக்கு ஏற்றதுதான்'' என்று நற்சான்று பெற்றுக் கொண்டோம்.


அடுத்தாற் போல் சுங்க அதிகாரிகளிடம் நாங்கள் கொண்டு சென்ற கைப்பொருளின் கணக்கை அறிவித்தோம்.


இனிமேல் நேரே சென்று கப்பலில் ஏறிக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டது. ஆனால் சுங்கச் சோதனை நிலையத்தைத் தாண்டிக் கப்பலின் அடிவாரம் போல் விளங்கிய பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்ததும் மக்கட் கடலில் சிக்கிக் கொண்டோம்.

''கலை அன்பர்களே! அமைதியாக இருங்கள்! கலைஞர்களுக்கு வழி விடுங்கள்!'' என்று ஒலிபெருக்கியின் மூலம் வேண்டுகோள் விடுக்கப் பட்டது. எங்களுக்கு ஒரே வியப்பாக இருந்தது. ஒரு நாளும் இல்லாத திருநாளாகத் துறைமுகத்தில் கப்பலடியில் ஒலிபெருக்கி ஏற்பாடும் செய்யப்பட்டிருந்த சிறப்பை எண்ணி எண்ணிப் பூரிப்படைந்தோம்.

ஒலி பெருக்கியின் அருகிலே நின்று உணர்ச்சி ததும்ப வாழ்த்தி வழியனுப்பும் பொறுப்பிலே வீறு கொண்ட சிங்க ஏறாக விளங்கினார் நடிக மாவீரர் திரு எம். ஜி. ஆர். தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயலாளரான அவருடன் நூற்றுக்கணக்கான சக நடிகர்களும் கலையன்பர்களும் கூடியிருந்து ஆசி கூறி மாலை சூட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

உள்ளன்போடு நெருக்கித் திணறிக் கொண்டிருந்த அந்த மாபெருங் கூட்டத்திலே அரசியல் தலைவர்கள், சென்னை அரசாங்க அதிகாரிகள், நீதிபதிகள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் சினிமாக் கலைஞர்கள், நடிகர்கள், ரசிகர்கள் எல்லாரும் கலந்து கொண்ட சிறப்பை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தோம். கலையன்பர்கள் காட்டிய உற்சாகத்தில், கப்பலடியில் காத்துநின்ற எங்கள் குடும்





கப்பலைத் துறைமுகத்தோடு இணைத்திருந்த இரும்புப் பாலத்தில் கலைக் குழுவினர்.

பத்தார், உற்றார், உறவினர் ஆகியோரிடம் கூடச் சற்று நேரம் அளவளாவி விடைபெறுவதற்குக் கிடைக்கவில்லை!

கப்பலின் உச்சித் தளத்திலே நின்ற காப்டன் திரு சுப்ராஜியும் ஏனைய அதிகாரிகளும் மக்களின் உணர்ச்சிப் பெருக்கைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தனர். கப்பல் நாயகருக்கு ஒலி பெருக்கியின் மூலம் பின்வருமாறு விருது கூறி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

"மதிப்புக்குரிய கப்பல் நாயகரே! ஏனைய கப்பல் அதிகாரிகளே! தென்னாட்டின் கலைச் செல்வங்களை உங்கள் கப்பலிலே ஏற்றி யனுப்புகிறோம். அவர்களைப் பத்திரமாகக் கொண்டு சேர்க்கும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறோம். உங்களுக்கும் கப்பலில் உள்ள மற்றப் பிரயாணிகளுக்கும் உற்சாகம் ஊட்டும் சில கலை நிகழ்ச்சிகளைக் கலைஞர்கள் நடத்திக் காட்டுவார்கள் ......"


இந்த அறிவிப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் முழக்கப் பட்டமையால் கப்பல்நாயகரும் கப்பலில் இருந்த ஏனைய பிரயாணிகளும் கை கொட்டித் தங்கள் களிப்பைய றிவித்தனர்.

குழுவினருக்குச் சூட்டப்பட்ட மாலைகளுக்குக் கணக்கே யில்லை! "மலையாகக் குவிந்த மாலைகளின் கனத்தைக் கப்பல் தாங்குமா?" என்று வேடிக்கையாகக் கேட்டார் கப்பல் அதிகாரி ஒருவர். "மாலைகளுக்கும் சட்டணம்' போடலாம் போலிருக்கிறதே!" என்றார் இன்னொருவர்.

பாராட்டுரைகளும் வாழ்த்தொலிகளும் முழங்கக் கப்பலில் ஏறுவதற்காகப் பெருங் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நாங்கள் சென்ற சமயம் குள்ளமான அன்புருவம் ஒன்று கையிலே ஒரு கூடையுடன் நுழைந்தது. அந்தக் கூடையை எங்கள் கையிலே திணித்தது. "இதிலே ஆயிரம் எலுமிச்சம் பழங்கள் உள்ளன! பிரயாணத்துக்கு மிகவும் பயன்படும்!" என்று உளைவோடு கூறித் தழுவிய அந்த அன்பரை உற்று நோக்கினேம். அவர்தான் திரு பி. டி. சம்பந்தம் என்று அறிந்ததும் புளகாங்கித உணர்ச்சி பெற்றேம்.

ஒன்பது நாட்கள் கப்பலிலே இருக்கவேண்டும் என்பதை நாங்கள் அறிவோம். ஆதலால் ஒரு கூடை எலுமிச்சம் பழத்தையும் பதினெட்டு ஊறுகாய் பாட்டில்களையும் நாங்கள் ஏற்கெனவே ஆயத்தமாக வைத்திருந்தோம். அவற்றுடன் நண்பரின் எலுமிச்சம் பழங்களையும் சேர்த்துக் கொண்டோம்.

பிற்பகல் சுமார் மூன்றரை மணிக்கு ஆனை வரும் கப்பலின் மேல் தளத்துக்கு வந்தோம். அடிவாரத்தில் நின்ற அன்பர்களோடு உரத்த குரல் கொடுத்தும், சைகையின் மூலமாகவும் அளவளாவிக் கொண்டிருந்தோம். எங்களை விட்டுப் பிரிய மனமில்லாத நண்பர்கள் பலர் கப்பலுக்குள்ளேயே வந்து கப்பல் புறப்படும் வரையில் எங்களுடனே கலந்து நின்று அன்புபாராட்டி, "இந்தக் கப்பல் உங்கள் சொந்தக் கப்பல் மாதிரி. எல்லா வசதிகளும் கிடைக்கும். கூச்ச



சென்னை ராஜ்யக் கப்பல் நாயகர் திரு சுப்ராஜ்



ஊரிலிருந்து வரும் பாட்டி: ஏண்டாப்பா, சௌக்கியமா! உன் மனைவி முன் மாதிரியே இன்னும் அழகாக இருக்கிறாளா?
'பேரன்:— ஆம்! இருக்கிறாள். ஆனால் முன்னை விடக் கொஞ்ச நேரம் ஆகிறது......!

யில்லாமல் கேட்டு வசதி பெறுங்கள்!'' என்ற உற்சாகமான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தோம். தமக்கே உரித்தான பாணியில் இந்த ஆதரவுக் குரலைக் கொடுத்தவர் கப்பல் கம்பெனியின் ஏஜண்டும், சிறந்த ரசிகருமான திரு சையத் ஹாஸன் என்பதை அறிந்து அவருக்கு நெஞ்சு கலந்த நன்றியை அறிவித்தோம்.

ஒரு நண்பர் ''புத்தகவேரி, சார்! இந்தப் புத்தகத்தை வைத்துக் கொள்ளுங்கள்! மிகவும் பயனுள்ளதாக இருக்கும்'' என்று ஒரு பெரிய புத்தகத்தைத் தந்தார். அந்தப் புத்தகத்தின் பெயர் ''மலேயாவில் திக்விஜயம்'' என்பது. பயணத்துக்குப் பொருத்தமான பரிசாக அமைந்தது அந்நூல்.

பிரயாணிகள் தவிர ஏனையோர் அனைவரும் கீழே இறங்கிய பின், துறைமுகத்தோடு கப்பலை இணைத்திருந்த இரும்புப் பாலம் இயந்திர உதவியால் தூக்கி அகற்றப்பட்டது.

பிற்பகல் சரியாக 4-25 மணிக்குச் சென்னை ராஜ்யக் கப்பல் துறைமுகத்தை விட்டு நகரத் தொடங்கியது. அடிவாரத்தில் குழுமியிருந்த அன்பர்கள் அனைவரும் விண்ணதிர வாழ்த்தொலிகள் முழக்கிய வண்ணம் இருந்தனர். அந்த முழக்கத்தோடு எங்கள் பதில் முழக்கம் கொஞ்சிக் குலாவியது.

துறைமுகத்துக்கும் கப்பலுக்கும் இடையில் உள்ள தூரம் கொஞ்சங் கொஞ்சமாக அகன்று கொண்டேயிருந்தது. ஆனால் கரையில் நின்ற அன்பர்கள் அகன்று விடவில்லை. கண்ணிமையாமல் எங்களையே நோக்கி மெய்மறந்து நின்ற காட்சி எங்களையும் அசைவற்றுக் கப்பல் தளத்திலே நிற்கச் செய்தது.

கரை மறையும் வரையிலும் அப்படியே தளத்திலே நின்றோம். தமிழ் எழுத்தாளர் சங்கமும் கல்கி காரியாலயத்தாரும் எங்களுக்கு அளித்த வழியனுப்பு விருந்தின்போது நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜி அவர்கள் கூறிய ஓர் அறிவுரை எங்கள் உள்ளத்திலே நின்று ஒளிவீசும் ஞானவிளக்காக அமைந்தது.

''மலேயாவின் உள்நாட்டுச் சிக்கல்களிலே சிக்கிக் கொள்ளாமல் ஐம்பத்தொரு பேர்களும் முழுமையாகத் திரும்பி வாருங்கள். அதுதான் கலையின் வெற்றி'' என்ற ராஜாஜியின் ஆசியுரையை எப்படி மறக்க முடியும்?

சென்னைத் துறைமுகமும் நகரப் பொலிவும் எங்கள் கண்ணுக்கு எட்டாமல் விலகிய நேரத்திலேதான் கப்பலுக்குள் சென்றோம்.

அப்பொழுதுதான் மாலைக் காப்பி சாப்பிட வேண்டும் என்ற நினைவு ஏற்பட்டது. உடனே உணவருந்தும் இடத்துக்குள் நுழைந்தோம்.

உணவு பரிமாறும் பணியாளர் ஒருவர் 'சிடுசிடு' என்று முகத்தை வைத்துக் கொண்டு ''தேநீர் தரும் நேரம் கடந்து விட்டது. இப்போது ஒன்றும் கிடைக்காது!'' என்றார்.

எங்களுக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்புதானே 'இந்தக் கப்பல் உங்கள் சொந்தக் கப்பல் மாதிரி!' என்று கப்பல் ஏஜண்டு சொல்லிச் சென்றார்! தேவையான சமயத்தில் தேநீர்கூடக் கிடைக்கவில்லையே என அங்கலாய்த்தோம்.

சற்று நேரத்துக்குப் பின் பணியாளருக்குக் கொஞ்சம் இரக்கம் வந்தது! ''சரி, இன்று மட்டும் தேநீர் தருகிறேன். நாளை முதல் சரியான நேரத்தில் வந்துவிட வேண்டும்!'' என்று சொன்னார் அவர்.

''கேசரியும் காப்பியும் மட்டும் கிடைத்தன. காரம் எதுவும் கிடையாதா?'' என்று கேட்டோம். ''காரம் அவருடைய (பணியாளருடைய) பேச்சிலேதான் இருக்கிறதே!'' என்றார் அருகிலிருந்த நண்பர் ஒருவர்.

''காரம் நான் தருகிறேன்'' என்று எங்களை அழைத்துச் சென்றார் நகைச்சுவை நடிகர் திரு டி. என். சிவதாணு.

''இவரிடம் ஏது காரம்? நல்ல நகைச்சுவையுடையவராயிற்றே!'' என்று மிகுந்த வியப்புடன் நோக்கினோம்.

''உண்மையாகவே என்னிடம் காரம் இருக்கிறது. ஒரு டப்பா நிறையச் சீடை கொண்டு வந்திருக்கிறேன்....!'' என்றார் அவர்.

நெடுந்தூரப் பயணத்துக்கு ஏற்றதான சீடை என்ற அருமையான பணியாரத்தைக் கண்டு பிடித்த நம்முடைய முன்னோரின் தீர்க்கதரிசனத்தை எவ்வளவு பாராட்டினாலும் போதாது அல்லவா?

சற்று நேரங்கழித்து எல்லாரும் அவரவர்கள் அறைக்குள் நுழைந்தோம்.

தமிழ்ப் பெருமக்களின் அன்பு அலைகள் தந்த இன்பத்தால் ஆழ்கடல் அலைகளின் அசைவுத் தொல்லை சிறிதும் இல்லை; தாயானவள் தொட்டிலை ஆட்டிக் குழந்தையைத் தூங்க வைப்பது போல கடல் அன்னை அலைக் கரங்களால் தாலாட்டிக் கப்பலுக்கு நளினமான அசைவூட்டினாள். கப்பலில் பொருத்தப்பட்ட வானொலியிலே மிதந்த இலேசான இன்னிசை எங்களுக்குத் தாலாட்டுப் பாடலாக ஒலித்தது. எனவே நித்திரையின் அரவணைப்பிலே நிம்மதி பெற்றோம். (தொடரும்)






திரு.வி.க.நகர்

தமிழும், தமிழ்நாடும், தொழிலாளரும் உய்யப் பாடுபட்ட உத்தம ஞானியான திரு வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களுக்குச் சென்னை நகரை அடுத்துள்ள செம்பியத்தில் ஒரு ஞாபகார்த்தச் சின்னம் எழுப்பிப் பாராட்டி யிருக்கிறார்கள். திரு வி. க. நகர் என்று ஒரு நகரையே உருவாக்கி யிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்காகக் கட்டப் பட்ட அந்த நகரை நமது முதன் மந்திரி திரு காமராஜ் ஆகஸ்டு 16-ந் தேதி திறந்துவைத்துத் தமிழ்த் தந்தைக்கு அஞ்சலி செலுத்தினார். உழைப்பின் பெருமையை உணர்த்திய உத்தம ரான திரு வி. க. வின் உருவச்சிலையை நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் திறந்து வைப்பதையும், தொழிலாளர்பாக்கத்தையும், திரு வி. க. வின் திருஉருவச் சிலையையும் படத்தில் காணலாம்







மதுரையில், சிரஞ்சீவி கே. சுவாமி நாதன் பி. எஸ்ஸி.க்கும், சௌபாக் கியவதி பத்மினிக்கும் கோலாகல மாகத் திருமணம் நடந்தது.



பல்லாவூரில் திரு கிருஷ்ணன் அவர்களுக்கும் திருமதி ராதா வுக்கும் மிகச் சிறப்பாகத் திரு மணம் நடைபெற்றது.

வாழ்க




சிரஞ்சீவி கோபாலகிருஷ்ணனுக்கும் சௌபாக்கியவதி பார்வதிக்கும் மணப்பாடத்தில் சிறப்பாகத் திரு மணம் நடந்தேறியது.



கோயமுத்தூர், பிரபல அட்வகேட். திரு ஜி. வெங்கட்ராமணய்யரின் சகோதரர் புதல்வி திருமதி சாந்தாவுக்கும், திரு பால சுப்பிரமணியத்துக்கும் வெகு விமரிசை யாகத் திருமணம் நடந்தது.



கல்கத்தா இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸைச் சேர்ந்த சிரஞ்சீவி எஸ். ராமமூர்த்திக்கும், சௌபாக் கியவதி மைதிலிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.



பம்பாய் சார்ட்டர்ட் அக்கௌண்டெண்ட் திரு எஸ். வெங்கடகிருஷ்ணனின் புதல்வி திருமதி விஜயலக்ஷ்மிக்கும் திரு கே. எஸ். சந்திரசேகரன் அவர்களுக்கும் பங்களூரில் திருமணம் நடைபெற்றது.




புதுதில்லி இந்திய சர்க்கார் காரியாலயத்தைச் சேர்ந்த திரு சீனிவாசனுக்கும், திருமதி லலிதாவுக்கும், சென்னையில் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது.

மணமக்கள்



காட்டிலாகா அதிகாரி திரு வீ. என். சுந்தரம் அவர்களுக்கும் சௌபாக்கியவதி சொர்ணலக்ஷ்மிக்கும் பாலக்காட்டில் அதிவிமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



பம்பாய், இந்துஸ்தான் லீவர் கம்பெனியைச் சேர்ந்த திரு எல். வி. வேங்கடேஸ்வரன், திருமதி அன்னபூர்ணியைத் திருமணம் புரிந்து கொண்டார்.



ரங்கூன் மெர்க்கெண்டைல் பாங்கியைச் சேர்ந்த திரு வெங்கடராம், திருமதி தனலக்ஷ்மியை மணம் புரிந்துகொண்டார்.

★

பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவை இந்தியாவிலுள்ள அல்பேனியத் தூதுவர் உல்வி லுலோ அவர்கள் ஆகஸ்டு 28ந் தேதி சந்தித்து அளவளாவினர்.

★






கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தினர் ஆகஸ்டு 16ந்தேதி சுதந்திர நூற்றாண்டு விழாவையொட்டி, வீர முழக்கம் செய்த வீரபாண்டியக் கட்டப்பொம்மனின் திருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். இவ்விழாவில் திரு விவேகானந்த முகர்ஜியும், திரு ஆர். நாராயணன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கர்நாடக சங்கீத வித்வான் முசிறி ஸ்ரீ சுப்பிரமண்ய அய்யருக்கு ஜனாதிபதிப் பரிசு கிடைத்ததைப் பாராட்டிப் பம்பாய் போதர் கல்லூரியில் பாரதீய சங்கீத கலைக் கழகத்தினர் பாராட்டு விழா நடத்தினர். அந்த வைபவத்திலே திரு ஆர். வரதாச்சாரி அவர்கள் வெள்ளிப் பரிசை முசிறி அவர்களுக்கு வழங்குகிறார்.



பிரிட்டானியா

ஜெட்-பிராப் விமானத்தை பி. ஓ. ஏ. ஸி. பெருமையுடன் வழங்குகிறார்கள்,




இப்பொழுது அது உபயோகத்திற்கு வந்துள்ளது!

யு.கே., தூரகிழக்கு நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும்

உலகிலே மிகத் துரிதமானதும், சுகமாக இயங்குவதும், அதிக விசாலமான இடமுள்ளதுமான விமானம்

பிரிட்டானியாவை நேரில் வந்து பாருங்கள்-இந்த ஜெட் பிராப் விமானத்தின் விசாலமான இடத்தையும் பிரம்மாண்டமான ஸைஸையும் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நிமிஷத்திற்கு 6 மைல்களுக்கு மேலாகச் செல்லும்பொழுதும், பிரயாணிகளுக்கு விமானத்தின் அசைவு தெரிவதில்லை. வழி முழுவதும் சரிசமமான சீதோஷ்ண நிலையைப் பெற பிரிட்டானியா விமானங்களில் ராடார் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. டிலக்ஸ் முதல் வகுப்பு அல்லது மிதமான கட்டணங்களில் டூரிஸ்ட் ஸர்வீஸ்களும் உள்ளன. இப்பொழுதே புக் செய்யுங்கள்!

விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் டிராவல் ஏஜெண்டையோ அல்லது பம்பாய், கல்கத்தா, டில்லி மற்றும் மதராஸ் இவ்விடங்களிலுள்ள பி. ஓ. ஏ. ஸி. ஆபீஸையோ கலந்து ஆலோசியுங்கள்.



விமான பிரயாணத்தில் உலகிலே தலைசிறந்த

பி. ஓ. ஏ. ஸி. **B·O·A·C**

உங்கள் நலனைக் கருதுகிறது

பிரிட்டிஷ், ஓவர்ஸீஸ், ஏர்வேஸ். கார்ப்பரேஷன். க்வான்டாஸ், எஸ். ஏ. ஏ. மற்றும் டி. இ. ஏ. எல். உடன் இணைக்கப்பெற்றது

அழியாச் செல்வம்

அழ. வள்ளியப்பா

எட்டய புரத்து மன்னருடன்
  இனிதாய்க் காலம் கழித்திடவே,
பட்டணம் சென்றனர் பாரதியார்;
  பலநாள் சென்று திரும்பினராம்.

வாசலில் குதிரை வண்டியுமே
  வந்தது ; நின்றது. கண்டதுமே,
பாசமாய் வாசலை நோக்கிவந்தார்
  பாரதி மனைவி செல்லம்மா.

வண்டியை விட்டுப் பாரதியார்
  மகிழ்வுடன் கீழே இறங்கி வந்தார்
வண்டியி லிருந்த பொட்டணங்கள்
  வந்தன பாரதி பின்னலே.

பட்டுப் புடவை, பாத்திரங்கள்
  பலப்பல நல்ல பொருள்களுமே
பொட்டணத் துள்ளே இருக்குமெனப்
  பிரித்துப் பார்த்தனர் செல்லம்மா.

பட்டுப் புடவை அங்கில்லை
  பாத்திர பண்டம் ஏதுமில்லை
பொட்டணத்துள்ளேஇருந்ததெல்லாம்
  புத்தகம், புத்தகம், புத்தகமே !

அரசர் கொடுத்தது ஐந்நூறு
  அத்தொகை முழுதும் புத்தகமாய்
இருப்ப தறிந்ததும், ''ஐயையோ !
  ஏனே இப்படிச் செய்தீர்கள் ?

எனக்குப் பிடித்தது ஏதுமில்லை.
  இதுபோல் காசைக் கெடுப்பதுவோ!''
சினத்துடன் மனைவி பேசிடவே,
  சிரிப்புடன் பாரதி கூறினரே :

'' பட்டுப் புடவை, வெள்ளியிலே
  பாத்திரம் எதுவும் வாங்காமல்,
பட்டணம் சென்று வீணைக்
  பணத்தைக் கெடுத்ததாய்
                எண்ணுகிறாய்.

அழியும் செல்வம் நான்கொடுத்தே
  அழியாச்செல்வம் கொண்டுவந்தேன்.
அழகுக் கருத்தைப் படித்தறிவோம்
  ஆனந்த மாக வாழ்ந்திடுவோம்.''







மங்கு புலவரைக் கூர்ந்து நோக்க ஆரம்பித்ததும் காசிமின் கால்கள் வெடவெட வென்று நடுங்கலாயின. மங்கு அதிக கோபம் தன் வேலையைக் காட்டிக் கொள்ள வில்லை. "இந்த அடிமைப் பயல்கள் எல்லா ருமே ஒரேமாதிரிதான். யார் எவன் என்று அடையாளம் தெரிவதில்லை" என்று தனக் குள் சொல்லிக் கொண்டான். காசிமுக்குப்





போன மூச்சு திரும்ப வந்தது. வயிறு புடைக் கத் தின்ற பிறகு மங்கு மது அருந்த ஆரம் பித்தான். காசிம் உயர்ந்த மதுவை மங்கு வின் தங்கக் கோப்பையில் ஊற்றிக் கொடுத்தான். பாதி மயக்கத்தில் மங்கு தள்ளாடிக் கொண்டிருக்கும் போது காசிம் தயாராக வைத் திருந்த ஒரு கறுப்புப் பொடியை மங்கு அறியாதபடி மதுவில் கலந்து கொடுத்தான்.






முதலிலேயே போதை ஏறிய மங்கு மயக்க மருந்து கலந்த மதுவைக் குடித்தான். அவன் தலை கிறுகிறுத்தது. கண்கள் தூக்கக் கலக் கத்தால் சொக்க ஆரம்பித்தன.

சிறிது நேரத்தில் மந்திரவாதி மங்கு குறட்டை விட்டுக் கொண்டு அயர்ந்து தூங்கிப் போனான். இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தானே காசிம் எதிர் பார்த்தான்!



தூங்கும் மங்குவாள் இடையிலிருந்த
மந்திர பெட்டியையும் கொத்துச் சாவியை
யும் எடுத்துக் கொண்டு படபடப்புடன் அந்த
அறையிலிருந்து வெளியேறினான் காசிம்.



மங்குவாள் மந்திர சாதனங்கள் உள்ள
ரகசிய அறையின் பிரம்மாண்டமான
கதவைத் திறந்து கொண்டு உள்ளே
நுழைகிறான்.



அந்த மந்திர அறைக்குள் நுழைந்த
காசிமின் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்
துக் கொண்டது. மண்டை ஓடுகளும் மந்தி
ரக் குடுவைகளும் நிறைந்து கிடந்தன.



காசிம் தான் நாடி வந்த பொருள்
எங்கே என்று தேடலானான். அரச
குமாரி ஆயிஷாவை அடைத்து வைத்
துள்ள பச்சை சீசாவை முடிவில் கண்டு



-பிடித்து விட்டான். நீண்ட கழுத்துடைய
சீசாவுக்குள் ரோஜா நிறப் புகையின்
நடுவே சின்னஞ்சிறிய உருவில் ஆயிஷா
அடைபட்டுக் கிடப்பதைக் கண்ட காசி



மின் மகிழ்ச்சி தாங்கவில்லை. 'சீசாவைக்
கண்டு பிடித்தாகி விட்டது. இனி அதிலிருந்து
அவளை விடுதலை செய்வது எப்படி?'—
சிந்திக்கலானான் காசிம். _ (தொடரும்)

மாயப் பந்து

23. கிழவியின் உதவி

சற்று நேரம் கழித்து மால்கோஷும், கலாவும் மூர்ச்சை தெளிந்து, பயந்து கொண்டே கண் விழித்துப் பார்த்தார்கள். அப்போது அவர்களுக்கு வியப்பையளித்த அதிசயக் காட்சியைப் பார்த்தார்கள். பெரிய பாலைவனம் முழுவதும் காணப்பட்ட மாயப் பட்டணத்தை அங்கு காணவில்லை. அதற்குப் பதிலாக முதன் முதலில் மால்கோஷும், கலாவும் பார்த்தார்களே, அந்தப்பொம்மைப் பட்டணம்தான் இருந்தது. இரண்டு தலை ராட்சதன் பொம்மையாக முதலில் இருந்த இடத்தில் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக மால்கோஷும், கலாவும் இப்போது நின்று கொண்டிருந்த அந்த இடத்திலேயே ஒரு சிறிய பொம்மைத் தோற்றத்துடன் காணப்பட்டான். "அண்ணா! இது என்ன, நாம் இவ்வளவு நேரம் சொப்பனமா கண்டோம்? இன்னும் எனக்கு ஏற்பட்ட பயம் தெளியவில்லையே!" என்றாள் கலா.

"சொப்பனம் இல்லை. எல்லாம் உண்மையாக நடந்ததுதான். கடவுள் கிருபையால் நாம் பிழைத்தோம். இதோ பார், நமக்கு எவ்வளவு அருகில் இரண்டு தலை ராட்சதன் வந்திருக்கிறான் என்று. அவன் பொம்மையாக மாறாமல் இருந்தால் நாம் இருவரும் அவன் வயிற்றுக்குள் இருக்க வேண்டியவர்கள். சரி, இருக்கட்டும், முதலில் நாம் பந்தையும் ஜமக்காளத்தையும் கண்டு பிடிக்க வேண்டும். அவற்றைத் திரும்பப் பெற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்" என்றான் மால்கோஷ்.

அப்பொழுது கலா, "அண்ணா! விளையாடாதே. அதோ பார்த்தாயா, அந்தக் கழுகை" என்று சுட்டிக் காட்டினாள். அவர்களுக்கு எதிரில் உள்ள மரத்தில் அப்பொழுதுதான் உட்கார்ந்த ஒரு கழுகைச் சுட்டிக் காண்பித்தாள். அந்தக் கழுகை மால்கோஷ் பார்த்தான்.

"கலா! அன்றையதினம் நம்மிடமிருந்து பந்தையும், ஜமக்காளத்தையும் கொண்டு போயிற்றே, அதே கழுகுதான். அதில் சந்தேகமில்லை. பார், நான் கல்லாலே அடித்தேனே, அதன் ஒரு காலில் அந்தக் கல் பட்டதல்லவா, அந்தக் காலைக் கீழே வைக்காமலே இருக்கிறது" என்றான் மால்கோஷ்.

"அந்தக் கழுகின் விழிகளைப் பார்த்தால் சாதாரணக் கழுகு



இல்லை என்பது தெளிவாக விளங்குகிறது. இந்தக் கழுகை எப்படியாவது பிடிப்பதற்கு வழி கண்டு பிடிக்க வேண்டும்" என்று மால்கோஷ் சொல்லிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவர்களுக்கு எதிரே உள்ள மரத்தில் உட்கார்ந்திருந்த கழுகு பறந்து மால்கோஷுக்குப் பின் புறமாக இருந்த மரத்தில் உட்கார்ந்தது. உடனே மால்கோஷும், கலாவும் கழுகு உட்கார்ந்திருந்த மரத்தடிக்குச் சென்றார்கள். கழுகு பறந்து சற்றுத் தூரத்துக்கப்பால் உள்ள ஒரு மரத்தில் போய் உட்கார்ந்தது. மால்கோஷும், கலாவும் அங்கேயும் சென்றார்கள். உடனே அந்த இடத்தை விட்டு வேறு ஒரு மரத்துக்குச் சென்றது கழுகு.

"கலா! இந்தக் கழுகின் போக்கே ஒரு தினுசாக அல்லவா இருக்கிறது! நம்மிட



மிருந்து தப்பிப் பறக்க வேண்டும் என்று நினைத்தால் நம்மைப் பார்த்த உடனே அது பறந்தல்லவா போயிருக்க வேண்டும்? இந்தக் கழுகு நம்மைப் பார்த்துப் பார்த்து மெதுவாகப் பறந்து போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தால் ஏதோ விசேஷமிருக்கும் போல் இருக்கிறது. எதற்கும் பயப்படாமல் அந்தக் கழுகைப் பின்பற்றுவோம்'' என்றான் மால்கோஷ்.

மால்கோஷுக்கும், கலாவுக்கும் வழி காட்டிக் கொண்டே வெகு தூரம் பறந்து, கழுகு கடைசியில் வெள்ளம் பெருக்கெடுத்திருந்த ஒரு நதிக்கரையிலுள்ள ஒரு மரத்தின் மீது வந்து உட்கார்ந்தது. மால்கோஷும், கலாவும் அங்கே சென்றதும் கழுகு தடால் என்று பறந்து பூமியில் உட்கார்ந்தது. பிறகு அது ஒருவர் கண்ணுக்கும் அகப்பட வில்லை.

''கடைசியில் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே. கழுகு எங்கேயோ போய் விட்டதே. அந்தக் கழுகைப் பற்றி விசாரிக்கலாம் என்றால் மனிதர்களின் நடமாட்டமே இங்கே காணவில்லையே. கழுகு கடைசியில் மறைந்த இடத்தில் ஒரு குடிசை இருக்கிறதே, அங்கே சென்று குடிசையில் இருப்பவர்களை விசாரிக்கலாம், வா'' என்று கலாவை அழைத்துக் கொண்டு குடிசையருகில் போனான்.

''உள்ளே யார்? சற்றுக் கதவைத் திறவுங்கள்'' என்று கூறிக் கொண்டே மால்கோஷ் கதவைத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது.

திறந்த கதவுக்கு அருகில் யார் நின்று கொண்டிருந்தார்கள், தெரியுமா? மந்திரக் கிழவிதான். அவளைப் பார்த்து மால்கோஷும் கலாவும் அயர்ந்து போய்விட்டார்கள்.

அவர்களைப் பார்த்த மந்திரக் கிழவி சிரித்துக்கொண்டே, ''நீங்கள் எங்கு வந்தீர்கள்? நான் போகும் இடத்திற்கெல்லாம் நீங்கள் இருவரும் வந்து கொண்டே இருப்பீர்கள் போலிருக்கிறதே!'' என்றாள்.

உடனே மால்கோஷ், மந்திரக் கிழவி கொடுத்த மந்திர விதையினால் தான் ஜெயித்த காரியத்தை விவரித்தான். மந்திரக்கிழவி செய்த உபகாரத்தை ஒருநாளும் தான் மறக்க முடியாது என்றும் கூறினான்.

மந்திரக்கிழவி சிரித்துக் கொண்டே, ''உங்களுக்குப் பெயரும் புகழும் வந்தால் எனக்கு மிகவும் சந்தோஷம். ஒருவரிடத்திலும் மிருதியாக அபிமானம் கொள்ளாத நான் என்னை அறியாமலே உங்கள்மீது மிகவும் அன்பு கொண்டிருக்கிறேன். உங்கள் இருவரையும் இங்கு பார்த்ததில் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன், தெரியுமா? நீங்கள் இருவரும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெற்று உங்கள் தகப்பனாரிடம் சேர்ந்தால் எனக்கு அதுவே மகிழ்ச்சிதரக் கூடிய சம்பவம்!'' என்றாள்.

பிறகு மால்கோஷ், ''நாங்கள் இருவரும் மறுபடியும் எங்கள் தகப்பனாரைப் பார்க்க முடியாது. எங்களுடைய பந்தும், ஜமக்காளமும் காணமற் போய் விட்டன. அவற்றை நீங்கள் கண்டு பிடித்துத் தரவேண்டும்'' என்று கிழவியை வேண்டிக் கொண்டான்.



மால்கோஷையும், கலாவையும் பார்த்து, ''உட்காருங்கள். இதோ நான் வருகிறேன்'' என்று கூறிக் கிழவி குடிசையினுள் போய் விட்டு வெளியே வந்தாள். மந்திரக் கிழவி நொண்டி நொண்டி நடந்து போவதைப் பார்த்த கலா, ''ஏன் இப்படி நொண்டி நொண்டி நடக்கிறீர்கள்?'' என்றாள்.

மந்திரக் கிழவி சிரித்துக் கொண்டே, ''உன் அண்ணா என் மீது விட்டெறிந்த கல்லால் வந்தவினை!'' என்று சொன்னாள்.

உடனே மால்கோஷ், ''நான் ஒன்றும் கல்லை விட்டெறிய வில்லையே!'' என்றான்.

உடனே மந்திரக்கிழவி ''மால்கோஷ்! நீ பொய் சொல்லாதவன் என்று நினைத்தேன். நீயும் பொய் சொல்ல ஆரம்பித்து விட்டாயா? பாலைவனத்தில் இருக்கும் பொழுது என்னைப் பார்த்துக் குறி வைத்துக் கல்லை விட்டெறிய வில்லையா?'' என்று கேட்டாள். மால்கோஷ் சற்றுத் திகைத்தும்

போனுன். ''நான் உங்கள் மீது எப்பொழுது கல்லை விட்டெறிந்தேன் ? பாலைவனத்தில் எங்கள் பந்தையும், ஜமக்காளத்தையும் தூக்கிப் போன கழுகின் மீதுதான் நான் கல்லை விட்டெறிந்தேன் !'' என்றான்.

''அந்தக் கழுகு யார் என்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்'' என்றாள் கிழவி. அடுத்த நிமிஷம், என்ன ஆச்சரியம்! மால்கோஷுக்கும், கலாவுக்கும் எதிரில் மந்திரக் கிழவிக்குப் பதிலாக ஒரு நொண்டிக் கழுகு உட்கார்ந்திருந்தது. மறு நிமிஷம் அதற்குப் பதிலாக அங்கு மந்திரக் கிழவி நின்றாள். விஷயத்தை அறிந்த மால்கோஷும், கலாவும் சந்தோஷமடைந்தார்கள்.

'' அப்படியானுல் எங்களது மாயப் பந்தும், மந்திர ஜமக்காளமும் முத்துமாலையும் உங்களிடம் தானிருக்கின்றனவா ?'' என்று கேட்டாள் கலா.''நான்தான் எடுத்து வைத்திருக்கிறேன். நீங்கள் இனிமேல் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றாள் மந்திரக் கிழவி.

மால்கோஷ், ''அப்படியானுல் பறக்கும் குதிரையின் மீது யாரோ வந்து எங்கள் மீது அனுவசியமாக ஒரு பொம்மைப் பட்டணத்தைப் போட்டு விட்டுப் போனுர்களே, அவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா ?'' என்று கேட்டான்.

மந்திரக் கிழவி பதில் ஒன்றும் சொல்லாமல் ஒரு இடத்தைச் சுட்டிக் காண்பித்தாள். பறக்கும் குதிரை அங்கு காணப்பட்டது. ''எல்லாம் உங்கள் வேலைதானு?'' என்று வியப்புத் தாளாமல் கேட்டான் மால்கோஷ்.

''ஆமாம்! அதற்கு என்ன சந்தேகம்? எல்லாம் உங்கள் நன்மையைக் குறித்துத் தான் மிகவும் சிரமப்பட்டு மரத்தினுலே ஒரு அழகான பொம்மை நகரம் தயாரித்து உங்களிடம் போட்டேன். வேண்டுமென்றே எங்கெங்கே யெல்லாம் உடைக்க வேண்டுமோ, அங்கெல்லாம் உடைத்திருந்தேன். உங்களிடம் பொம்மையைப் போட்டு அதன் அழகில் மயங்குகிறீர்களோ என்று பார்த்தேன். உனக்குச் சங்கீதத்திலும் உனது சகோதரிக்கு நாட்டியத்திலும் மிகவும் பிரியம் என்பதை நன்கு உணர்ந்து சங்கீத கோஷ்டியையும் அழகான நாட்டியக் காரியையும் தயாரித்திருந்தேன். நீங்கள் அவற்றில் மயங்கி விட்டீர்கள். முன்பின் யோசியாமல் உங்கள் பந்தை உபயோகித்துப் பொம்மை நகரத்துக்கு அனுவசியமாக உயிர் கொடுத்து அதற்குத் தக்க தண்டனையும் அடைந்து விட்டீர்கள். அதுவே உங்களுக்குச் சரியான பாடத்தைப் போதித்திருக்கும். எங்கே உங்கள் கையில் பந்து இருந்தால் ஏதாவது விபரீதமான செயல்களுக்கு உட்படுவீர்களோ என்று பயந்து கழுகு உருவமெடுத்து உங்களிடமிருந்து பந்தையும் ஜமக்காளத்தையும் முத்துமாலையுடன் அபகரித்துக் கொண்டேன்.''

''பாட்டி ! எங்கள் பந்தால் உயிருள்ள நகரமாக மாறியது மறுபடியும் எப்படிப் பொம்மை நகரமாக மாறிற்று ?'' என்று வியப்புடன் கேட்டாள் கலா.

'' கலா ! சரியான கேள்வி கேட்டாய். அநேகமாக மந்திரங்களால் ஏற்படுவதெல்லாம் இருபத்தி நான்கு மணி நேரம் தான் இருப்பது வழக்கம். ஆனுல் சில மந்திரங்கள் ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தி எட்டு நாட்கள் வரையிலும் கூட இருக்கும். உங்களது பந்து அத்தகைய ரகத்தைச் சேர்ந்ததுதான். நீ இப்போது கணக்குப் பார்த்தால் பொம்மை நகரம் உண்மையான நகரமாகி இன்று நாற்பத்தெட்டு நாட்கள் பூர்த்தி ஆகி இருக்கும். அதனுல் தான் மந்திர சக்திபோய் உடனே பொம்மை நகரமாகி விட்டது !''

கிழவி, மந்திர ஜமக்காளத்தையும் மாயப் பந்தையும் முத்து மாலையையும் மால்கோஷிடம் கொடுத்து, ஆசிகூறி யனுப்பினுள். கலாவும் மால்கோஷும் கிழவிக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துவிட்டு ஜமக்காளத்தில் அமர்ந்து வானவீதியில் விர்ரென்று பறந்தார்கள். (தொடரும்)

மலைச்சாரல் மாதவி

அத்தியாயம் 51

சாந்தி பிறந்தது

மாதவி குழந்தைப் பருவத்திலிருந்தே வாழ்க்கையில் நன்றாக அடிபட்டவள். ஒன்றன்பின் ஒன்றாக வந்த பல துன்பங்களையெல்லாம் தாங்கி அவளுடைய மனம் ஓரளவுக்குப் பக்குவம் அடைந்திருந்தது.

துன்பம் என்பது நெருப்பைப் போன்றது. அந்தத் துன்ப நெருப்பில் விழுபவர்கள், இலேசான காகிதத்தைப் போன்ற மனம் படைத்தவர்களாக இருந்தால், அந்த நெருப்பில் எரிந்து உருத் தெரியாமல் போய் விடுகிறார்கள். தங்கத்தைப் போன்ற கெட்டியான இதயம் உள்ளவர்களாக இருந்தால், அந்தத் துயர நெருப்பு அவர்களுடைய உள்ளத்தின் மாசை நீக்கி, ஒரு மாற்று உயர்ந்து பிரகாசிக்கச் செய்து விடுகிறது.

மாதவியின் மனம் பொன்னைப் போல் நன்றாகப் புடம் போடப்பட்டு மாற்று உயர்ந்திருந்தது. ஆயினும் சிவசங்கரன் தன்னை ஏமாற்றக் கூடும் என்று அவள் எண்ணியே பார்க்காதபடியால் அந்த எண்ணம் அவளுக்கு அளவிலாத வேதனையை அளித்து விட்டது.

தன்னுடைய் துர்ப்பாக்கியம் தீர்ந்து போய் இனிமேலாவது அவருடன் சந்தோஷமாக இருக்கலாமென்று அவள் கட்டி வந்த மனக்கோட்டையின் அஸ்திவாரத்தில் ஆட்டம் கண்டது. அவளுடைய உள்ளத்தில் தோன்றிய சகிக்க முடியாத வேதனையை வெளியே காட்டிக் கொள்ளாமல் கோவிந்தனைப் பார்த்து, ''சிவசங்கரன் இதற்குச் சம்மதித்திருக்கவே மாட்டார். அவர் ஜயந்தியை நேசிக்கவில்லை. அவளும் அவரை விரும்பவில்லை. இரண்டு பேருடைய வாழ்க்கையும் இதனால் பாழாகி விடும். ஒரு வேளை ஜயந்தியின் தந்தை தம் அருமைக் குமாரியின் மீது உள்ள பாசத்தினால் இந்த விவாகத்துக்கு முயற்சி எடுத்துக் கொண்டாலும், சிவசங்கரன் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்'' என்றாள் மாதவி.

ஆயினும் தான் சொல்வது உண்மையாக இருக்குமா என்பதில் அவளுக்குச் சிறிதளவு சந்தேகம் இருக்கத்தான் செய்தது.

ஆனந்தி

கோவிந்தன் புன்னகை புரிந்தார். ''உண்மையைச் சொல்லுங்கள், மாதவி! உலகத்தில் அன்பு, காதல் என்பதுதான் பிரதானமான விஷயமா? பெண்களைப் பொறுத்தவரையில் அது சரிதான். இப்போது ஜயந்தியின் நிலையைப் பார்த்தாலே அது தெரிகிறது. ஆனால் ஆண்கள் அவ்வாறு இருக்க முடியுமா? உலகத்தில் முன்னேற வேண்டும் என்பதுதான் அவர்களுடைய முதல் ஆசை. மற்றதெல்லாம் அதற்கு அடுத்தபடிதான். நான் என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். எனக்கு உலகத்தில் முன்னேற வேண்டும், நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் முதல் ஆசை. மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம் தான். காதலுக்காகச் செல்வத்தைத் துறப்பதும், பதவியை விடுவதும் எல்லாரும் செய்யக் கூடிய காரியமில்லை. உலகில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் அப்படிப்பட்ட இலட்சிய புருஷன் பிறப்பான். இது உண்மையில்லை என்று கூறுபவனை நான் நம்ப மாட்டேன்'' என்றார் கோவிந்தன்.

மாதவிக்குக் கோவிந்தன் கூறுவதில் உண்மை இருப்பதாகவே பட்டது. ஆயினும் வெளிப்படையாக அதை அவள் ஒப்புக் கொள்ளவில்லை. ''சிவசங்கரன் நீங்கள் கூறியபடி பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை பிறக்கும் இலட்சிய புருஷர்களில் ஒருவர்தான். நிச்சயமாக இருக்கும் அவர் கேவலம் பணத்துக்காகப் பண்பை இழக்க மாட்டேன்.''

கோவிந்தன் சிரித்தார். ''மாஜிஸ்திரேட் மாத்திரம் மனிதனில்லையா, மாதவி? அவர் செய்வது தவறு என்று நான் நினைக்கவில்லை. அவருடைய நிலையில் நான் இருந்தால் அவ்வாறு தான் செய்வேன். ஆனால் பெண்களால் இதை ஒப்புக் கொள்ள முடியாது. பெண்களுக்கு எப்போதும் அவர்களுடைய மன உணர்ச்சிதான் முக்கியம். புருஷர்களால் தான் தங்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் வென்று உலகத்தைப் பார்க்க முடியும்.''

மாதவிக்குத் திடீரென்று அந்தச் சூழ்நிலை கசந்து வழிந்தது. சற்றுமுன் சௌந்தர்ய தேவதையின் இருப்பிடமாகத் தோன்றிய அந்தத் தோட்டம், இப்போது துர்த்தேவதைகள் நடமாடும் இடமாகத் தோன்றியது. காற்று வேக

மாக அடிக்க ஆரம்பித்திருந்தபடியால் தோட்டத்திலிருந்த மரங்களெல்லாம் அல்லோலகல்லோலமாய் ஆடின.

கோவிந்தனுடன் அதற்கு மேல் பேச அவளுக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் அத்தனை நேரம் பேசியதே பெரிய தவறு என்று வருத்தப் பட்டாள். சிவசங்கரனைப் பற்றி இதுவரை யாரிடமும் மனம் விட்டுப் பேசாத நாம் கோவிந்தனிடம் ஏன் பேசியிருக்க வேண்டும் என்று நொந்து கொண்டாள். கோவிந்தனிடம் வேறு எதுவும் பேசாமல் நேரே தன் அறைக்குச் சென்றாள்.

ஜயந்தியின் அறையைப் பார்த்த போது அவளுக்கு ஜயந்தியின் மீதும் கோபம் வந்தது. விஜயராகவனிடம் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. சிவசங்கரனை நினைத்தால் அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

தன்னுடைய சிறிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டாள் மாதவி. எதிரே வந்த ஜயந்தி அவளைப் பார்த்ததும் வியப்புடன், ''என்ன அக்கா? பெட்டியுடன் எங்கே புறப்படுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

மாதவி சிரிப்பதற்கு முயற்சி செய்தாள். ஆனால் முடியவில்லை. ''நான் என் வீட்டுக்குப் போகிறேன், ஜயந்தி. எனக்கு இங்கே மனச்சாந்தி கிடைக்கவில்லை. அங்கே போனாலாவது சிறிது மன அமைதி ஏற்படுகிறதா என்று பார்க்கிறேன்'' என்றாள் அவள்.

''எனக்கு மாத்திரம் அமைதி கிடைத்து விட்டதா, அக்கா? என் நெஞ்சை வாள் போல அறுக்கும் துயரத்தை உங்களுடைய துணையினால் தான் இத்தனை நாட்களாகச் சகித்துக் கொண்டிருக்கிறேன். என்னை விட்டுப் போவதாகச் சொல்கிறீர்களே?''


''என்னை மன்னித்து விடு, ஜயந்தி. இன்று நான் போகிறேன். மறுபடியும் இரண்டு நாட்கள் கழித்து வருகிறேன். அப்பாவிடம் சொல்லு'' என்று கூறி விட்டு மாடிப்படியில் இறங்கினாள். அவளுடைய முகத்தில் தோன்றிய ஏதோ ஒரு பாவம் ஜயந்தியை மேலே பேசவிடாமல் செய்து விட்டது. மாதவி இனிமேல் அங்கே இருக்கமாட்டாளென்று தீர்மானமாக அவளுக்குத் தெரிந்து விட்டது.

''நீங்கள் போவதாக இருந்தால் நான் குறுக்கே நிற்கவில்லை, அக்கா. ஒரு நிமிஷம் பொறுங்கள். காரை எடுக்கச் சொல்கிறேன். தயவுசெய்து நடந்து போக வேண்டாம்'' என்றாள் ஜயந்தி.

மௌனமாகத் தலையை ஆட்டினாள் மாதவி. அவள் சென்ற பிறகும் ஜயந்தியுடைய மனம் சமாதானமடையவில்லை.

அவளுடைய குழந்தை உள்ளம் குழம்பியது. 'மாதவிக்கு ஏதோ கோபம் போலிருக்கிறதே. எதனால் அவளுக்குக் கோபம் வந்திருக்கும்?' என்று யோசித்துப் பார்த்தாள். விஜயராகவன் வந்ததும் அவரிடம் விஷயத்தைக் கூறினாள்.

''இதற்கு நீ கவலைப்படுவானேன், ஜயந்தி. சிவசங்கரன் வந்து விட்டாரல்லவா? அவள் அங்கே இருந்தால் ஒருவரை ஒருவர் சந்திக்கச் சௌகரியமாக இருக்கும் என்று தான் போயிருப்பாள். அதனால் என்ன? மலைச் சாரல் பங்களாவுக்கு ஒரு காவல்காரனை நியமித்து விடுகிறேன்'' என்றார்.



ஜயந்திக்கு முதலில் அது நியாயமாகத் தோன்றினாலும், மாதவியின் கடுகடுத்த முகம் ஞாபகம் வந்த போதெல்லாம் காரணம் அதுவாக இருக்க முடியாது என்றே தோன்றியது. ஒரு வேளை தன் சின்னம்மா அவள் மனம் நோக ஏதாவது சொல்லி யிருப்பார் என்று வருத்தப் பட்டுக் கொண்டாள். அவரிடம் கேட்க வும் அவளுக்கு மனம் வரவில்லை.

ஒருவிதத்தில் மாதவி தன்னுடன் இல் லாம லிருப்பதே நல்லது என்று ஜயந்திக் குத் தோன்றியது. 'சின்னம்மா அவள் காது கேட்கக் குத்தலாக ஏதும் சொல்ல மாட்டார். அதுவும் நல்லதுதான்' என்று நினைத்துக் கொண்டாள்

மாதவிக்கு அன்று பைத்தியமே பிடித்துவிடும் போலாகி விட்டது. மலைச் சாரல் பங்களாவைப் பார்த்ததும், அவ ளுக்குத் துயரமும் ஆத்திரமும் பற்றிக் கொண்டு வந்தன. வீடு பாழடைந்து கிடந்தது. அதைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரிச்சல் அதிகமாயிற்று. ஒன்றும் செய்யாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது.

எங்கே பார்த்தாலும் தொங்கிய ஒட் டடையும், சிலந்திப் பூச்சிகளும் வீட் டைச் சிறைச்சாலை மாதிரி தோன்றச் செய்தன. எவ்வளவு சிக்கிரத்தில் இந்தச் சின்னஞ்சிறு பூச்சிகள் வீடு முழுவதும் வலை பின்னி விடுகின்றன என்று அப் போதுகூட வியந்தாள்.

புத்தகம் படிக்கலாமென்று நினைத் தாள். முடியவில்லை. பிறகு சமையலறை யைச் சுத்தம் செய்யலாம் என்று புகுந்தாள். அங்கே இருந்த சாமான்கள் மிகவும் குறைவு தான். ஏனோ அவற்றைக் கண் டாலே மாதவிக்குப் பிடிக்க வில்லை. எல்லாம் போய் விட்டது. தன்னுடைய வாழ்வே பாழாகப் போய் விட்டது. இவை மாத் திரம் இங்கு எதற்காக இருக்க வேண்டும் என்று தோன்றியது. எல்லாப் பாத்திரங்களையும் எடுத்துக் கொல்லைப் பக்கத்துக் கதவு வழியாக எறிந்தாள். அவற் றில் சில உடைந் தன; சில நசுங்கின. ஒரு வெண்கலப் பானை 'டண்டணார் டணார்' என்ற சத் தத்துடன் உருண்டு உருண்டு ஓடியது. அந்தச் சத்தத்தினால் மாதவிக்குச் சற்று புத்தி தெளிந்தது. 'நான் என்ன செய் கிறேன்? எனக்கு என்ன ஆகி விட்டது? இப்படி யெல்லாம் பைத்தியக்காரத் தனமான காரியங்கள் எதுவும் நான் இதுவரை செய்ததே இல்லையே?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

வெளியே எறிந்த சாமான்களை எடுத்து உள்ளே கொண்டு வந்து வைக்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் அதற்கு வேண்டிய ஊக்கமோ, தெம்போ அவளுடைய உடலில் இருக்கவில்லை.

அப்படியே சமையல் அறையில், சாமான்கள் தாறுமாறாகக் கிடந்த அந்த இடத்திலேயே உட்கார்ந்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். 'நான் அனாதை யாகி விட்டேன். எனக்கு இந்த உலகத் தில் யாருமே இல்லை' என்று நினைத்து நினைத்து விசித்தாள். "நீ அனாதை இல்லை, மாதவி!" என்று கூறி அவளைத் தேற்றக் கூடியவர் அங்கே யாரும் இல்லை.

வெகு நேரம் அழுதழுது அவளுடைய அழகிய முகம் வீங்கிப் போயிற்று. கண்கள் இடுங்கிப் போயின. எலுமிச்சம் பழ நிறமுள்ள அவளுடைய பொன் முகம் கன்றிக் கறுத்து விட்டது.

அந்த அழுக்குத் தரையிலேயே அவள் சோர்ந்து போய்ப் படுத்துக் கொண் டாள். அவளை அப்போது யார் பார்த் திருந்தாலும் பயந்து போயிருப்பார்கள்.

ஆனால் வெகு நேரம் கழித்து அவள் எழுந்திருந்தபொழுது அவளுடைய இடுங்கிய கண்களில் ஒரு தெளிவு இருந்தது. வீங்கிய முகத்தில் ஒரு பிரகாசம் இருந்தது. மறுபடியும் அந்தத் தங்கம் ஒரு மாற்று உயர்ந்து விட்டது.



மாதவியின் மனம் சமாதானம் அடைந்து விட்டது. அவளுக்கு இப்போது யார் மீதும் கோபம் இருக்கவில்லை. ஆத்திரம் இல்லை. துய ரம் இல்லை. சந்தோஷ மும் இல்லை. மாதவி யின் மனம் சாந்தி யடைந்து விட்டது.

அத்தியாயம் 52

அமர்நாத்தின் கவலை

இன்ஸ்பெக்டர் அமர்நாத், டி. எஸ். பி. சட்டர்ஜி இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சட்டர்ஜி மிகவும் நல்ல மனிதர். போலீஸ் உத்தியோகத்துக்கு வேண்டிய திட சித்தமும், ஆகிருதியும் உள்ளவர். அதே சமயத்தில் ஈவிரக்கம், பச்சாத்தாபம், உண்மையில் தீவிர நம்பிக்கை இவை எல்லாம் கொண்டவர். வெகுகாலமாகப் போலீஸ் உத்தியோகம் பார்த்து வந்தும் ஈரப் பசையே வறண்டு போனவராகி விடவில்லை. அனுபவத்தில் உண்மை என்பது எவ்வளவு அரிய விஷயம் என்று உணர்ந்தவர்.

ஆனால் இன்ஸ்பெக்டர் அமர்நாத் வயதில் சிறியவர். இந்த வழக்கை வெற்றிகரமாக நடத்தி விட்டால் நல்ல பெயர் எடுக்கலாம் என்ற ஆசை உள்ளவர். ஆகவே இருவருடைய பேச்சும் சிறிது மாறுபட்டு ஒலித்தது. அமர்நாத் துடிப்புடன் பேசினார். சட்டர்ஜி அமைதியாகப் பதில் சொன்னார்.

"பார்த்தீர்களா? அச்சுதன் தான் குற்றவாளி என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. அவன் குற்றம் நடந்த தினம் மாலை எங்கிருந்தானென்பதை ஏன் மறைக்க வேண்டும்? இப்பொழுது சந்தேகத்துக்கு இடமில்லாமல் போய் விட்டது. அது ஒன்றுதான் இத்தனை நாள் வழக்கில் தொடர்பு இல்லாமல் செய்து வந்தது. இனிமேல் வழக்கைப் பற்றிக் கவலை இல்லை" என்றார் அமர்நாத்.

"அமர்நாத்! முதலில் நீங்கள் ஒன்று கற்றுக் கொள்ள வேண்டும். வழக்கில் ஜெயிப்பது முக்கியமல்ல. அதற்குச் சாட்சிகள் தயாரிப்பதும் கஷ்டமல்ல, ஆனால் உண்மைக் குற்றவாளியைப் பிடிப்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்" என்றார் டி. எஸ். பி. சட்டர்ஜி.

அமர்நாத்தின் முகம் அதைக் கேட்டதும் சுருங்கியது. "நான் மட்டும் நிரபராதி தண்டனை அடைய வேண்டும் என்று சொல்கிறேன்? நானும் குற்றவாளியைப் பிடிக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்" என்றார்.

"அப்படியானால் சரி" என்று பேச்சை அத்துடன் முடிப்பதற்குப் பார்த்தார் சட்டர்ஜி.

ஆனால் அமர்நாத் விடவில்லை. "இப்பொழுது புதிய சாட்சி கூறுவதன் மூலம் அச்சுதன்தான் குற்றவாளி என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகி விடவில்லையா?" என்று கேட்டார்.

"அது என்னமாய் நிரூபணமாயிற்று? குற்றம் நடந்ததைக் கண்ணால் கண்டதாக அவன் சொல்லவில்லையே?"

"நீங்கள் கூறுவது விசித்திரமாக இருக்கிறதே! நேரில் பார்த்த சாட்சி இருந்தால் நமக்கு ஏன் இவ்வளவு தொல்லை? ஒவ்வொருவரும் குற்றம் புரியும்போது சாட்சியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு செய்வார்களா, என்ன? அப்படி இருந்தால் போலீஸ் உத்தியோகம் என்பது ஒன்று எதற்காக இருக்கிறது? சந்தர்ப்பங்களைக் கொண்டுதானே நாம் இதை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது?" என்றார் படபடப்பாக அமர்நாத்.

"சந்தர்ப்ப சாட்சியங்கள் எவ்வளவு பலமாக இருந்தாலும் சில சமயம் உண்மை வேறு விதமாக இருப்பதைப் பலமுறை அனுபவத்தில் அறிந்திருக்கிறேன், அமர்நாத். அதனால் அச்சுதன் குற்றவாளி அல்ல என்று நான் கூறுவதாக நினைத்து விடாதீர்கள். ஆனால் வேறு யாராவது குற்றவாளியாக இருப்பதற்கும் இடமிருக்கிறது. நம் முன்னால் எல்லா உண்மைகளும் இல்லையல்லவா" என்றார் சட்டர்ஜி.

அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயம் விளங்க வேண்டுமானால் அன்று மாலை அவர்கள் விசாரித்த ஒரு புதிய சாட்சி கூறிய விஷயத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்தப் புதிய மனிதன் தேங்காய் எண்ணைய்த் தொழிற்சாலையில் வேலை செய்பவன். ஒரு அப்பாவி. குற்றம் நடந்த தினத்தன்று இரவு சுமார் எட்டு மணிக்கு அச்சுதன் மலைமீதிருந்து இறங்கி வந்ததைத் தான் பார்த்ததாக அவன் தன் மனைவியிடம் பரம ரகசியமாகச் சொல்லி வைத்தான். குற்றத்தில் அச்சுதனைச் சம்பந்தப்படுத்த அவனுக்கு இஷ்டமிருக்கவில்லை. ஆனால் அவன் மனைவி அதை ரகசியமாகப் பக்கத்து வீட்டுக்காரிக்குச் சொன்னாள். அவள் தன் புருஷனிடம் சொன்னாள். தவிர இன்னும் இரண்டு பெண்களிடம் சொல்லி வைத்தாள். சில நாட்கள் கழித்து இது போலீஸாருக்கு எட்டியபோது அமர்நாத் உடனே அந்தத் தொழிலாளியை அழைத்து விசாரித்தார்.

அவன் பயந்து நடுங்கினான். அவனை வாய் திறந்து பேச வைப்பதற்குள் அவருக்கும் பாதிப் பிராணன் போய் விடும் போலிருந்தது.

கடைசியாக அவன் ஒப்புக் கொண்ட விஷயம் 'குற்றம் நடந்த தினம் இரவு எட்டு மணி சுமாருக்கு அச்சுதன் மலை மீதிருந்து கையில் அரிக்கன் லாந்தர், துப்பாக்கி இவை சகிதம் தன்னந் தனியாக இறங்கி வந்ததை நான் பார்த்தேன்' என்பது தான். இதை அவன் ஒப்புக் கொள்வதற்குப் பயந்த மாதிரி, குற்றவாளி கூடப் பயப்பட மாட்டான். அமர்நாத் அவனுக்குச் சாட்சியத்தை மறைப்பது எவ்வளவு பெரிய தவறென்று அரை மணி நேரம் பிரசங்கம் செய்து இந்த விஷயத்தைக் கூறச் செய்தார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பிறகும் சட்டர்ஜி பட்டும் படாமலும் பேசுவது அமர்நாத்துக்கு எரிச்சலை உண்டாக்கியதில் அதிசயமில்லை அல்லவா ?

திடீரென்று இன்ஸ்பெக்டர் அமர்நாத்துக்கு ஒரு யோசனை தோன்றியது. ''உண்மையைச் சொல்லுங்கள், மிஸ்டர் சட்டர்ஜி! உங்களுக்கு வேறு யார் மீதாவது சந்தேகம் உண்டாகி இருக்கிறதா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

சட்டர்ஜி மௌனம் சாதிக்கவே அவருடைய ஆவல் இன்னும் அதிகமாயிற்று. ''தயவு செய்து சொல்லுங்கள். வேறு யார் மீது சந்தேகப் படுகிறீர்கள்?'' என்று வற்புறுத்திக் கேட்டார்.

''நான் எதையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. அது ஒரு ஊகம்தான். ஆனால் ஆதாரமில்லாத ஊகமில்லை. நிச்சயமாகச் சாட்சியம் இருந்தால்தான் அதையும் என்னால் நம்பமுடியும்.''

''அது உண்மைதான். ஆனாலும் என்னிடம் சொல்வதற்கென்ன? சொல்லுங்கள், பரவாயில்லை'' என்று மறுபடியும் கேட்டார் அமர்நாத்.

''நீங்கள்தான் யோசித்துப் பாருங்களேன். அன்று மலைமீது ஏறிச் சென்றவர்கள் யார் யார் என்று வரிசையாகப் பார்க்கலாம். முதலில் மாஜிஸ்திரேட் சிவசங்கரன் போனார். பிறகு அச்சுதன் ஏறிச் சென்றான். இருவரும் மலைமீது சந்தித்தார்கள். கருணாகரனும் மலைப் பாதை வழியே ஏறிச் சென்றான். வேறு யாராவது சென்றார்களோ என்னவோ, நமக்குத் தெரியாது. தெரிந்த வரையில் அச்சுதன் திரும்பி வந்ததற்கு மட்டும் தானே சாட்சி இருக்கிறது?'' என்றார் டி. எஸ். பி. சட்டர்ஜி.

அமர்நாத்தின் மூளையில் மின்னல் வேகத்தில் ஒரு எண்ணம் உதித்தது.

''ஆ! அப்படியும் இருக்குமா?'' என்று வியப்புடன் கேட்டார். பின்னர் ''அவர் ஒரு நாளும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்க மாட்டார்'' என்றார்.

''அப்படி என்னமாகத் தீர்மானமாய்ச் சொல்ல முடியும்? அவர் ஏன் அன்றிரவே கழுகு மலையை விட்டுப்போக வேண்டும்?'' என்று கேட்டார் சட்டர்ஜி.

''அப்படியானால் அச்சுதனுடைய விசித்திரமான நடத்தைக்கு என்ன காரணம் கூறுவது? அவன் ஏன் மறுநாள் காலை குற்றம் நடந்த ஸ்தலத்தில் பின் தங்கியிருக்க வேண்டும்?''

''அச்சுதனுக்கு அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம் அல்லவா? ஏதோ ஒரு முக்கியமான சாட்சியத்தை மறைப்பதற்காகவே அவன் பின்தங்கி விட்டான் என்று கருதுகிறேன்.''

''இதை நீங்கள் கூறுவதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கிறதா?''

''பாலகோபால் திடீரென்று ஊரை விட்டுப்போனார் அல்லவா? அவர் சிவசங்கரனை நாக்பூரில் போய்ப் பார்த்திருக்கிறார். எனக்கு இந்தத் தகவல் இரண்டு நாட்களுக்கு முன்புதான் தெரிந்தது.''



''அப்படியா?'' என்று வியப்புக் கடலில் மூழ்கினார் அமர்நாத். பிறகு அவநம்பிக்கையுடன், ''சிவசங்கரனைப் பற்றி அவ்வாறு எனக்குத் தோன்றவில்லை. அவரால் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்கவே முடியாது. எத்தனை வழக்குகளை எவ்வளவு நேர்மையாக அவர் நடத்தியிருக்கிறார்! நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். அப்பழுக்கு சொல்ல முடியாத மனிதர் அவர்!'' என்றார்.

''அமர்நாத்! உங்களுக்குச் சின்ன வயது. என்னுடைய வயதாகும்போதுதான் உங்களுக்கு மனித உள்ளத்தின் விசித்திரமான பயங்கர சுபாவங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். டாக்டர்கள் சாதாரணமாகத் தங்கள் வீட்டில் யாருக்காவது உடம்புக்கு வந்தால் இன்னொரு டாக்டரைக் கூப்பிடுவார்கள்.

ஏனென்றால் மனத்திலுள்ள பாசம் கண்களை மறைத்து விடும். சில விஷயங்களை மனம் நம்ப மறுக்கும். மற்றவர்களுக்கு நீதி வழங்குவதென்பது வேறு விஷயம். ஆனால் தனக்கென்று வரும் போது அதையே எதிர்பார்க்க முடியாது. குரோதத்துக்குப் பல மடங்கு அதிக சக்தி உண்டு. கருணாகரனுடன் அன்று காலை அவர் சண்டை போட்டதற்குச் சாட்சி இருக்கிறது. அவன் அவரைத் தூற்றியதும் நமக்குத்தெரியும்...'' என்று சொல்லிக் கொண்டே இருக்கும் போது, ஒரு 'கான்ஸ்டேபிள்' உள்ளே வந்து, ''ஸ்ரீனிவாஸமூர்த்தி வந்திருக்கிறார்'' என்று அறிவித்தான்.

சட்டர்ஜியின் முகத்தில் புன்னகை அரும்பியது. ''வரச் சொல்'' என்றார்.

''முக்கியமாக ஏதாவது பேசிக்கொண்டிருந்தீர்களோ?'' என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார் மூர்த்தி.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்'' என்றார் டி. எஸ். பி. சட்டர்ஜி.

அமர்நாத்தின் முகம் ஒருமாதிரி இருப்பதைப் பார்த்துவிட்டு மூர்த்தி, ''ஏன் உங்கள் முகம் வாடியிருக்கிறது?'' என்று கேட்டார்.

''நேற்றிரவு சரியாகத் தூங்கவில்லை. எப்போதும் கவலைதானே!''

''அவருக்குப் பிரமோஷன் ஆகவேண்டுமே என்ற கவலையில் இராத் தூக்கம் அடியோடு போய்விட்டதாம்'' என்று விளையாட்டாகக் கூறினார் சட்டர்ஜி.

மூவரும் சிரித்தார்கள்.

''நீங்களும் ஏதோ கவலையாகக்காணப்படுகிறீர்களே?'' என்றார் சட்டர்ஜி.

''எனக்கு என்ன கவலை? உங்கள் ஊருக்கு வந்த பிறகு நான் என் கவலைகளையெல்லாம் மறந்து மன நிம்மதியுடன் அல்லவா இருக்கிறேன்'' என்றார் ஸ்ரீனிவாஸமூர்த்தி.

டி. எஸ். பி. சட்டர்ஜியும், ஸ்ரீனிவாஸமூர்த்தியும் ஏற்கனவேயே அறிமுகமானவர்கள். சிவசங்கரனும் அவரும் அத்யந்த நண்பர்கள் என்பதும் சட்டர்ஜிக்குத் தெரியும்.

''உங்களுக்கென்ன ஸார் கவலை? வழக்கு நடந்தால் உங்களுக்குக் கொண்டாட்டம். ஜயித்தாலும் சரி, தோற்றாலும் சரி பணம் மட்டும் வந்து விடும். அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். எங்கள் பாடுதான் திண்டாட்டம். குற்றம் செய்தவனைக் கண்டு பிடிக்க வேண்டும். அதை ருசுப்படுத்த வேண்டும். பொய் சொல்கிறவர்களை நிஜம் சொல்ல வைக்க வேண்டும். இத்தனைக்கும் பிறகு குற்றவாளியைத் தண்டிப்பதோ, விடுதலை செய்வதோ இன்னொருவர் பொறுப்பாக இருக்கிறது. குற்றவாளியைக் கண்டு பிடிக்கா விட்டாலும் பிளாக்மார்க் விழுந்து தொலைக்கிறது'' என்று ஆற்றாமையுடன் கூறினார் டி. எஸ். பி. சட்டர்ஜி.

''அதனால்தான் உங்களைப் போன்ற அறிவாளிகளைப் போலீஸ் உத்தியோகத்தில் போடுகிறார்கள்.''

''இந்த வழக்கைத்தான் பாருங்களேன். அச்சுதனுக்கு எதிராக எத்தனையோ சாட்சியங்கள் இருக்கின்றன. அவன் மலையிலிருந்து இரவு எட்டு மணிக்குத் திரும்பி வந்ததற்குக்கூடச் சாட்சி இருக்கிறது. ஆனாலும் அவனைக் குற்றவாளி என்று நிருபிப்பது மிகக் கடினம்.''

''அது சரி! எத்தனை மணிக்குக் குற்றம் நடந்திருக்க வேண்டும் என்று டாக்டர் நிர்ணயித்திருப்பாரே?''

''ஆமாம்! மாலை ஏழு மணிக்கு நடந்திருக்கலாம் என்கிறார். அரை மணி முன்னே பின்னே இருக்கலாம்.''

''வழக்கு தொடங்க இரண்டு நாட்கள்தானே இருக்கிறது?''

''ஆமாம். வழக்கை ஒத்திப்போடுவதாக எங்களுக்கு உத்தேசமில்லை'' என்றார் சட்டர்ஜி.

அதைக் கேட்டுச் சற்று மன நிம்மதி அடைந்தவராகக் காணப்பட்டார் ஸ்ரீனிவாஸமூர்த்தி. (தொடரும்)


"உங்களுடைய புடவைக்கும் டினேபால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கவனிக்கிறேன்."
எவ்விதமாக பிரகாசிக்கும் வெண்மையை டினேபால் வெள்ளை துணிகளுக்கு அளிக்கிறது என்பதை எளிதில் காண்கிறோம். சிறிது அளவு டினேபால் நீண்ட நாள் தாங்கும். மூன்று, நான்கு சலவைகளுக்கு ஒரு தடவை டினேபால் உபயோகித்தால் போதும்.
டினேபால்
"டினேபால்" ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.
ஸுஹ்ருட் கெய்கி ட்ரேடிங் பிரைவேட் லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் 965 - பம்பாய்



குமரி முதல் இமயம் வரை 3

பு(ல்லாடியிலிருந்து, வைக்கத்துக்குச் செல்வோம். வைக்கத்தில் எழுந்தருளியிருக்கும் 'வைக்கத்தம்மன்' மிகுந்த சக்தி வாய்ந்த தெய்வம்! கோவிலின் உள்ளே இருக்கும் பிராகாரம்தான் எவ்வளவு அகலமாக இருக்கிறது!

இந்த வைக்கம் என்ற ஊர், நமது நாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்றிருக்கிறது. வைக்கத்தில் நடைபெற்ற ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தைப் பற்றி உங்களில் எத்தனை பேருக்குத்தெரியுமோ! திரு ஈ.வே. ராமசாமி நாயக்கர் இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவராவார். அதனாலேயே அவருக்கு 'வைக்கம் வீரர்' என்ற சிறப்புப் பெயருமுண்டு.

ஆலயங்கள் நிறைந்த தமிழ் நாட்டைப் போலவே கேரள நாட்டிலும் தெய்வத் திருக்கோயில்கள் அதிகமாக உள்ளன. பெரும்பாலான ஆலயங்களில் மேலாடையுடன் எந்த ஆண் மகனும் உள்ளே போக அனுமதிக்கப் படுவதில்லை. ஆண்களும்-பெண்களும் இரண்டு வரிசைகளாய்ப் பிரிந்து நிற்கிறார்கள். கர்ப்பகிருகத்துக்குள்ளேயும்-வெளியேயும் சரவிளக்குகள் (நெய் விளக்குகள்) ஜகஜ்ஜோதியாய்க் காட்சியளிக்கின்றன. எளிமை வெழியே அள்ளி வீசும் ஆடைகளணிந்துள்ள பெண்களும், மேலாடைகளேயில்லாத ஆண்களும், சரவிளக்குகளின் பேரொளியும், வழிபட வருவோரின் பக்தி சிரத்தையும், பரிபூரண அமைதியும், — இவ்வளவும் இந்த ஆலயங்களில் நிலவுகின்றன.

வைக்கத்துக்கு நாங்கள் வரும் போது இரவு எட்டேகால் மணி. ஆலயத்தை அடைத்து விட்டால் என்ன செய்வது என்று ஏங்கியவாறு வந்தோம். கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் மின்னி மறைகின்ற மின்னல் ஒளியைப் போல, 'வைக்கத்து அம்மன்' இரண்டு விநாடி தரிசனம் தந்து விட்டு, ஏகாந்தமாக இருந்திடத் தமது அறையை மூடிக்கொண்டார்!


எலுமிச்சம் பழத்தின் மேனி நிறத்துடன்-தும்பைப் பூபோன்ற வெண்ணிற ஆடைகளை அணிந்து கொண்டு, முகப் பொலிவுடன் விளங்கும் அந்த நாட்டு மங்கையர் திலகங்களே கேரளாவின் அழியாத சௌந்தரியத்தைக் காத்து நிற்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

இந்த ராஜ்யத்தில் எவ்வளவு சமூகங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு சமூகங்களுக்கும் என்று தனித்தனியாகப் பத்திரிகைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து மக்களிடையே ஏற்படுத்தியிருக்கும் மனக் குழப்பத்தின் அளவு கொஞ்சநஞ்சமில்லை!


*** *** ***

வைக்கத்திலிருந்து மூவாட்டுப் புழாவுக்குப் போவோம். காலையிலிருந்து மாலை வரை கரடு முரடான இடங்களுக்கும், பள்ளத்தாக்கில் இருந்த இடங்களுக்குமாகப் போய்க் கொண்டேயிருந்தேன். எங்கே சென்றாலும் 'டீ' 'கறிக்கெ' (இளநீர்), 'முறுக்கான்' (வெற்றிலைப் பாக்கு) இவைகளுக்குக் குறைச்சல் இல்லை!

மூவாட்டுப் புழாம் பகுதியிலும், கோயிபுரம் பகுதியிலும் வாழும் மக்களிடம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுடைய கபடமற்ற தன்மையும் அன்பு பொங்கும் பேச்சும் மறக்க முடியாத சம்பவங்கள். மூங்கில் பாய் முடைந்து ஜீவிக்கின்ற ஹரிஜனங்கள் 'கல்கி'ப் பத்திரிகையின் பிரதிநிதியைப் பார்த்ததும் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார்கள். இன்னுமொரு ஊரிலும் இதே போன்ற வரவேற்பு கிடைத்தது. பாண்டு வாத்திய முழக்கத்துடன் அவர்கள் வரவேற்றதும் " ஹிப் ஹிப் ஹுர்ரே " என்ற புரியாத கோஷத்தை யெழுப்பி ஆனந்தப் பரவசத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்ததும் மறக்கவே முடியாத சம்பவங்களாகும்!








இந்தப் பகுதிகளில் எல்லாம் மாதர் சங்கங்கள், பாலர் சங்கங்கள், வாலிபர் சங்கங்கள், 'ஆர்ட்ஸ் கிளப்பு'கள் இவைகளுக்கெல்லாம் குறைவில்லை. இந்த ஸ்தாபனங்கள் மூலம் பலவித நடவடிக்கைகள் பரவலாக நடந்துகொண்டிருக்கும் ஒலிகளைக் கேட்கலாம்.

கோவிபுரம் பிளாக்கில் நடைபெற்ற ஒரு மாதர் சங்க விழாக் கூட்டத்தை நேயர்களுக்குக் குறிப்பிட வேண்டும். அந்தக் கூட்டத்தில் பல நிகழ்ச்சிகளைச் சின்னஞ் சிறுமிகள் நடத்திக் காட்டினார்கள். ஒரு அழகிய சிறுமி, தமிழில் ஒரு பாட்டைப் பாடினாள். அவளுடைய சாரீரம் மிகவும் நன்றாக இருந்தது. அவளுக்குத் தமிழ் மொழியைப் படிக்கவே தெரியாது. மலையாள லிபியில் தமிழ்ப் பாட்டை எழுதிப் படித்தாள்! அதைப் பார்த்ததும் தமிழினிடம் அவர்களுக்கிருந்த மதிப்பு எனக்குத் தெரிய வந்தது.

இந்தப் பகுதிகளில் எல்லாம் முக்கியமான சங்கங்களில் உற்பத்தித் திறன் வாய்ந்த குடிசைத் தொழில்களில் அங்கத்தினர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகக் குறிப்பிட வேண்டும். முழு வீச்சில் இம்மாதிரி, இவர்கள் கட்டுப்பாடான முறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்களா என்று கேட்டு விடாதீர்கள்! வேலை செய்தால் கேவலம் என்று நினைக்கின்ற, ஆனால், ஏதாவது இந்தமாதிரியான வேலையில்லாவிட்டால் தாங்கொணாத துயரத்தில் ஆழ்ந்து விடக்கூடிய பெண்மணிகளுக்கும் வாலிபர்களுக்கும் சிறிதேனும் வேலை வாய்ப்பளிக்கவல்ல சமுதாய நலத்திட்டம் அது. போலிக் கௌரவ உணர்ச்சியை உடைத்தெறியவல்லது. இந்தத் தொழில்களில், அபிவிருத்தித் திட்டப்பகுதிகளில் வாழ்கின்றவர்களில் சில பேர்களையாவது சமுதாய நலத்திட்ட நிர்வாகம் ஈடுபடுத்தும் துறையில் முன் வந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடையவேண்டும். கணிசமான தொகையினரையும் பரவலாகவும், கட்டுப்பாடாகவும் இத்தொழில்களில், இவ்வித சங்கங்கள் மூலம் ஈடுபடுத்தும் அவசியத்தையும், அவசரத்தையும், பாரத நாட்டுக்கே ஒரு "பிரச்னை" ராஜ்யமாக இருக்கின்ற இந்த அழகிய நாட்டின், திட்ட நிர்வாகத்தின் மேலிடம் உணராமலிருக்கும் என்று சொல்ல முடியாது. இந்தமாதிரியான சங்கங்களின் எந்த நடவடிக்கையும், அது கலாசார நடவடிக்கையாயினும் சரி, அல்லது கைத்தொழில் நடவடிக்கையாயினும் சரி, நமது அபிலாஷைகள் தேவைகளுக்கேற்ப அமைவதோடு, அவைகளைப் பெறவும் உதவுகின்ற ரீதியிலும், நமது மகத்தான பண்பு அடிப்படையில் அமைவதோடு, அதை எந்நாளும் பிரதிபலித்துக் காத்து நிற்கின்ற ரீதியிலும் அமைவது தான் முக்கியம்! இந்தக் கண்ணோட்டத்துடன் பார்த்தால், இந்த ராஜ்யத்தின் அபிவிருத்திப் பகுதிகளில் செயல் படுகின்ற இந்தமாதிரியான சங்கங்கள் சரியான பாதையில் அடியெடுத்து வைத்திருக்கின்றன என்றே கூறவேண்டும்.

"அது மட்டுமா? படித்துவிட்டு வேலையில்லாமல் தவிக்கின்ற வாலிபர்களுக்கு ஏதாவது ஒரு தொழிலில் பயிற்சி அளிப்பதற்காகவும், கிராமக் கைத்தொழிலாளிகளுக்கு நவீன முறையில் அத்தியாவசியமான தொழில் சாதனங்களை உற்பத்தி செய்வதற்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், அவர்களைக் கொண்டே உற்பத்தி செய்யச்செய்து, அந்தச் சாமான்களை விற்று, அவர்களுக்கு ஊக்கத்தையும் உள் வலிமையையும் ஏற்படுத்துவதற்காகவும், இந்த ராஜ்யத்தின் பல பிளாக்குகளில் வர்த்தகக் கல்வி நிலையங்களையும், ஆண்கள் - பெண்களும், கிராமத்துக் கைத்தொழிலாளிகள் கூட்டுறவுச் சங்கங்களையும் திட்ட நிர்வாகம் ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சாதனைகள் பாராட்டப்பட வேண்டிய சாதனைகளேயாகும். இவைகளில் சில மிகவும் நன்றாகச்



ஆரஞ்சு: ஏண்டா பயலே! நீ கமலா ஆரஞ்சின் பிள்ளைதானே?

குட்டி ஆரஞ்சு: ஆமாம்!

ஆரஞ்சு:— அதுதான் உங்க அப்பா மூஞ்சியை அப்படியே உரிச்சு வைச்சிருக்கு!

செயல்படுகின்றன. தனுவச்சபுரம், நெய்யாற்றங்கரை, சாலக்குடி முதலிய இடங்களில் அமைந்திருக்கும் இந்தக் கைத்தொழில் துறை உற்பத்தி வினியோக ஸ்தாபனங்களை இந்த ராஜ்யத்தின் திட்ட நிர்வாகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் என்றே சொல்லலாம். இம்மாதிரி ஸ்தாபனங்களும்—இவை சுலபமாக நடைபெற உதவி செய்யவல்ல மின்சார சக்தியும் மேலும் மேலும் அதிகரித்து விட்டால், கேரள நாட்டில் வேதனையும் குறைந்து கொண்டே வரத் தொடங்கும். மின்சார சக்தியின் விஸ்தரிப்பு வேகமும் இங்கே இல்லாமலில்லை.

ஆலவாட்டுப்புழாப் பகுதியில் உள்ள மலைச் சாரல் நிலங்களில் இஞ்சி அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. காயும், கனியும், கிழங்கும்—தேயிலை, ரப்பர், மிளகு, இஞ்சியும், கணக்கின்றித் தரும் இந்நாட்டில்-மலைச்சாரல் வள நாட்டில் வருஷத்துக்கு நூறு அங்குல மழை பெய்துங்கூட,குடி தண்ணீர்க் கஷ்டம்அதிகம்! அதுவும் மேட்டுப்பாங்கான இடங்களிலும், கடற்கரையை அடுத்த இடங்களிலும் இந்தக் குடி தண்ணீர்க் கஷ்டத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. எங்கேயோ ஒரு மூலையில் நெய்யாற்றங்கரைக்குப் பக்கத்தில் நேமம் என்ற பிளாக்கின் எல்லைக் கோடியில் இரண்டு இடங்களில் குடி தண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்றி விட்டால் போதுமா? இந்தப் பகுதியில் நிறைவேறியிருக்கும் தெற்கு விலவங்கோடு குடி தண்ணீர்த் திட்டமும், குமிழிக்குடி தண்ணீர்த் திட்டமும் இந்த ராஜ்யத்துக்குப் போதுமா?

சமுதாயநலத் திட்ட நிர்வாகத்தினரால் ஏற்கனவே போடப்பட்டுள்ள ரோடுகளுக்குத் தாரிடுவதும், இன்னும் எங்கெல்லாம் சாலை போட முடியுமோ அங்கெல்லாம் சாலை போடுவதும், இந்த இடங்களுக்கும் குடி தண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதுமே இந்த ராஜ்யத் திட்ட நிர்வாக மேலிடத்தினால் உடனேயே — அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள்!

சாலக்குடிக்கு எர்ணுகுளத்தின் வழியாக நேயர்களை அழைத்துப் போகப் போகிறேன். இனி நாம் சுற்றும் பகுதிகள் எல்லாம் பழைய கொச்சி சமஸ்தானமாகும். 'கொச்சு' என்ற மலையாளப் பதத்துக்குத் தமிழில் 'சிறிய' என்பது அர்த்தமாகும். இந்தச் சிறிய பகுதியில் இருப்பவர்களும் மலையாளிகளே யென்றாலும், இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் சிறிது அதிகமாகப் பண்பிலும்—அடக்கத்திலும் சிறந்தவர்களாகவே தென்படுகிறார்கள்! இப்பகுதியில் நெல் வயல்களே மிக அதிகம். பலாப் பழங்களோ கணக்கின்றி உற்பத்தியாகின்றன. மூங்கில் போத்துக்களும் இங்கே ஏராளம். இங்கிருந்துதான் அதிகமான மூங்கில் கழிகளும், உயர்ந்த மரங்களும் மரச் சாமான்களும் மற்ற இடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

எர்ணுகுளத்து நகரம் மிகவும் அழகாக இருக்கிறது. இங்கேதான் இந்த ராஜ்யத்தின் ஹைகோர்ட் இருக்கிறது. இந்த நகரத்தின் மிகப் பெருமையான இடம், பின்னே ஊடுருவி வந்து பெரிதாக ஏரி போலக் காட்சி யளிக்கின்ற நீர்நிலையை அடுத்து இருக்கும் சாலைதான். இந்தச் சாலையில் தண்ணீரை யொட்டி, நீளமாகச் சிறிய மதில்சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. அகலமாக இருக்கும் இந்தச் சுவரின்மீது உட்கார்ந்து கொண்டு, இந்தக் கடல்நீர் ஏரியையும் அதற்குப் பின்னணியில் அமைந்திருக்கும் கொச்சித் துறைமுகப் பிரதேசத்தையும், இரவுக் காலத்தில்தான் பார்க்கவேண்டும். இந்தக் காட்சி, அப்போது நமது நெஞ்சையள்ளும் ஆயிரமாயிரம் மின்சார விளக்குகள் அணிவரிசையாயிருந்து பிரமாதமாக ஒளிவீசி, அந்த இடம் முழுவதையுமே அழகுபடுத்தி விடுகிறது. எர்ணுகுளத்தைப் பல வருஷங்களுக்கு முன்பு பார்த்தவர்களும்-இந்தியா பல துறைகளில் முன்னேறவேயில்லை என்று பேசுகிறவர்களும் இன்றைய எர்ணுகுளத்தையும், கொச்சித் துறைமுகத்தையும் பார்க்க வேண்டும்.


கொச்சித் துறைமுகம் மேற்குக் கடற்கரையில் மட்டுமல்ல-இந்தியாவிலேயே இருக்கின்ற மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமாகும். மேலும் நமது கடற்படையில் தலைமைஸ்தலம் கொச்சித் துறைமுகத்தில்தான் இருக்கிறது. துறைமுகமும்-அதையொட்டிய இடமும் ஒரு சிறிய தீவில் இருக்கிறது. எர்ணுகுளம் நகரத்தையும் இத் தீவையும் இணைக்கும், ஏரிக்குள்ளாகவே, பெரிய பாலமும் கட்டப்பட்டிருக்கிறது. கொச்சியிலிருந்து சென்னைக்கும் திருவனந்தபுரத்துக்கும் ரயில் பாதைகளும்—ராஜபாட்டையும் இருக்கின்றன.

நாளை குருவாயூருக்குச் செல்வோம். "உள்ளத்தே தெளிவூட்டுவான்; உணர்ச்சி யூட்டுவான் எங்களப்பன் குருவாயூரப்பான்" என்கிறார் திரு பாஸ்கர மேனன். இவர்தான் இந்தப் 'ப்ராஜக்டின்' நிர்வாக அதிகாரி.

குருவாயூரும் தேச சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட ஊரேயாகும். இங்கேயும் ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகப் போர் நடந்தது. காந்தியடிகளின் நன்மதிப்புக்குப் பாத்திரமான திரு கேளப்பன் இங்கே உண்ணாவிரதம் இருந்த காலத்தில் ஏற்பட்ட விறுவிறுப்பான பல சம்பவங்களை யார்தான் மறக்க முடியும்?

(தொடரும்)


திடமான பற்களும்
ஈறுகளும் பெற
ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த
அற்புதமான பச்சை 'கோலினாஸ்' டூத்பேஸ்ட்
★ பற்களைச் சுத்தமாயும் பிரகாசத்துடனும் வைக்கிறது
★ ஈறுகளுக்குப் பலமளிக்கிறது
★ பற்களை சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது
★ வாய் நாற்றத்தை அகற்றுகிறது
Kolynos
Chlorophyll
ஜெப்ரி மானேர்ஸ் அண்டு கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
GK. 3027
'கோலினாஸ்'
நுரை தனிச்
சிறப்பு வாய்ந்தது


உலோகத்தைக் காப்பாற்றுவது அவசியம்
உலோகத்தின் மேற்புறம் எப்படி இருந்தாலும், அதற்கென்று இருக்கும் ஷாலிமார் பெயிண்டைப் பூசுவதனால், அதை ஒருக்காலும் துருப்பிடிக்காமல் காப்பாற்றலாம்.
... ஏனெனில், இந்தியாவில், ஷாலிமார் பெயிண்ட் கம்பெனியாருக்கு மாத்திரம்தான், 55 வருடத்திற்கு மேலான பெயிண்ட் தயாரிக்கும் அனுபவம் இருக்கிறது. ஷாலிமார் பெயிண்ட்கள் இந்தியாவின் பலவித கடுமையான சீதோஷ்ண நிலைமைகளையும் தாங்கக்கூடும் என்பதற்கு, ஷாலிமாரின் பரந்த ஆராய்ச்சியும் தொடர்ந்த முன்னேற்றமுமே அத்தாட்சியாகும்.
எந்த உபயோகமாயினும் பெயிண்ட் ஆர்டர் செய்யும்பொழுது, அவ்வுபயோகத்தை தெரியப்படுத்தவும்.
ஷாலிமார்
பெயிண்ட்கள்
SHALIMAR
SPW 358

★ ★ ஸ்ரீ தேவதாஸ் காந்தியின் மூத்த புதல்வர் நமது அருமைத் தந்தையைப் பற்றிய நினைவுகளை மிக உருக்கமாக எழுதுகிறார் :— ★ ★

என் தந்தை

ராஜ்மோகன் காந்தி

என் அருமைத் தந்தை தேவதாஸ்காந்தி மகாத்மா காந்தியின் நான்காவது புதல்வர். அவர் இந்த நூற்றாண்டின் முதல் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரிலே பிறந்தார்.

என் தந்தை தமது பதினைந்தாம் பிராயம் வரையில் தென் ஆப்பிரிக்காவிலேயே கழித்தார். அந்த நாட்கள் கஷ்டம் செறிந்த நாட்கள். 'பொழுது புலர்ந்தால் என்ன கஷ்டம் வருமோ, எத்தகைய விபத்து நேருமோ' என்ற நிலை நிறைந்திருக்குமாம்; எனினும் அப்பா அந்த நாட்களைப் பற்றிய கதைகளைச் சொல்லும் போது அந்தக் கஷ்டங்களைப் பற்றியெல்லாம் அதிகமாகச் சொல்ல மாட்டார். அந்த நாட்டிலிருந்த அழகியபழத் தோட்டங்களைப் பற்றியும், இயற்கைக் காட்சிகளைப் பற்றியும், 'பாபு'வின் ஆசிரமத்தில் நடத்திய கடும்கட்டுப்பாடுகள் நிறைந்தஇனிய வாழ்க்கையைப் பற்றியுமே சொல்லுவார்.

எங்கள் தந்தையை நாங்கள் தமிழ் முறைப்படி 'அப்பா' என்றுதான் அழைப்போம்.

அந்த நாட்களில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அப்பா மிகுந்த உற்சாகத்தோடு சொன்னது இப்பொழுது நினைவுக்கு வருகிறது. உபவாசம் என்பது அந்த நாட்களில் மிக சகஜமான விஷயமாக இருந்தது. அரை நாள் பட்டினி. முழு நாள் பட்டினி என்று அடிக்கடி உபவாச நாட்கள் வரும். காந்தி மகான் ஆசிரமத்தில் குழந்தைகள்கூட உபவாச விரதம் அனுஷ்டித்தாக வேண்டும். அப்போது எங்கள் அப்பாவுக்குப் பத்து வயதிருக்கும். இப்படியொரு உபவாச நாளில் ஆசிரமத்துக்கு வேர்க்கடலை மூட்டை வந்திருந்தது. அப்பாவுக்கு நாக்கில் ஜலம் ஊறிவிட்டதாம். அவரால் ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. யாருக்கும் தெரியாமல் சாக்குப்பைக்குள் கையை விட்டு விட்டார். ஆனால் எங்கிருந்தோ வந்த மகாத்மா காந்தி இதைப் பார்த்து விட்டார்! அப்புறம் என்ன நடந்தது என்று என்னைக் கேட்காதீர்கள். அது எனக்குத் தெரியாது. இந்தத் தவறு செய்ததற்குப் பிராயச் சித்தமாகக் காந்தி மகாத்மா இன்னொரு வேளையும் அப்பாவை உபவாசம் இருக்கச் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்!

எங்கள் அப்பா, தாம் தென் ஆப்பிரிக்காவிலிருந்த போது கிரிக்கெட்டும், கால் பந்தும் விளையாடியிருக்கிறாராம். ஆனால் கிரிக்கெட் விளையாட்டை டென்னிஸ் பந்தைக் கொண்டு தான் விளையாடியிருக்கிறார். 'பாட்'டுக்குப் பதில் ஒரு மரக்கட்டையும், 'ஸ்டம்பு'களுக்குப் பதில் ஒரு பக்கெட்டையும் உபயோகித்து வந்திருக்கிறாராம்!

அவர் சிறைவாசம் செய்த நாட்களில் அவருக்கு ரொம்பவும் இன்பத்தைக் கொடுத்த விஷயம் 'வாலிபால்' விளையாட்டுத்தான். இந்த வாலிபால் விளையாட்டில் ஜவாஹர்லால் அவர்களும், டாண்டன் அவர்களும் கலந்து கொள்வார்களாம். இவர்கள் இருவருமே நல்ல விளையாட்டுக்காரர்களாம். இவர்கள் விளையாட்டு மைதானத்திலும் சரி, வெளியிலும் சரி, காரசாரமாக விவாதம் புரிவார்களாம்.

ஒருசமயம், (அப்போது அப்பாவுக்கு இருபது வயதிருக்கும்) டாண்டன்அவர்களுக்கும் ஜவாஹர்லால்ஜிக்குமிடையே ஒரு விஷயத்தைப் பற்றிக் கடும் சர்ச்சை நடந்ததாம். அப்பா மீசையும் தாடியும் வளர்த்துக் கொள்ள வேண்டுமா? அல்லது சுத்தமாக க்ஷவரம் செய்து கொள்ள வேண்டுமா என்பதைப்

ஜனாதிபதி ராஜன் பாபுவும், ராஜாஜியும் இவ்வருஷ ஆரம்பத்தில் தேவதாஸ் காந்தியின் இல்லத்துக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்: ஸ்ரீ தேவதாஸ், வி. ஆர். நரசிம்மன் எம். பி., ஸ்ரீமதி தாரா, ஸ்ரீமதி நாமகிரி, ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ், ஸ்ரீ ராமு. ராஜாஜியின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பையன்தான் கோபு. தேவதாஸின் கடைசிப் புதல்வர்.





தேவதாஸின் மூத்த புதல்வர் மோகன் அலகாபாத் திரிவேணிசங்கமத்தில் தந்தையின் அஸ்திகளைக்கரைப்பதைப் படத்தில்காணலாம்

பற்றித்தான் விவாதம். டாண்டன் அவர்கள் தாடிக் கொள்கையை ஆதரித்தார். ஜவாஹர் லால் அவர்களோ சுத்தமாக க்ஷவரம் செய்யப் பட்ட முகத்தைத்தான் ஆதரித்தார். கடைசி யில் ஜவாஹர்லால்ஜிதான் வெற்றிபெற்றார்!

* * *

காந்திமகானுக்கு அப்பாவிடம் அளவு கடந்த நம்பிக்கை. அப்பாவுக்குப் பத்தொன் பது வயது நடந்து கொண்டிருந்தபோது, காந்திஜி அப்பாவைப் புதுச்சேரியில் உள்ள அரவிந்த ஆசிரமத்துக்கு அனுப்பி வைத்தார். எதற்குத் தெரியுமா? அரவிந்தரிடம் காந்தி மகானின் அஹிம்சா மார்க்கத்தைப் பற்றி நீண்ட விவாதம் நடத்துவதற்காகத் தான். அரவிந்தருக்கும் அப்பாவுக்கும் அஹிம்சை யைப் பற்றி நீண்டநேரம் விவாதம் நடை பெற்றதாம். இந்த விவாதத்தைப் பற்றிய முழு விவரத்தையும் அஹிம்சையைப் பற்றி அரவிந்தரின் அபிப்பிராயத்தையும் அப்பா, பாபுவுக்கு எழுதி அனுப்பினார்.

அப்பா எப்பணி செய்தாலும், அதற்காகத் தாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் வழக்கம் கிடையாது. கூடியவரையில் பின்னணியிலிருக் கவே விரும்பினார். ஆனால் தவறான அவையடக் கத்தை எப்பொழுதும் அவர் விரும்பவில்லை. ஏதாகிலும் செய்யப் போய்த் தவறு நேர்ந்து விட்டால் பழி தன் மேல் விழுமே என்று சிலர் பயந்து ஒதுங்கிப் பின்னணியில் இருக்க விரும்புகிறார்களே, அத்தகைய சுபாவம் அவ ருக்குப் பிடிக்காது. சமயம் வந்தால் அவர் முன்னணியில் நின்று எல்லாப் பொறுப்புக் களையும் ஏற்றுக் கொண்டு வேலை செய்யவும் தயாராயிருப்பார். அப்படி முன்னணியில் நின்று வேலை செய்த போதெல்லாம் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கிறார்.

என் அம்மாவின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட அவர் தமது உள்ளத்தையே என் அம்மாவுக்கும் கொடுத்திருந்தார். என் பெற் றோர்களுக்குத் திருமணம் 1933-ம் ஆண்டில் நடைபெற்றது. அதற்கு முன்பு, அவர்கள் உண்மையிலேயே பரஸ்பரம் ஒருவரை யொரு வர் நேசிக்கிறார்களா என்பதற்கு ஒரு கடும் சோதனை காந்தி மகான் நடத்தினார். அந்தச் சோதனையை இருவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.


என் அப்பாவும் அம்மாவும் இருபத்து நான்கு ஆண்டுகள் லட்சிய இல்லற வாழ்க் கையை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் இருவரும், ஒருவர் மேல் ஒருவர் எவ்வளவு அன்பும் சிரத்தையும் கொண்டிருந் தனர்! குழந்தைகளாகிய நாங்கள் நால் வரும், அப்பாவின் பரிபூரண அன்பைப் பெற்று வந்தோம். எங்கள் அப்பா தமது தகப்பனாரிடமிருந்து என்ன அறிவையும் அனு பவத்தையும் பயிற்சியையும் பெற்றாரோ, அவற்றை யெல்லாம் எங்களுக்கு தந்தார்: அவர் எங்களை உண்மையோடு வாழச் சொன் னார். உன்னதம் நிறைந்த தூய்மையோடு வாழச் சொன்னார். மனச் சாட்சியின் சொல்லுக்கு மதிப்பு கொடுக்கச் சொன்னார்.

அப்பா, தமது வாழ்நாளில் எத்தனையோ விஷயங்களில் அக்கறை கொண்டிருந்தார். அவற்றில் எல்லாம் வைத்து முக்கியமாக அவர் கவனத்தைக் கவர்ந்தது பத்திரிகைத் தொழில். அவர் சிறு பையனாகத் தென்னாப் பிரிக்காவிலிருந்த நாளிலிருந்து பத்திரிகைத் தொழிலில் அவருக்கு ஈடுபாடு உண்டு. தென்னாப்பிரிக்காவில் காந்திமகான் நடத்தி வந்த "இந்தியன் ஒபீனிய"னுக்கு அச்சுக் கோத்திருக்கிறார். கையால் சுற்றி அச்சடிக் கும் இயந்திரத்தை இயக்கியிருக்கிறார். புத்த கத்தை 'பைண்டு' செய்திருக்கிறார். அந்த நாளிலிருந்து, கடைசியில் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்து உயிர் நீத்த வரையில் அவர் வாழ்க்கையில் மிகுந்த ஆசையோடு செய்துவந்த தொழில் பத்திரிகைத் தொழில்தான். அவர் தாம் செய்யும் எந்த வேலையையும் பகிரங்கமாகவே செய்வார். அதனால் பலருக்கு அவர் எப்படி வேலை செய்கிறார் என்று அறிய வாய்ப்பிருந் தது. அவர் வேலை செய்யும் விதத்தைக் கண்டு நான் பலமுறை வியப்பில் ஆழ்ந்திருக்கிறேன்!

சமீபகாலத்தில் உலகில் எங்கு பார்த்தாலும் ரூபாய் அணா பைசாவில் எந்த விஷயத்தையும் மதிப்பிடும் வழக்கம் வளர்ந்து வருவதைப் பார்த்து வேதனையுற்றிருக்கிறார். இது மக்க ளின் முன்னேற்றத்தை, பண்பாட்டைக் கெடுத்து வருவதைக் கண்டு மனம் நொந்து வருத்தமுற்றிருக்கிறார். இந்த நிலையைச் சமாளிக்கும் சக்தி மேடைப் பிரசங்கங்களி லும், தார்மிக பிரசாரச் சொற்பொழிவுகளி லும் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கிறார். மனித வாழ்வின் லட்சியங்களை மாற்றியமைக் கக்கூடிய வலிமை ஆத்ம சக்திக்குத்தான் உண்டு என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அந்த ஆத்மசக்தியை வளர்ப்பதற்குப் பாடு பட்டால் என் தந்தையின் விருப்பமும் லட்சிய மும் நிறைவேறும். என் பாட்டனார் காந்தி மகானின் கனவும் நனவாகும்.



மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 10

மறுபடியும் சந்திப்பா?

புலிப்பள்ளியார் பயந்து விட்டதைக் கண்டதும், "அதற்குள் உங்களை நான் மிரட்டும் அளவுக்கு வந்து விடவில்லை. நீங்கள் பயப்படாதீர்கள். உங்களை முதலைக் கிணற்றிலே தள்ளிவிட வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லை. என்னைப் போன்ற நல்ல நண்பர்களிடம் இந்த ரகசியங்களை மறைப்பது நல்லதல்ல என்று உங்களுக்கே தெரிய வேண்டாமா....?" என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியார் சிறிது நேரம் யோசித்தார். அந்தச் சமயத்தில் அவனிடம் எதையும் மறைத்துப் பேசுவது ஏதேனும் அபாயத்தை விளைவிக்கும் என்பதை அவர் உணர்ந்தார்.

"நான் உங்களிடம் எதையும் மறைக்க விரும்பவில்லை. காஞ்சியில் ஒருநாள் இரவு பூதுகர் ஒரு புத்த சமயப் பள்ளியிலிருந்து வெளியே வரும்பொழுது கலங்க மாலரையர் அவரைத் தடியால் தாக்கி மயக்கமுறச் செய்து எங்கோ ஒரு தனி அறையில் அடைத்து வைத்திருந்தாராம். ஆனால் மறுநாள் அந்த அறையைத் திறந்து பார்த்தபோது பூதுகரைக் காணவில்லையாம். அவர் இருக்குமிடம் தெரியவில்லை. இதுதான் உண்மை" என்றார்.

"அப்படியென்றால் பூதுகர் தப்பித்துக் கொண்டு விட்டார். உயிருடன் தான் இருக்கிறார், இல்லையா?.. கலங்க மாலரையர் தான் ஏமாந்து போய் விட்டார் இல்லையா...?"

"ஆமாம். கலங்க மாலரையரிடம் முரட்டுத்தனம் அதிகமாக இருக்குமே தவிர புத்திசாலித்தனம் போதாது" என்றார்.

"பூதுகர் உயிரோடுதான் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டவரையில் மனத்துக்கு ஒரு ஆறுதல். கடவுள் நாஸ்திகர்களைக் கூட எதற்காகவோ இவ்வுலகத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கருதி அவர்களை எல்லாம் அபாயத்திலிருந்து காப்பாற்றுகிறார்" என்றான் பராந்தகன்.

"அது உண்மை. உங்களுக்கெல்லாம் பூதுகரைப் பற்றி இவ்வளவு கவலை இருக்குமென்று நான் நினைக்கவில்லை."

பராந்தகன் சிரித்தான்: "சோழ சாம்ராஜ்யத்தின் எழுச்சி பூதுகரைப் போன்றவர்கள் கையில்தான் இருக்கிறது. இந்தக் கொடும்பாளூர் அரச சபையில் அந்த உத்தம வீரரை அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டோம். ஆனால் அவர் 'சோழ மன்னர் சபையில் ஒரு சேவகனாக இருந்தாலும் இருப்பேனே தவிர, எந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனம் கிடைப்பதாக இருந்தாலும் கூட வேண்டாம்' என்று சொல்லி விட்டார். இத்தகைய உண்மை நெஞ்சம் கொண்ட தீர புருஷரைப் பற்றி என்னைப் போன்றவன் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்?" என்றான்.

புலிப்பள்ளியார் அவனுக்கு எவ்வித பதிலும் சொல்லவில்லை. அவர் உடம்பில் ஏற்பட்டிருந்த சிரமம் சிறிது தணிந்திருந்ததால் இனிமேல் அவ்விடத்திலிருந்து புறப்படுவதே நலமென்று அவருக்குத் தோன்றியது. "சரி; இனிமேல் நாம் கிளம்பலாமல்லவா..?" என்றார்.

"தாராளமாக....!" என்று சொல்லிப் பராந்தகன் எழுந்தான். பாதாள லோகம் போலிருந்த அச் சிறைக்கூடத்திலிருந்து மேலே ஏறிச் செல்வது ஏதோ மலைமீது ஏறிச் செல்வது போலிருந்தது.

அந்தப் படிகளில் ஏறி நடப்பது சிறிது சிரமத்தைக் கொடுத்தாலும் பாதையில் எங்கும் இருள்சேராமல் இருந்தது. புலிப் பள்ளியாரின் மனத்துக்குச் சிறிது ஆறு தலை அளித்தது. மேல்நோக்கிச் செல்லும் படிகளின் முடிவான கட்டத்தை அடைந்து சிறிது தூரம் நடந்ததும் கோட்டையின் தெற்குவாசலை அடைந்து விட்டோம் என்பதைப் புலிப்பள்ளியார் உணர்ந்து கொண்டார்.

''இதுதானே தெற்கு வாசல்? போதும், போதும். இதுவரையில் கோட்டையைப் பார்த்த வரையில் எனக்குத் திருப்திதான். இனிமேல் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. இப்படியே அரண்மனைக்குப் போய் விடுவோம்'' என்றார்.

''நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும் பொழுது நான் என்ன சொல்ல முடியும்? உங்களுக்குக் கோட்டையின் மற்ற இடங்களையும் காட்டாத வரையில் எனக்கு மனக் குறைதான். இருந்தாலும் உங்களை அதிக சிரமப்படுத்த விரும்பவில்லை. உங்கள் அபிப்பிராயப்படி அரண்மனைக்கே போய் விடுவோம்'' என்றான்.

பராந்தகன் மற்ற இடங்களையும் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தாமல், அதோடு விட்டது அவருக்குப் பெருத்த ஆறுதலைக் கொடுத்தது. அவர்கள் அரண்மனைக்கு வந்த சமயத்தில் சபாமண்டபத்தில் வைகைமாலையின் நடனம் நடந்து கொண்டிருந்தது. அவளுடைய நடனத்துக்கு அனுசரணையாகச் சுதமதி யாழை மீட்டித் தேவாரப் பண் ஒன்றை மெய்மறந்த நிலையில் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். வைகைமாலையும் சுதமதியும் உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருப்பதைக் கண்டு, பராந்தகனுக்கு மாத்திரமல்ல, புலிப்பள்ளியாருக்கும் மிக வியப்பாகவே இருந்தது.

சபை நடுவே இருந்த சிம்மாசனத்தில் ஆதித்தன் கம்பீரமாக வீற்றிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மதுரை அமைச்சர் அருண்மொழியாரும் மற்றுமுள்ள ராஜப் பிரதானிகளும் அமர்ந்திருந்தனர். மற்றொரு புறத்தில் அருந்திகை, அனுபமா முதலியவர்கள் தோழிப் பெண்கள் சூழ அமர்ந்திருந்தனர். ஆதித்தன் புலிப்பள்ளியாரையும் பராந்தகனையும் கண்டதும் எழுந்து, ''வாருங்கள்! வாருங்கள்!'' என்று உபசரித்தான். ஆதித்தன் அமர்ந்திருந்த ஆசனத்துக்குச் சமீபமாக உள்ள இரு ஆசனங்களில் புலிப்பள்ளியாரும் பராந்தகனும் அமர்ந்தார்கள். நாட்டியமாடிய வைகைமாலை சபையில் ஏற்பட்ட சிறு சலசலப்பைக் கண்டும் காணாததுபோல் தன் நாட்டியத்திலேயே கவனத்தைச் செலுத்தினாள்.

சுதமதி யாழை மீட்டிக் கொண்டே இசை இன்பத்தில் மூழ்கி இருந்தாள். அப்பொழுது அங்கு யார் வந்தார்கள், என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரியாது. வைகைமாலையின் நடனமும் சுதமதியின் இனிய கானமும் அச்சபையிலுள்ளோரைக் கவர்ந்துவிட்டன. எல்லோரும் மெய்மறந்த நிலையில் இருந்தனர் என்றேதான் சொல்ல வேண்டும். அப்பொழுது அங்கு வந்த பராந்தகனின் மனத்தையும் அந்த இனிய இசையும் எழில் நிறைந்த நாட்டியமும் கவர்ந்து விட்டனவென்றால் கேட்க வேண்டுமா? ஆனால் புலிப்பள்ளி கொண்டாரின் மனம் மாத்திரம் இசையிலோ நாட்டியத்திலோ லயிக்கவில்லை. எப்படி லயிக்கும்? இயற்கையாகவே அவருக்கு இசைக் கலையிலோ நாட்டியக் கலையிலோ பற்றுதலோ ரசிகத் தன்மையோ கிடையாது. அதிலும் அப்பொழுது அவர் இருந்த நிலையைப் பற்றிக் கேட்க வேண்டுமா? மனத்தில் புகைந்து புகைந்து எழுந்த ஆத்திரமும் கோபமும் அப்பொழுது அவர் நிலையைத் தடுமாற வைத்திருந்தன. அவர் நன்றாக உணர்ந்து கொண்டு விட்டார், அவ்வூரில் இன்னும் சில நாழிகைகள் தங்கினால் கூடத் தம்மைப் பயித்தியமாக்கிவிடுவார்கள் என்று. கொடும்பாளூரார்கள் தம்மை வேண்டுமென்றே அவமானப் படுத்துகிறார்கள் என்பதும் அவர்கள் தஞ்சை மன்னருக்கோ பல்லவ சக்கரவர்த்திக்கோ பயந்து அடங்கி இருக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதும் அவருக்குத் தெளிவாக விளங்கின. அதோடு பாண்டிய மன்னரின் துணையினால்தான் கொடும்பாளூரார்களுக்குத் தைரியமும் கர்வமும் ஏற்பட்டிருக்கின்றன என்று எண்ணினார். மதுரை அமைச்சருக்கு அவர்கள் காட்டும் உபசாரமும், ஆதரவும் பாண்டிய மன்ன




ரும் கொடும்பாளூர் இருக்குவேளார்களும் பல்லவ மன்னருக்கு எதிராக ஏதோ சதி செய்கின்றனர் என்பதைத் தான் எடுத்துக் காட்டின.

அப்பொழுது அவருக்கு அருள்மொழியார் மீது இருந்த ஆத்திரம்தான் எல்லை மீறியதாக இருந்தது. தமது இனிமையான பேச்சினாலும் தந்திரத்தினாலும் கொடும்பாளூராரைத் தம் வலையில் சிக்க வைத்துவிட்ட அருள்மொழியாரை ஏதேனும் ஒரு வகையில் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். எல்லாவற்றையும்விடத் தம் மெய்காப்பாளர்களின் அவயவங்களைச் சேதப்படுத்தியது தான் அவர் மனத்தை மிகவும் கலக்கியது. எப்படியாவது கொடும்பாளூரார்களை ஒழித்துக் கட்டிவிட்டால்தான் தஞ்சை மன்னரும், முக்கியமாக, பல்லவ சக்கரவர்த்தியும் நிம்மதியாக வாழ முடியும் என்ற முடிவுக்கு வந்தார். கொடும்பை நகருக்கு வந்து பலவித ரகசியங்களை அறிந்து கொண்டு தஞ்சைக்குச் செல்வோம் என்ற நம்பிக்கையோடு வந்த அவருக்கு ஏமாற்றத்துடனும் அவமானத்துடனும் தஞ்சை மன்னர் முத்தரையரிடம் போய் நிற்க வேண்டுமே என்ற திகில்தான் அதிகமாக இருந்தது. அரசாங்கத்தில் தமக்கு எதிரிபோல் இருக்கும் கலங்கமாலரையர் தம்முடைய ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டு எப்படிக் கொக்கரிப்பார் என்பதை நினைக்கும் போதுதான் அவர் மனம் இடிந்து சுக்குநூறாகி விடும்போலிருந்தது. எப்படியும் இனிமேல் கொடும்பாளூரில் தங்கியிருப்பது தவறு என்று அவருக்குப் பட்டது.

அவருடைய கவனம் வைகைமாலையின் நாட்டியத்திலோ, சுதமதியின் பாட்டிலோ லயித்து நிற்கா விட்டாலும் அவர்கள் இருவரும்



துயரமற்றவர்களாக ஆடுவதிலும் பாடுவதிலும் சிரத்தை செலுத்துவது அவருக்குச் சிறிது சந்தேகத்தை அளித்தது. அதற்குள் பூதுகனைப் பற்றி ஏதேனும் நல்ல செய்திகள் அவர்களுக்குக் கிடைத்திருக்குமோ என்று அவர் சந்தேகப் பட்டார். எப்படி இருப்பினும் பூதுகனை



ஒழித்து விட்டால் வைகைமாலை, சுதமதி இருவரது வாழ்க்கையும் குலைந்துவிடும் என்பதை அவர் அன்று காலை நடந்த சம்பவங்களிலிருந்தே நன்கு உணர்ந்து கொண்டிருந்தார். அதோடு பூதுகனை ஒழித்துக் கட்டிவிட்டால் சோழ சாம்ராஜ்யத்தைப் பற்றிக் கனவு காண்கிறவர்கள் கனவெல்லாம் வீண் கனவாகிவிடும் என்று அவர் எண்ணினார்.



நாட்டியம் ஒருவிதமாக முடிவடைந்தது. சபையிலுள்ள கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கலையத் தொடங்கியது. ஆதித்தன் தன் ஆசனத்தைவிட்டு எழுந்திருக்காமல் உட்கார்ந்திருந்தான். அருண்மொழியாரும் பராந்தகனும் அவனுடைய உத்தரவை எதிர்பார்ப்பவர்கள் போல் அவன் முகத்தைப் பார்த்த வண்ணமே அமர்ந்திருந்தனர். ஆதித்தன் சபையிலுள்ள கூட்டம் கலைந்ததும் புலிப்பள்ளியாரைப் பார்த்து, ''அமைச்சரே! வைகைமாலையின் நடனம் எப்படி?'' என்று கேட்டான்.

மனம் குழம்பியவாறு இருந்த புலிப்பள்ளியார் அப்பொழுதுதான் கண்விழித்துக் கொண்டவர் போல், ''நடனமா? நாட்டியம் தானே! நன்றாக இருந்தது. பல்லவ மன்னரின் சபையிலும் தஞ்சை மன்னரின் சபையிலும் இதைவிடச் சிறந்த நாட்டியத்தை யெல்லாம் நான் பார்த்திருக்கிறேன்!'' என்றார்.

''அப்படியா? இருக்கலாம். இதில் அதிசயப்படுவதற்கு இல்லையே?'' என்றான் ஆதித்தன்.

''அந்தச் சபைகளில் நடைபெறும் நடனங்களை இதை விடச் சிறந்ததாகச் சொல்லித்தானே ஆக வேண்டும்? எப்பொழுதுமே தஞ்சை அமைச்சர் தம்முடையசுயகௌரவத்தை விட்டுக் கொடுப்பதில்லை!'' என்று கூறினான் பராந்தகன்.


உங்கள் வீடு பூச்சிகளால்

பாதிக்கப் பட்டுள்ளதா?



லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து

அவைகளை ஒழித்துக் கட்டுங்கள்!



கொசு, ஈ, கரப்பான் பூச்சி இவைகள் உங்கள் குடும்பத்தினர்களின் ஆரோக்கியத்தைக் குலைக்கின்றன! பூச்சிகளை க்ஷணப் பொழுதில் நிச்சயமாகக் கொல்லும் சக்தி வாய்ந்த லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து அவைகளை ஒழியுங்கள்! முன்னை விட தீவிர சக்தி வாய்ந்த இந்த பூச்சி நாசினி அதிக துரிதமாக வேலை செய்கிறது. இதில் லின்டேனும் டி.டி.டி.யும் (D.D.T.) ஒருங்கே சேர்ந்துள்ளதால், இதன் பலன் அதிக காலம் நீடித்து நிற்கிறது. லின்டேன் கலந்த ப்ளிட் புகழ்பெற்ற சிவப்பு, வெள்ளை மற்றும் நீலநிற டின்னில் கிடைக்கும்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V 4510

அருண்மொழியார் மெல்லிய குரலில், ''கலையை அறிந்தவர்களுக்குத்தான் இது தெரியும். இதெல்லாம் சபையைப் பொறுத்த விஷயமல்ல. தஞ்சை அரண்மனையிலுள்ள நடன அரங்கோ, காஞ்சியில் உள்ள நடன அரங்கோ இதைவிட அழகாகவும், அலங்காரமாகவும் இருக்கலாம். இதில் நாட்டியமாடுகிறவர்களின் திறமைதான் கவனிக்கப்பட வேண்டும். நானும் எவ்வளவோ நாட்டியங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்படி எல்லோருடைய மனத்தையும் கவரக்கூடிய மிக அற்புதமான முறையில் ஒரு பெண் நாட்டியமாடி நான் பார்த்ததே இல்லை. இசையும் நாட்டியத்துக்கு ஏற்றாற்போல் சிறப்பாக அமைந்திருந்தது'' என்றார்.

''மதுரை அமைச்சர் நான் சொல்லுவதற்கு நேர் எதிராக ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்'' என்று குறைப்பட்டார் புலிப்பள்ளியார்.

''உங்களுக்கு நேர் எதிரிடையாக ஏதாவது சொல்ல வேண்டுமென்று மதுரை அமைச்சர் இந்த வார்த்தைகளைச் சொன்னதாக நான் கருதவில்லை. கலை விஷயத்தில் நன்கு தெரிந்து ஆராய்ந்து முடிவு செய்யும் பண்புதான் நமக்குத் தேவை. வீண் குதர்க்கமான மனப் பண்பு இல்லாமல் ஒரு கலையை ரசிப்பவர்களுக்குத்தான் அதன் உண்மையும் உயர்வும் விளங்கும். போகட்டும்- தாங்கள் கோட்டை முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டீர்களா? நீங்கள் கோட்டையைச் சுற்றிப் பார்த்ததில் எனக்கு மிகவும் திருப்தி. தாங்கள் நடக்கும் போது ஒரு விதமாக நடப்பது போல் இருக்கிறதே, என்ன காரணம்?'' என்று கேட்டான் ஆதித்தன்.

அவனுடைய கேள்விக்குப் புலிப்பள்ளியாரால் பளிச்சென்று பதில் சொல்ல முடியவில்லை. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது அவருக்குச் சிறிது அவமானமாக இருந்தது போலிருக்கிறது. அவர் தயங்கியபடியே, ''கோட்டையைச் சுற்றிப் பார்க்கும்பொழுது ஒரு இடத்தில் முழங்காலில் இடித்து விட்டது; அவ்வளவுதான். கோட்டை மிகவும் அற்புதமாகத் தான் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அனேக இடங்களில் ஒரே இருட்டாக இருக்கிறது. காற்று வசதியும் போதாது'' என்றார்.

''முதன் முதலாகப் பார்க்கிறவர்களுக்கு அப்படித்தான் இருக்கும். தாங்கள் இன்னும் இரண்டு மூன்று தடவைகள் வந்து பார்த்தீர்களானால் எல்லாம் சரியாகிப் போய் விடும்'' என்றான் ஆதித்தன்.



காதலி: இந்தப் படகு நடுசென்று தண்ணீரில் மூழ்கிப் போனால் என்ன செய்வீர்கள்?
காதலன்: போகட்டுமே. நமக்கு என்ன நஷ்டம்? படகு நம்முடையது இல்லையே, படகுக்காரனுக்குத்தானே நஷ்டம்!

ஆதித்தனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பராந்தகன் சிரித்துக்கொண்டே, ''அமைச்சர் அவர்களுக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது எனக்குத் தெரியாது. முழங்காலில் எங்கோ இடித்ததை நான் கவனிக்கவில்லை. நீங்கள் இரண்டொரு இடங்களில் இடறி விழுந்ததுதான் எனக்குத் தெரியும். நான்கூட ஒரு இடத்தில் உங்களைத் தூக்கிவிட வில்லையா?'' என்று கூறினான்.

பராந்தகனின் வார்த்தை புலிப்பள்ளியாருக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கியது. மேலும் அவனோடு வார்த்தைகள் பேசிக் கோட்டையைச் சுற்றிப் பார்த்த விநோதத்தை வெளிக் கிளப்ப வேண்டாம் என்று எண்ணி மனப் புகைச்சலை அடக்கிக் கொண்டார். அதிலும் பாண்டிய மன்னரின் மந்திரி அருண்மொழியாரின் எதிரே தமக்கேற்பட்ட அவமானத்தை வெளிக்காட்டிக் கொள்ளவே அவருக்கு வெட்கமாயிருந்தது. அவர் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே, ''ஆமாம்! சாதாரணமாகத் தான் இரண்டொரு இடங்களில் இடறி விழுந்து விட்டேன். முழங்காலில் கொஞ்சம் நோவெடுக்கிறது, அவ்வளவு தான். உங்கள் தந்தையார் சிருஷ்டித்திருக்கும் கோட்டை மிகவும் நன்றாகத்தானிருக்கிறது. அந்த இருட்டுத் தான்....'' என்று இழுத்தார்.

''சில இடங்களில் இருட்டாக இருக்குமென்றுதான் பராந்தகனை உங்களோடு

அனுப்பினேன். அங்கெல்லாம் மேலும் கீழுமாகப் படிகள் இருந்திருக்கும். அங்கெல்லாம் மிக ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கையாகவும் நடந்திருக்க வேண்டும். போகட்டும். உங்களைப் போன்றவர்கள் எங்கள் நகரத்துக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க ஆவல் கொண்டு வந்ததே எங்களுக்குப் பெருமைதான். உங்கள் மன்னர் கொடும்பாளூர் கோட்டையின் அற்புதங்களைத் தெரிந்து கொள்ள மிகுந்த ஆவலோடு இருப்பார். தாங்கள் மன்னர் முத்தரையர் அவர்களுக்குக் கொடும்பாளூர் கோட்டையைப் பார்த்த விவரங்கள் அனைத்தையும் எடுத்துச் சொல்லுவீர்கள் என்று நம்புகிறேன். தஞ்சை மன்னர் அவர்களும் ஒருதடவை எங்கள் கோட்டையை வந்து சுற்றிப் பார்த்தார்களானால் நாங்கள் இன்னும் பெருமையுள்ளவர்களாவோம்'' என்றான் ஆதித்தன்.

''அதிலென்ன சந்தேகம்? அமைச்சர் அவர்கள் மனம் வைத்து விட்டால், தஞ்சை மன்னர் அவர்கள் நமது நகருக்கு விஜயம் செய்வது சிரமமல்ல'' என்று கூறினான் பராந்தகன்.

''நான் மன்னரிடம் அவசியம் சொல்கிறேன்'' என்றார் புலிப்பள்ளியார் இழுத்தாற்போல்.

''சொல்லுவது மாத்திரம் போதாது. அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து எங்கள் கோட்டையைச் சுற்றிப் பார்க்கச் செய்து ஆனந்தத்தை அனுபவிக்கும்படி செய்ய வேண்டும்'' என்றான் பராந்தகன்.


புலிப்பள்ளியாருக்கு அப்பொழுது அவர்களோடு பேசிக் கொண்டிருப்பதைவிட விடைபெற்றுக் கொண்டு உடனேயே ஊருக்குத் திரும்புவதுதான் நல்லதாகப்பட்டது. ''மன்னரிடம் எல்லாவற்றையும் தவறாமல் சொல்லுகிறேன். இனிமேல் நான் இங்கு அதிகநேரம் தாமதிக்க முடியாது. எனக்குத் தஞ்சை நகரில் எவ்வளவோ காரியங்கள் இருக்கின்றன. மன்னரும் என் வருகைக்காகக் காத்திருப்பார். மன்னிக்கவும். நான் இப்பொழுதே புறப்படுவதுதான் நல்லது. எனக்கு விடை கொடுங்கள்'' என்றார்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? எங்கள் விருந்தினராக வந்திருக்கும் தாங்கள் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு விடுவீர்கள் என்று நினைக்கவில்லை. மதுரை அமைச்சர் அவர்கள் எங்கள் விருப்பத்துக்கு இணங்கி இன்னும் இரண்டொரு தினங்கள் இங்கே தங்கிச் செல்ல உத்தேசித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு தினங்கள் நாட்டிய விருந்தை அனுபவிக்கலாமே என்று சுதமதியையும் வைகைமாலையையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்களும் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அரண்மனை விருந்தோடு அற்புதமான கலை விருந்தையும் அனுபவித்து ஆனந்தமடையலாமே என்று நினைக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

''அதற்கு என்ன? அமைச்சர் அவர்கள் கூடக் கோட்டையில் இன்னும் அனேக இடங்களைச் சுற்றிப் பார்க்கவில்லை. அவர்கள் நம்முடைய விருப்பத்துக்கு இணங்கி இங்கே தங்குவார்களானால் அவர்களுக்கு மனக்குறையின்றிக் கோட்டையின் மற்ற இடங்களையும் அழைத்துக் கொண்டு போய்க் காட்டி விட வேண்டுமென்பதுதான் என் ஆவல்'' என்றான் பராந்தகன்.


''அப்படியா...? நகரைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கோட்டையைச் சுற்றிப் பார்ப்பதென்றால் ஒரு நாள் போதாதுதான். கோட்டையைப் பார்க்கவாவது அமைச்சர் அவர்கள் சில நாட்கள் தங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் ஆதித்தன்.

அவர்கள் வார்த்தையைக் கேட்ட புலிப்பள்ளியாருக்குத் திகில் ஏற்பட்டது. எப்படியாவது அவர்கள் தம்மைக் கொன்று விட நினைக்கிறார்கள் என்றுதான் அவர் தீர்மானித்தார். (தொடரும்)



எல்லோருக்கும் தெரியும் —
ப்ரூக் பாண்ட் தேயிலே புத்தம் புதியதாக இருப்பதற்குக் காரணம் அது துரிதமாக கடைகளுக்கு அனுப்பப்படுவதே
. . . மேலும் ஒவ்வொரு நாளும் 5 கோடி கோப்பைகளுக்கு அதிகமாகவே ப்ரூக் பாண்ட் தேயிலே அருந்தப்படுகிறது
. . . இன்னும் மற்றெந்த தேயிலேயை விட ப்ரூக் பாண்ட் தேயிலேயே அதிகமாக விற்பனையாகிறது
Brooke Bond Tea
Brooke Bond Leaf Tea
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலேயையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலேயையே
அருந்துகிறார்கள் !
ப்ருக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்

புதிய பரிசுத்தகரணி . . . . டெட்

எல்லாவற்றையும் மிகவும் நன்றாக
சுத்தம் செய்கிறது.



துணிகளை
சுவர்களை
தரைகளை
பர்னிசர்களை
பாத்திரங்களை
ஸிங்கை (சாக்கடைகளை)



ஒவ்வொரு வீட்டிற்கும் டெட் தேவை
டெட்-புதிய பலகார்யார்த்த பரிசுத்தகரணி
இரண்டு சைஸ்களில் கிடைக்கும்.

இந்தியாவில் இந்திய மூலதனத்தினாலும் நிர்வாகத்தினாலும் **தயாரிக்கப்பட்டவை**

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்.

உயர்த்தரச் சோப், அலங்கார சாமான்கள் தயாரிப்பாளர்கள்

நாணயம்

வக்கீல் ஒரு கட்டுப் பைல்களைத் தூக்கி அவன் கையில் திணித்தார். குமாஸ்தா நாராயணன் அவ்வளவையும் வாங்கிக் கொண்டான்.

''ஏன் நிற்கிறீர்? அவ்வளவுதான். நீங்கள் போகலாம். காலையில் வரும்போது எல்லாக் கேஸ்களின் பைலையும் படித்துச் சுருக்கமாகக் குறிப்பு எழுதிக் கொண்டு வாரும். மறந்து விடாதீர்...'' வக்கீல் அவனைத் துரத்தாத குறையாக விரட்டினார்.

''சார்!...வந்து...வந்து...''


''என்ன ஐயா? ஏன் குழைகிறீர்?...ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சட்டென்று சொல்லித் தொலையுங்கள்.''

''வீட்டிலே கொஞ்சம் பண முடை. சம்பளத்திலே முன்பணமாகப் பதினைந்து ரூபாய் கொடுத்தால் நன்றாயிருக்கும்.''

''இதோ பாருங்கள். இன்றைக்குத் தேதி இருபத்தெட்டு. இன்னும் இரண்டு நாட்களில் சம்பளமே உம் கைக்கு வரப்போகிறது. அதற்குள் என்ன எதற்குத் தொந்தரவு செய்கிறீர்? போம் ஐயா, போய்விட்டுக் காலையில் வாரும். இருந்ததைப் பாங்குக்கு அனுப்பி விட்டேன். கைவசம் 'சில்லறை'யாக இல்லை.''

''அது இல்லை சார். மிகவும் நெருக்கடியான நிலை.''

''ரொம்ப சரி! இதற்கு மேல் நான் பதில் சொல்ல முடியாது. இப்போது தரமாட்டேன்.'' வக்கீலுக்குக் கோபம் வந்துவிட்டது. இனிமேல் அவரிடம் கெஞ்சினால் வாயில்







வந்தபடி பேசுவதைத் தவிர வேறெதுவும் செய்ய மாட்டாரென்று அவனுக்குத் தெரியும். கிழிந்துபோயிருந்த கோட்டுப் பையைத் தடவிக் கொண்டே ஏமாற்றத்தோடும் பைல்களோடும் அங்கிருந்து வெளியேறினான் நாராயணன். மாதம் நாற்பத்தைந்து ரூபாய் சம்பாதிக்கும் ஒரு வக்கீல் குமாஸ்தாவின் வாழ்க்கையை இருபது தேதிக்கு மேல் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டியதுதான், வேறு வழியில்லை.

மனைவி, நாலைந்து குழந்தைகள். பள்ளிக்கூடம், வீட்டு வாடகை, சமயங்களில் ஆஸ்பத்திரி, இவ்வளவையும் சமாளிக்கிற சக்தி நாராயணனின் நாற்பத்தைந்து ரூபாய்க்குக் கிடையாது.

மேலே உரசிவிடுவது போல ஒரு டாக்ஸி அசுர வேகத்தில் வந்தது. நாராயணன் ஒதுங்கிக் கொண்டான்.

"என்ன ஐயா! வீட்டிலே சொல்லி விட்டு வந்தியா? பார்த்துப் போ." அந்த டாக்ஸி டிரைவர் அவனை விசாரித்து விட்டுப்போனான்.

"கட்டுப்பாட்டை மீறித் தவறான பக்கத்தில் அதிக வேகத்தில் ஓட்டிக் கொண்டு வரும் இந்த மடையன் வீட்டில் சொல்லி விட்டு வரவேண்டியதில்லையாம். நான் வீட்டில் சொல்லி விட்டு வர வேண்டுமாம்" - நாராயணன் சிரித்துக் கொண்டே நடைபாதையில் ஏறி நடந்தான்.

வலது கை தாங்காமல் பைல் கட்டு. அரையில் அழுக்கேறிய நான்கு முழம் வேட்டி. மிதியடி இல்லாத கால்கள். இனிமேல் தைக்க இடமில்லை என்று கூறத்தக்க விதத்தில் அவ்வளவு தையல்களுக்கு ஆளாகி விட்ட ஒரு கறுப்புக் கோட்டு. களையெடுக்காத பயிர் போல வாரப்படாமல் முன் நெற்றியில் வந்து விழும் தலை மயிர் நரைத்தும் நரைக்காமலும் விகாரமாகத் தென்பட்டது.

ஆடம்பர வெள்ளம் நாகரிகக் குமிழிவிட்டு ஓடும் அந்த மாபெரும் தெருவில் தன்னைப் போல ஒருவன் நடந்து செல்வதே அசிங்கமாக இருப்பது போல நாராயணன் மனத்தில் ஒரு பிரமை தட்டியது.

ஜவுளிக் கடைகள், பூக்கடைகள், காப்பி ஹோட்டல்கள், தெரு ஓரத்து ரிப்பன் வியாபாரிகள், பத்திரிகை விற்கும் பையன், ஒவ்வொன்றாக, ஒவ்வொருவராக, அவனைக் கடந்து சென்றுகொண்டிருந்தார்கள். இல்லை, தவறு. அவன்தான் அவைகளைக் கடந்து முன்னேறிக் கொண்டிருந்தான்.

ரேடியோ சங்கீதம், பஸ் கண்டக்டர்களின் விசில், பேச்சுக்குரல், வியாபாரிகளின் பேரம், தெருவெல்லாம் அமர்க்களமாகத்தான் இருந்தன, அந்த மாலை நேரத்தில்.

"மிஸ்டர் நாராயணன்!...சார், உங்களைத் தானே?"

யாரோ இரண்டு கைகளையும் தட்டிக் கூப்பிடும் ஓசை. கூட்டம் நிறைந்த தெருவில் இப்படிக் கை தட்டிக் கூப்பிட்டால் அத்தனை பேரும் திரும்பிப் பார்ப்பார்கள். இப்போதும் அப்படித்தான் நடந்தது.

நாராயணன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய பழைய நண்பன் அரட்டைக் கல்வி என்று பேர் எடுத்த ராகவன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"என்ன ராகவன்? சௌக்கியமா?"

"சௌக்கியத்துக்கு என்ன குறைவு?"

"எங்கே இப்படி? இந்தப் பக்கமாக....."

"சும்மாத்தான் வந்தேன்."

"இப்போது எங்கேயாவது வேலை பார்க்கிறாயா? அல்லது சுதந்திரப் பிரஜைதானா?" இப்படிக் கேட்டு விட்டு நாராயணன் சிரித்தான். ராகவனைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டவர்கள் மட்டும் தான் அந்தச் சிரிப்பைச் சிரிக்க முடியும்.

"வேலையாவது ஒன்றாவது! எந்த முட்டாள் தரக் காத்துக் கொண்டிருக்கிறான் எனக்கு?"

"சரி! நான் வரட்டுமா? ஏகப்பட்ட பைல்கள் இரவுக்குள் பார்த்து முடிக்க வேண்டும்."

"நாராயணன்! ஒரு முக்கிய விஷயம்."

"என்ன?"

"உன்னிடம் ஒரு இரண்டணா இருக்குமா? காப்பிக்கு வேண்டும்." ராகவனுடைய குரல் தணிந்து தாழ்ந்து உலகத்திலுள்ள நைச்சியமெல்லாம் ஒன்று சேர்ந்து வெளிவந்தது.

நாராயணனுக்கு அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை. சிறிது நேரம் பேசாமல் நின்றான். ஒரு புன்னகை பூத்தான். "ராகவன்! இன்றைக்குப் பர்ஸ் கொண்டு வர மறந்து விட்டேன். வேண்டுமானால் வீட்டுக்கு வா, பார்க்கலாம்." சாதுரியமாகப் புளுகியது அவன் வாய். வீட்டில் செப்பால் அடித்த சல்லிகூடக் கிடையாதென்று அவன் மனத்துக்குத் தெரியாதா, என்ன?

"வேண்டாம், நான் இங்கேயே பார்த்துக் கொள்கிறேன். குட் பை, போய் விட்டு வா!"

அப்பாடா! நாராயணனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. ராகவனிடம் விடைபெற்றுக் கொண்டு நடந்தான்.

''சாமி! பூ வாங்கலியா... கொடைமல்லிகைச் சரம்....'' பூக்காரிக்குப் பதில் சொல்லாமல் ஒதுங்கி நடந்தான்.

''எதை எடுத்தாலும் ஓரணா சார். எதை எடுத்தாலும் ஓரணா! ஒரே அணா!''—நடைபாதையிலிருந்த கூட்டத்தை வகிர்ந்து கொண்டு மேலே நடந்தான் நாராயணன்.

வீட்டில் எத்தகைய வரவேற்பு காத்திருக்கும் என்பதை முன் கூட்டியே சிந்திக்கத் தொடங்கியது அவன் மனம்.

மனைவிக்கு ஜுரம். கஞ்சி போட்டுக் கொடுப்பதற்குப் பார்லி வாங்கி வருவேனென்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். குழந்தை சசி வாய்பாடு புத்தகம் வேண்டுமென்று நான்கு நாட்களாக அரித்துக் கொண்டிருக்கிறாள். பெரிய பையனுக்குப் போன மாதம் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டவில்லை. நாளைக் கடைசி நாள். வக்கீலிடம் பணம் வாங்கி வருவேன் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். வீட்டு வாடகைக்காரர். அந்த மனிதருக்கு மூன்று மாதம் பாக்கி. கழுகு போல் வந்து காத்துக் கொண்டிருப்பார். அவர் ஏசும் ஏச்சுக்களைக் காது கொண்டு கேட்க இயலாது. பால்காரி! அவள் உயிரையே வாங்கி விடுவாள்.

''இப்படியே காலடியில் ஒரு பர்ஸ் வந்து விழுந்தால்? அதில் ஒரு நூறு ரூபாயும் இருந்தால்....''—கையாலாகாதவன மனத்தில் தான் இந்தமாதிரி ஆசை உண்டாகிறது. ''நூறு ரூபாயாம்! நூறு ரூபாய்!—தரித்திரம் பிடித்த மனம். ஆயிரம், இலட்சம் என்று பெரிதாக நினையேன்!''—நாராயணன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''கடவுள் அருளால் உனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டதென்றால் என்ன செய்வாய்?'' என்று பிச்சைக்காரனிடம் ஒருவன் கேட்டானும்.

''தங்கத்திலல் ஒரு திருவோடு செய்து மறுபடியும் பிச்சைக்குப் போவேன்!'' என்று அந்த முட்டாள் பிச்சைக்காரன் பதில் சொன்னானும்!

இது நாராயணனுக்கு நினைவு வந்தது. தரித்திரனின் மனம் பகற் கனவு கண்டால் கூட அதுவும் அற்பக் கனவாகவே இருக்கிறது. காலடியில் அகப்படுகிற பர்ஸில் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தால் அடிக்கவா செய்யும்?

பாழாய்ப் போன மனம் 'நூறு' என்று நினைக்கிறதே?

''எங்கே ஐயா? பராக்குப் பார்த்துக் கொண்டு போகிற...மேலே இடிச்சுக்கிட்டு?''

''ஸாரி! மன்னிக்கணும்!''

நாராயணன் இனியும் யார்மேலாவது இடித்து விடக் கூடாதே என்பதற்காகச் சுதாரிப்புடன் சென்றான்.

★

பால்காரன், வீட்டு வாடகைக்காரர் எல்லோரையும் ஒவ்வொருவராக சால்ஜாப்பு கூறி அனுப்பியாகி விட்டது. மளிகைக்கடைக்காரனைக் கெஞ்சிக் குழைந்ததின் பயனைப் பார்லி அரிசி கடனாகக் கிடைத்தது. குழந்தை சசியை ஒரு அதட்டு போட்டதில் பயந்து போய் வாய்பாடு பஸ்தகம் கேட்பதையே விட்டு விட்டாள். பெரிய பையன் விவரம் தெரிந்தவன். சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்டு பேசாமல் இருந்துவிட்டான்.

நாராயணன் பைல் கட்டைப் பிரித்தான். இரவு எட்டே முக்கால் மணி. அரிக்கேன் விளக்கின் மங்கிய ஒளியில் ஒவ்வொரு காகிதமாகப் புரண்டது.

பார்த்துக் கொண்டே வந்தவனுக்குத் திடீரென்று தன் கண்களை நம்ப முடியவில்லை. பைல் காகிதங்களுக்கு நடுவே ஐந்தாறு புதிய நூறு ரூபாய் நோட்டுக்கள் மடித்துக் கிடந்தன. நாராயணனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. பைல் முழுவதும் வரிசையாகப் பிரித்துப் பார்த்தான். நன்கு தேடியும் அவற்றில் வேறு நோட்டுக்கள் இல்லை.

அறுநூறு ரூபாய்! எவனோ கட்சிக்காரன் கொண்டு வந்து கொடுத்ததை இரும்புப் பெட்டியில் வைப்பதற்குப் பதிலாக மறந்து போய்ப் பைலுக்குள் வைத்திருக்கிறார் வக்கீல்.

நாராயணனின் மனத்தில் சபலம் தட்டியது. பைலை மூடி வைத்து விட்டுத் திரும்பத் திரும்ப நோட்டுக்களை எண்ணினான். ஆறு



நூறு ரூபாய் நோட்டுக்களை ஒரே சமயத்தில் கையில் வைத்துப் பார்த்தபோது திடீரென்று குபேர சம்பத்து கிட்டியது போலிருந்தது.

குழந்தை சசி பின்புறமாக வந்து நாற்காலியைக் கட்டிக் கொண்டு நின்றாள்.

''அப்பா! திருடினால் பாவம்தானே?''—அவன் நெஞ்சில் சவுக்கடி விழுந்தமாதிரி இருந்தது.

''ஏன் கண்ணு! யார் சொன்னா அப்படி உனக்கு!''

''இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே பக்கத்துப் பையன் என் பென்சிலை எடுத்துக் கொண்டு விட்டான் அப்பா!''

''ஊம்! அப்புறம்....?''

''வாத்தியாரிடம் போய்ச் சொன்னேன்! அவர் அவனைக் கூப்பிட்டுப் பிரம்பாலே அடிச்சார் அப்பா!''

''..........''

''ஏம்ப்பா! ஒண்ணு கேக்கறேன், பதில் சொல்லுவியோ?''

''என்ன, கேளேன்?''

''திருடறதுன்னா என்னப்பா!''

''திருடறதுன்னு இன்னொருத்தர் பொருளை அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்கிறதுதான், அம்மா.''

''அப்படிச் செய்தால் சுவாமி கண்ணை அவிச்சுடுமா ?''

'' . . . . . . ''

''திருடினா சுவாமி கண்ணை அவிச்சுடும்னு வாத்தியார் சொன்னாரே, அப்பா !''

''சுசி! நீ சமர்த்துக் குழந்தை இல்லையா? போ.....நாழியாகிறது. போய்த் தூங்கு. எனக்கு இதெல்லாம் பார்த்து எழுதணும்!''

''அப்பா, அன்னைக்கு ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் வந்தானே, அவன் பொய் சொன்னானா அப்பா ?''

''ஏன் ?''

''இல்லேப்பா! அதனாலேதான் அவனுக்குக் கண் போச்சு !''

''சுசி! உனக்கு உதை கேட்கிறதா? நீ போய்த் தூங்கமாட்டே?''

''இதோ போய் விட்டேன், அப்பா!''

குழந்தை படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டாள். வெளியே மழை வேறு அப்போதுதான் ஆரம்பித்திருந்தது.

''முழுசாக ஆறு பச்சை நோட்டுக்கள். எல்லாக் கடனையும் அடைத்து விடலாம். தெய்வமே அவன் கஷ்டத்தைச் சகிக்காமல் வக்கீலைத் தவறி வைக்கும்படி செய்திருக்கிறது. இல்லையானால் மகா கருமியான அந்த வக்கீல் அன்று மட்டும் கை தவறுவானேன்?''

''சே! என்ன இருந்தாலும் திருட்டுத் தானே? திருடின கை உருப்படுமா? இன்றைக்குச் சிறு திருட்டு. நாளைக்குப் பெரிய திருட்டு. அப்புறம் கொள்ளை. கொலை, சிறைவாசம் தூக்குத் தண்டனை!'' — ஒரு மனம் இடித்துக் காட்டியது.

''எவன்தான் திருடவில்லை? சமூகத்தில் ஒவ்வொருவனும்தான் திருடுகிறான். மனித சமூகத்தின் உடல் பலவீனத்தைக் காரணமாக வைத்து டாக்டர்கள் திருடுகிறார்கள். மனப் பலவீனத்தால் வக்கீல்கள் திருடுகிறார்கள். என்னைப் போல் ஒரு ஏழை — உடம்பைச் செருப்பாக்கி உழைக்கிறவன் இதைத் திருடினால் என்ன ?'' என்று மற்றோர் மனம் அவனுக்குத் துணிவு ஊட்டியது.

''வயிற்றை நிரப்பும் நாணயம் எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும். பரம்பரை பரம்பரையாக ரத்தத்தில் ஊறி வந்த பண்பாடு தந்த இந்த நாணயம் இழந்தால் கிட்டுமா? ஆத்மாவையே ஈடாக வைத்தாலும் கிடைக்குமா? சே! சே! இந்த வெறும் நாணயத்துக்காக அந்த நாணயத்தை இழக்கலாமா?'' — அவன் குழம்பினான். அவன் மனத்தைப் போலவே வெளியே இடியும் மழையுமாகப் பிரளயமாடிக் கொண்டிருந்தது இயற்கை. குழந்தைகள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தன. நோயாளியான மனைவி 'லொக்கு' 'லொக்'கென்று இருமிக் கொண்டிருந்தாள். விளக்கின் மங்கலான ஒளியில் குழந்தை சுசியின் முகத்தைப் பார்த்தான் நாராயணன். தூக்கத்தில் சிரித்துக் கொண்டிருந்தாள் குழந்தை. 'உலகத்திலுள்ள சத்தியத்தின் ஒளி எல்லாம் இங்கே இருக்கிறது' என்று அந்த முகத்தில் எழுதி ஒட்டியிருப்பது போல் தோன்றியது.

''அப்பா, திருடறதுன்னு என்னப்பா?''

''திருடினால் கண் அவிஞ்சிடுமா?''—மழலை மாறாத அந்தக் குரல் இன்னும் நாராயணனின் காதுகளை விட்டு நீங்கவில்லை. அவன் யோசித்தான். நீண்ட நேரம் யோசித்தான் — யோசனைக்குப் பின் வேகமாக எழுந்து வாயிற் கதவைத் திறந்தான்.

''இந்த இருட்டிலும் மழையிலும் நீங்கள் எங்கே கிளம்பி விட்டீர்கள்?'' என்று அவன் மனைவி வியப்புடன் கேட்டாள்.

''ஒன்றுமில்லை! இதோ வந்து விடுகிறேன்! நீ தூங்கு!'' என்று நாராயணன் தெருவில் இறங்கி மழையில் நனைந்து கொண்டே ஓடினான். வெறி பிடித்தவன் போல் வேகமாக ஓடினான். மணிக் கூண்டில் பதினொன்று அடித்தது. மழை ஓசையில் அதன் ஓசை அடங்கி அமுங்கிப் போய்விட்டது.

★

''சார், சார்! கதவைத் திறவுங்கள்!''

வக்கீல் வீட்டில் எல்லோரும் விளக்கை அணைத்துப் படுக்கைக்குச் சென்று விட்டனர்.

நாராயணன் கதவை மறுபடியும் தட்டினான். ''சார்! அவசரம்!''

கதவைத் தட்டும் ஓசை வீடு முழுவதும் எதிரொலித்தது. இப்படிப் பலமுறை தட்டிய பிறகு வக்கீல் முணுமுணுத்துக் கொண்டே எழுந்து வந்தார்.

''யாரையா இது? நடு ராத்திரியில் வந்து உயிரை வாங்குகிறது? தூங்கவிடமாட்டீர்களோ?'' என்று வக்கீல் கதவைத் திறந்தார்.

''நான்தான் குமாஸ்தா நாராயணன், சார்!'' என்று இழுத்தான்.

''என்ன ஐயா தலைபோகிற காரியம்? இந்த அர்த்த ராத்திரியில்?''

''நீங்கள் கொடுத்த பைல் கட்டில் இந்த அறுநூறு ரூபாயும் இருந்தது. கை தவறி அதில் வைத்து விட்டீர்கள் போலிருக்கிறது. அதை உங்களிடம் கொடுத்து விட்டுப் போகலாமென்று வந்தேன்.''

வக்கீல் நனைந்து போயிருந்த நோட்டுக்களைக் கையில் வாங்கிக் கொண்டார். நன்றி கூடச் சொல்லவில்லை. வந்தவன் சொட்டச் சொட்ட நனைந்து போயிருப்பதையும் கவனிக்கவில்லை.

''என்ன ஓய், சுத்த அசட்டு மனிதராக இருக்கிறீரே? காலையில் கொண்டு வந்து கொடுத்தால் குடி முழுகியா போய்விடும்? தூக்கத்தைக் கெடுத்து விட்டீரே?'' என்று அலுத்துக் கொண்டே கதவைச் சாத்தினார் அவனுடைய எஜமானர்.

''என் மாதிரி அசடர்களுக்காகத்தான் இந்த உலகத்தில் மழை பெய்கிறது. வெய்யில் அடிக்கிறது. பயிர் விளைகிறது. காற்று வீசுகிறது'' — என்று நினைத்துக் கர்வப்பட்டுக் கொண்டே தெருவில் இறங்கி மறுபடியும் மழையில் நனைந்து கொண்டே நடந்தான் அந்தக் குமாஸ்தா.

இந்த வறட்டுக் கர்வத்தைத் தவிர அவனுக்கு வேறென்ன மிச்சமிருக்கப் போகிறது? அங்கே அந்தக் கர்வக்காரனின் வீடு மழைக்கு ஒழுகித் தெப்பமாகிக் கொண்டிருந்தது. நாணயத்தைக் காப்பாற்றி விட்ட பெருமையில் சத்தியத்தின் பிரதிநிதியாய் இறுமாந்து நடந்து கொண்டிருந்தான் அவன் !



பட்டுக்கோட்டை ஆட்டக்காரர்

"தஞ்சை மாவட்டத்திலேயே பட்டுக்கோட்டைதான் மழையில்லாத ஊர்" என்று குறைப்பட்டுக் கொண்டார் தஞ்சை நண்பர் ஒருவர்.

"பட்டுக் கோட்டையிலே மாரியும் உண்டு; மழையும் உண்டு" என்றேன். நண்பர் அதிசயத்தினால் ஏறிட்டு நோக்கினார்.

"பூப்பந்தை மழை பொழிவதுபோல் சுழன்று சுழன்று அடித்து விளையாடும் விளையாட்டு மன்னர் திரு மாரியைக் குறிப்பிடுகிறேன்!" என்று சொன்னேன்.

வளம்மிக்க தஞ்சைஜில்லாவிலுள்ள பட்டுக்கோட்டை எத்தனையோ விளையாட்டுக்காரர்களை ஈன்றெடுத்துப் பெருமை பெற்றுள்ளது. அதில் பிறந்த திரு மாரியும், திரு சின்னசுப்பையாவும் பூப்பந்தாட்டத்திலே விரல் விட்டு எண்ணக் கூடிய அற்புதமான ஆட்டக்காரர்களுக்குள்ளே இருவர்.

"கடினமான வேலை மட்டும் தேசத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்குப் போதாது. விளையாட்டுக்களும், விளையாட்டுப் பயிற்சிகளும் சுபிட்சப் பாதையில் முன்னேறுவதற்கு உறுதுணையாயிருக்கின்றன" என்று நேருஜி விளையாட்டின் மகிமையைப் பிரோடாவில் விளக்கியிருக்கிறார்.

அப்படிப்பட்ட அருங் கலையான விளையாட்டுக் கலையிலே திரு மாரிக்கு அளவற்ற ஆர்வம் இருக்கிறது. அவரது ஆட்டத் திறமைக்காகவே பட்டுக்கோட்டை போர்டு உயர்நிலைப் பள்ளியிலே அவருக்கு விசேஷ 'உதவித் தொகை' வழங்கிக் கல்வி வசதி அளித்தனர். போர்டு உயர்நிலைப் பள்ளியில் நடக்கும் வாலிபால், பூப் பந்து, ஓட்டப் பந்தயம் ஆகிய விளையாட்டுப் பரிசுகளெல்லாம் திரு மாரிக்கே கிடைத்து வந்தன.

பூப்பந்தாட்ட உலகில் மாரி என்று அன்போடு அழைக்கப்படும் திரு மாரியப்பனுக்கு இப்பொழுது நாற்பது வயதாகிறது. மணமாகி நான்கு குழந்தைகள் இருக்கின்றனர். அவர் இந்தியன் பாங்கியில் பணியாற்றி வருகிறார். 'மனத்துக்குப் படிப்பு எவ்வளவு அவசியமோ, அதைப்போல உடலுக்கு உடற் பயிற்சியும் அவசியம்' என்ற ஒரு ஆங்கில அறிஞரின் அறிவுரைப்படி, இந்த வயதிலும் அவர் உற்சாகத்துடன் ஓடியாடி விளையாடுகிறார்.

பூப்பந்தாட்டத்திலே 29 எண்ணிக்கைகள் உண்டு. முதல் தடவை ஆட்டத்தில் 29 எண்ணிக்கையை எடுத்து வெற்றிபெற்றவர், மறு தடவை ஆட்டத்திலும் அந்த எண்ணிக்கையை எடுத்து விட்டால், அந்தக் கட்சியினரே வெற்றி பெற்றதாகக் கருதப்படும். சில சமயம் இரண்டாவது தடவை ஆட்டத்தில் எதிர்க் கட்சியினர் ஜெயித்து விட்டால் மூன்றாவது தடவை ஆடும் ஆட்டமே வெற்றி தோல்வியை நிச்சயிக்கும்.

சென்னை ஆந்திர மகாசபை நடத்திய ராஜ்யப் பூப்பந்தாட்டப் போட்டியில் 'பைனல்' விளையாட்டு மாரி குழுவுக்கும், கரீம் கோஷ்டிக்கும் நடந்தது. வெற்றி யாருக்கு என்று நிச்சயிக்க முடியாதபடி ஆட்டம் விறுவிறுப்போடு விளங்கியது. முதல் தடவை ஆட்டத்தில் திரு மாரி வெகு நன்றாக ஆடி 29 எண்ணிக்கையை எடுத்து விட்டார். இரண்டாவது தடவை ஆட்டத்தில் 28 எண்ணிக்கையும் கிடைத்து விட்டது. இன்னும் ஒரே ஒரு எண்ணிக்கைதான் பாக்கி. அதை எடுத்திருந்தால் திரு மாரிக்கே வெற்றி கிடைத்திருக்கும். ஆனால் அதிர்ஷ்ட தேவதை அவருக்கு ஒத்தாசை செய்யவில்லை. ஆகையால் அந்தப் பந்தயத்தில் திரு மாரிக்கு 'ரன்னர்' கப் கிடைத்தது. அன்று உடல்நிலை சரியில்லாதிருந்தும் அவர் அவ்வளவு தூரம் ஆடியதை அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் பாராட்டினார்கள். ஆனால் 1956-ம் வருஷம் அவரே திரு வஹாப்போடு சேர்ந்து விளையாடிச் சென்னை ராஜ்ய வெற்றி வீரர் என்ற விருதை அடைந்தவர்.

"வட இந்தியாவில் மிகுந்த பிராபல்யமாயிருக்கும் 'ஷட்டில்காக்' விளையாட்டு நம் தென்னிந்தியாவிலும் வேகமாகப் பரவிப் பூப்பந்தாட்டத்தை விழுங்கி விடுமோ என்று பயந்தேன். ஆனால் பூப்பந்தாட்ட விளையாட்டு நிபுணர்களுக்காகச் சங்கம் நிறுவி, எல்லா விளையாட்டு நிபுணர்களும் ஒற்றுமையோடு பழகி வருவதிலிருந்து அந்த பயம் அடியோடு நீங்கிவிட்டது" என்று பெருமிதத்துடன் கூறினார் திரு மாரி.

'வீடுதோறும் கலையின் விளக்கம் தோன்ற வேண்டும்' என்று விரும்பினார் கவி பாரதியார். கிராமந்தோறும் பூப்பந்தாட்டக் கலை ஓங்கி வளர்ந்து, விளையாட்டு நிபுணர்கள் பல்கிப் பெருக வேண்டும்.

— குண்டுமணி.



சோகக் குரல்

சேந்தூர் கூத்தன்



'அக்கோவ்'— ஒரு குருவி கூவுகிறது. அந்தக் கூவலில் இருக்கும் இனம் புரியாத சோகம் நம் இதயத்தைத் தொட்டு விடுகிறது. இந்தக் கூவலை வேனிற்காலத்தில் சர்வ சாதாரணமாகக் கேட்கலாம். சிலர் குயில்தான் அவ்வாறு கத்துகிறது என்று கூறி இரண்டையும் ஒரே பறவை என்கின்றனர். வேறு சிலர் இரண்டும் வெவ் வேறு என்கின்றனர். இதில் உண்மை எவ்வளவு இருந்த போதிலும் 'அக்கா குருவி'யைப் பொறுத்தவரை ஒரு கதை கிடைத்துவிட்டது.

* * *

குயில் கூவியது. காகம் கரைந்தது. கருடன் கத்தியது. சில கரிச்சான் குஞ்சுகள் இரீச்சிட்டன. படுக்கையிலிருந்து எழுந்தேன். பொழுது இன்னும் சரியாக விடியவில்லை. கிருஷ்ணபட்சத்து நிலா மேல் வானத்தில் இறங்கிக் கொண்டிருந்தது.

மேல் துண்டை எடுத்துத் தலையில் சுற்றிக் கொண்டு மற்றொன்றை எடுத்து உடலில் போர்த்திக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கி நடந்தேன். கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது; இலேசாக வீசிய தென்றல் உடலுக்கு வெகு இதமாக இருந்தது. உள்ளம் குளிர்ந்தது.

கோடை காலமாதலால் காவிரியின் மருங் கிருந்த மாமரங்களும் அத்தி மரங்களும் காய்த்துக் குலுங்கி நின்றன. அத்திப் பழத்தின் நறுமணம் குப்பென்று வீசி உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

திடீரென்று 'அக்கோவ்' என்ற கூக்குரல் என் இதயத்தை அழுத்திப் பிடித்தது. கொழுந்து விட்டு எரியும் தீப்பந்தம் ஒன்றை என் செவிகளில் செருகுவது போல் இருந்தது.

மறுபடியும் 'அக்கோவ்' என்ற துயரம் நிறைந்த கூக்குரல். அதே அவல ஓசை.

வைகறைக்கு இத்தனை எழிலூட்டி இன்பம் அளிக்கும் இறைவன் இந்தப் பறவையைப் படைத்து ஏன் அழச் சொல்லியிருக்கிறான்? குயிலுக்குக் குரல் கொடுத்துக் கூவச்செய்த அந்நான்முகன் இப்பறவைக்கு மட்டும் ஏன் அழுகுரலை அளித்திருக்கிறான்?

பக்கத்திலிருந்த வடிகால் மதகு ஒன்றின் மேல் போய் உட்கார்ந்தேன். என் உள்ளம் அம்பு பட்ட பறவையைப் போல் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது. மறுபடியும் மறுபடியும் அந்த அவல ஓசை என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

படைப்புக் கடவுளின் மேல் எனக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவில்லை. ஏதோ ஒரு குறை அவர் படைப்பில் இருப்பதாகத் தோன்றியது. குயில் கூவுகிறது. வானம்பாடி பாடுகிறது. கிளி கொஞ்சுகிறது. ஆனால் இந்தப் பறவை?...

'அக்கா குருவி' என்று இதைக் கிராமாந்திரங்களில் அழைக்கிறார்கள். பெரும்பாலும் இது ஆற்றைச் சார்ந்தே வசிக்கும். ஆற்றில் புது வெள்ளம் வருகிற வரைக்கும் இதன் 'அக்கோவ், அக்கோவ்' என்கிற அலறலைத் தினந் தவறாமல் கேட்கலாம்.

"இது ஏன் இப்படி அலறி அலறி அழவேண்டும்? இந்தக் குருவி இனத்தில் ஏதோ ஒரு புதிர், சோகமான கதை, அற்புதமான காவியமே இருக்கத்தான் வேண்டும்."

"ஆம்! இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது புரியாத புதிரோ, அற்புத காவியமோ அல்ல. உண்மையிலேயே ஒரு சோக மயமான கதைதான்."

இப்படிச் சோகமாகவும் கனிவு என்றும் பேசுவது யார்? திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். பக்கத்தில் தனித்து நின்ற கிளை ஒன்றில் கறுப்பு நிறக் குருவி ஒன்று உட்கார்ந்திருந்தது. அதன் கண்களிலிருந்து 'டப் டப்' என்று கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது.

"நீங்கள் ஏன் இப்படி வருந்தி வருந்தி ஓலமிட வேண்டும்? உங்களை யார் என்ன செய்து விட்டார்கள்?"

"எங்களை யாரும் எதுவும் செய்யவில்லை. எங்கள் முன்னோன் ஒருவனால் வந்த வினை. பொறாமையின் விளைவு."

"அப்படியென்றால்?"

"விவரமாகச் சொன்னால்தான் உனக்குப் புரியும். ஆதியிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்." இப்படிச் சொல்லி விட்டுக் கதையைக் கூறத் துவங்கியது.

* * *

வெகு நாட்களுக்கு முன்பு இதே காவிரி ஆற்றங்கரையில் இரண்டு குருவிகள் வசித்து வந்தன. ஆண் பெண்ணான அவை நிறத்தில் காகத்தையும், உருவத்தில் அதை விடச்

சிறியதாகவும் குரலில் இனிமையாகவும் படைக்கப்பட்டிருந்தன.

அவை இரண்டையும் தவிர அவற்றைப் போன்ற வேறு குருவிகள் அந்தப் பிரதேசத்தில் வேறு எங்குமே காணப்படவில்லை. அவை இரண்டும் வெகு ஆனந்தமாக வாழ்ந்து வந்தன. நொங்கும் நுரையுமாகப் பாய்ந்தோடும் வெள்ளத்தில் நீராடி, மரங்கொடிகளில் பழுத்த கனிகளை உண்டு கவலையற்றுக் காலம் கழித்தன.

அவை கூடுகட்டியிருந்த அத்திமரத்தின் கீழே காவிரியின் வெண்மணல் பரப்பப்பட்டுப் பெரிய மேடையைப்போல் காட்சி அளித்தது. மாலை நேரத்தில் ஆண்களும் பெண்களும் தத்தம் குழந்தைகளோடு அங்குவந்து உல்லாசமாகப் பொழுதைப் போக்குவார்கள். அந்தச் சமயத்தில் மேலே இருக்கும் குருவிகள் இரண்டும் குதூகலத்தோடு பாடத் தொடங்கிவிடும். பெண் குருவியைவிட ஆண் குருவிதான் அற்புதமாகப் பாடும். அதைக் கேட்டு மாந்தர் எல்லோரும் 'ஆகா' 'அற்புதம்' என்று வியந்து கரகோஷம் எழுப்புவார்கள். அப்பொழுது அந்தக் குருவி தம்பதிகளுக்குச் சந்தோஷம் தாங்க முடியாது. இதில் அதிகப் பூரிப்பைக் கொள்வது ஆண் குருவிதான்.

ஒருநாள் என்றுமில்லாதபடி 'கூ...கூ' என்கிற இன்னிசை நாதம் தூரத்தில் கேட்டது. வர வர அந்த ஓசை வெகு சமீபத்தில் கேட்டது. கடைசியில் அந்த அத்தி மரத்திலேயே அவ்வோசை கேட்டது.

எங்கிருந்தோ பறந்து வந்த பறவை ஒன்று அத்தி மரத்தின் அடிக்கிளையில் அமர்ந்துகொண்டு பாட ஆரம்பித்தது. பாடியது, மூச்சு விடாமல் கேட்போர் கிறங்கிப் போகும்படி பாடியது. அதைக் கேட்டுச் சுழன்றடிக்கும் காற்றும் தவழ்ந்து வீச ஆரம்பித்தது. சலசலக்கும் மரங்களெல்லாம் அசைவற்று நின்றன. ஓடுகின்ற வெள்ளமும் ஒரு கணம் உறைந்து பின்புதான் ஓடத் தலைப்பட்டது.

அத்தகைய அற்புத கானத்தைக் கேட்டு மரத்தடியில் அமர்ந்திருந்த ஆண், பெண் அத்தனை பேரும் மெய்மறந்து போயினர். 'தேவகானம்' 'தேவகானம்' என்று வாய் விட்டுக் கூறினர்.

அதன் பிறகு அந்த நிகழ்ச்சி தினந்தோறும் நடக்கலாயிற்று. அந்தப் பறவை வருவதும், அமர கானம் பொழிவதும் மக்கள் பூரித்துப் புகழ்மாலை சூட்டுவதும் வழக்கமாகி விட்டன.

மேற்கிளையில் இருந்த அந்த இரண்டு குருவிகளும் இந்த நிகழ்ச்சியைத் தவறாது கவனித்து வந்தன. ஆனால் அதிக சிரத்தை எடுத்து வெகு கூர்மையோடு கவனித்து வந்தது ஆண் குருவிதான்.

நாளுக்கு நாள் புதிய பறவையின் இன்னிசையின் புகழ் பரவலாயிற்று. மக்கள் எல்லோரும் ஒரே முகமாகப் புதிய பறவையின் குரலையே போற்றிப் புகழ்ந்தனர். அதோடன்றி, 'இந்தப் பறவையின் குரலுக்கு அதன் குரல் உறை போடக்கூடக் காணாது' என்றும் மேற்கிளையைச் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டனர். இதனால் எல்லாம் ஆண்குருவியின் உள்ளம் இன்னும் அதிகமாக நொந்து போயிற்று. அதன் உடல் முழுவதும் பொறாமைத் தீ சுடர்விட்டுக் கபகப வென்று எரிந்தது. அந்தப் பாடும் பறவையின் ஓசை கேட்கும் போதெல்லாம் அதன் ஆத்திரம் அளவுகடந்து ஒரு எல்லை இல்லாமலேயே போய் விட்டது. தன் கதி 'சூரியன் முன் மின்மினியாகி விட்டதே' என்ற ஏக்கம் வேதனையாக அரும்பிட்டு, பொறாமையாக மலர்ந்து பழி வாங்கும் மனோ பாவமாகக் கனிந்து விட்டது.

'எப்படியாவது அவ்வளவு இனிமையாகப் பாடக் கற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அந்தப் பறவை எப்படிக் கற்றுக் கொண்டது என்பதையாவது தெரிந்து கொள்ள வேண்டும்' என்று எண்ணிய ஆண் குருவி பழி தீர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் பாடிக் களைத்துப் போய் அடிக்கிளையிலேயே உட்கார்ந்து விட்டது பாடும் பறவை. கீழே இருந்தவர்களெல்லாம் கலைந்து போய் விட்டனர். ஆண் குருவி வெகு நாட்களாக எதிர்பார்த்து வந்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடவில்லை.

மெள்ளப் பறந்துபோய்ப் பாடும்பறவையின் பக்கத்திலே உட்கார்ந்தது. அது வந்து உட்கார்ந்ததை உண்மையிலேயே பாடும் பறவை



கவனிக்கவில்லை. ஆனால் ஆண் குருவிக்குத் தன்னை அது அலட்சியப்படுத்துவதாகவே பட்டது. 'இருக்கட்டும். விஷயத்தைத் தெரிந்துகொண்டு ஆளைத் தீர்த்துவிடுகிறேன்' என்று மனத்துக்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டது. பிறகு தானாகவே அதனிடம் பேச்சு கொடுத்தது.

''நீஎப்படி இவ்வளவு நன்றாகப்பாடுகிறாய்?''

'''ஆற்றில் புது வெள்ளம் வருவதற்குள்ளாகத் திரும்பி விடுவேன்' என்று கூறிவிட்டு என் சகோதரன் ஒருவன் விந்திய பர்வதத்துக்குச் சென்றான். வெள்ளம் வந்து இவ்வளவு நாட்களாகியும் அவன் இன்னும் திரும்பவில்லை. அந்தத் துன்பத்தைச் சிறிது நேரமாவது மறந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப் பாடுகிறேன்.''

'' நீ எப்படி வேண்டுமானாலும், எதற்காக வேண்டுமானாலும் பாடித் தொலை. அதைப் பற்றிக் கேட்பதற்கு வரவில்லை நான். இவ்வளவு நன்றாக எப்படிப் பாடுவதற்குக் கற்றுக் கொண்டாய் என்பதுதான் எனக்குத் தெரிய வேண்டும்.''

ஆண் குருவியின் குரலில் கண்டிப்பும் கடுமையும் நிறைந்திருந்தன. இதைத் தெரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல்

மெள்ளச் சிரித்தபடியே, அந்தப் பாடும் பறவை கூறியது:

"இவ்வளவு நன்றாக எப்படிப் பாடக் கற்றுக் கொண்டேன் என்பது எனக்கே தெரியாது. ஒருவேளை என்னுடைய சகோதரனுக்குத் தெரிந்திருக்கலாம். அவன் வந்தபிறகென்னால் அவனைக் கேட்டு உனக்குத் தெரிவிக்கின்றேன்."

எவ்வளவு திமிரான பதில்! இதற்கு மேலும் ஆண் குருவியால் பொறுமையாய் இருக்க முடியவில்லை. தன் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு தனது கூரிய மூக்கினால் பாடும் பறவையின் கழுத்தில் ஒரு கொத்து வைத்தது. அவ்வளவுதான்; பாடும்பறவை 'கீச்' என்று கதறிக் கொண்டே கீழே விழுந்தது. அப்பொழுதும் ஆண் குருவியின் மனம் சமாதானம் அடையவில்லை. கீழே பாய்ந்து பாடும் பறவையின் உடலெங்கும் கொத்துக் கொத்தென்று கொத்திக் குதறிச் சின்னாபின்னமாக்கியது.

பாடும் பறவையால் அந்த முரட்டு ஆண் குருவியின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. மரணவஸ்தையில் முணுமுணுத்தது.

"அட, பொறாமைக்காரா! எப்பேர்ப்பட்ட நீசத்தனமான காரியத்தைச் செய்தாய்? என் சகோதரன் திரும்பி வந்தால் என்னைக் காணாது என்ன பாடுபடுவான்? ....என்னைப் போலவே நீயும் துடிதுடித்து வேதனைப் பட்டுத்தான் சாவாய். உன் சந்ததிகளும் காலமெல்லாம் அலறி அலறித் துன்பப் படுவார்கள்..."



அதன் முணுமுணுப்பு அடங்கியது. அதனுடைய ஒவ்வொரு வார்த்தையும், வார்த்தெடுத்த ஈட்டியைப் போல் பாய்ந்து மேல் கிளையிலிருந்த பெண் குருவியின் செவிகளில் விழுந்தது. இன்னும் சில நாட்களில் தாய்மைப் பேற்றை அடையப் போகிற அந்தக் குருவியின் உடலெல்லாம் காரணம் புரியாத ஒருவித பயத்தால் நடுநடுங்கியது. 'பாடும் பறவையின் சாபம் நிச்சயம் பலிக்கத்தான் செய்யும்' என்று அதன் உள்ளுணர்வு உணர்த்தியது.

ஆண் குருவி வீராதி வீரனைப் போல் தன் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததும் பெண் குருவிக்கு ஒருவித அருவருப்பு ஏற்பட்டது. உடனே, "ஏன் இப்படி அநியாய வழியில் போகிறீர்கள்? குற்றமற்ற அந்தப் பறவையைக் கொன்று போட்டதால் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது?" என்று கொஞ்சம் கொதிப்புடனேயே கேட்டது.

அதற்கு "உன்னுடைய மூளையும் நீயும்! விஷயம் தெரியாமல் உளறாதே. இந்தப் பறவை வருவதற்கு முன்பு எனக்கு இருந்த மதிப்பென்ன, கௌரவம் என்ன, பெருமை என்ன! அத்தனையுமல்லவா அடியோடு போய் விட்டன. இந்த நன்றிகெட்ட மனிதர்களும் அல்லவா ஒண்டவந்த பேய்க்கு ஒரேயடியாகப் புகழ் மாலை சூட்டி என்னை இழிவாகக் கருதி விட்டனர். இருக்கட்டும். இப்பொழுதேபோய் இந்தப் பறவையின் சகோதரனையும் தேடிப் பிடித்துத் தீர்த்துக் கட்டி விட்டு வருகிறேன். அதன் பிறகு பார். இந்த மனிதர்கள் என் காலின் கீழே நின்றுகொண்டு, 'ஒரு பாட்டுப் பாடு, ஒரு பாட்டுப் பாடு' என்று கெஞ்சிக் கூத்தாடுவதை" என்று கூறிவிட்டு விருட்டென்று வெகு வேகமாகப் பறந்து சென்றது ஆண் குருவி.

காலச்சக்கரம் கொஞ்சங்கூட வாட்டமின்றி விரைந்து சென்று கொண்டிருந்தது. நாள் வாரங்களாகி, வாரங்கள் திங்களாகி, திங்கள் வருடமாகவும் நிறையப் போயிற்று.

உடலெல்லாம் இரத்தம் சொட்டச் சொட்ட எங்கிருந்தோ வந்தது ஆண் குருவி. ஐயோ! என்ன பயங்கரம்! அதன் உடலெல்லாம் நார் நாராகக் கிழிந்து தொங்கியது. சிறகெல்லாம் பிய்ந்து மொழுக்கட்டையாகத் தென்பட்டது. மூக்கு பிளந்து போயிருந்தது. அதன் கால் விரல்களில் ஒரு நகத்தைக் கூடக் காணோம்.

பெண் குருவிக்கு முதலில் அடையாளம் புரியவில்லை. வெகு நேரத்துக்குப் பிறகு ஒருவாறு அடையாளம் புரிந்து கொண்டதும் அதற்குத் துக்கம் பீறிட்டு அடித்தது. 'ஓ' என்று ஆங்காரத்தோடு அழுதது.

சட்டென்று ஆண் குருவியின் முகம் மலர்ச்சியுற்றது. அதற்குக் காரணம் தன் மனைவியின் இறக்கை இடுக்கில், இரண்டு புதிய படைப்புகள் இருந்ததுதான். ஆண் பெண்ணான அவ்விரண்டு புதிய பிறப்புகளையும் தந்தையாகிய ஆண் குருவி மிகுந்த சிரமத்தோடு அணைத்துக் கொண்டு இளமையாய் இருந்த மகனிடம், "குழந்தாய்! உலகத்திலேயே நான்தான் சிறந்த குரல் உடையவன் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். அப்படியே மக்களும் நினைத்து என்னையும் உன் தாயாரையும் போற்றிப் புகழ்ந்து வந்தார்கள். ஆனால் அத்தனையும் சில நாட்களுக்கு முன்பு சீர்குலைந்து விட்டன. இரண்டு புதிய பறவைகள் தோன்றி நாரத கானத்தையும் விஞ்சுமளவுக்கு இசைமாரி பொழிந்தன. அவற்றில் ஒன்றைத் தீர்த்து விட்டேன். மற்றொன்றைத் தேடித்தான் விந்திய பர்வதத்துக்குச் சென்றேன். ஆனால் என் எண்ணம் அத்தனை சுலபமாக நிறைவேறவில்லை. எனக்குத்தான் தோல்வி ஏற்பட்டது. அந்தப் பறவை பின்னால் வந்து கொண்டிருக்கிறது. இன்றில்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் அதை நீ தீர்த்துக் கட்டிவிட வேண்டும். என் சந்ததியார்கள்தான் சிறந்த குரலை



பூரண வாய் சுத்தத்திற்கென
தயாரிக்கப் பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது ; சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனமிலை பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப் படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது, ஈறுகளை மிருது வாக தடவி விடுகிறது.
மூன்று அளவுகள்; பெரியவர்களுக்கு, சிறிய வர்களுக்கு, குழந்தைக்கு
• ஹார்ட் • மீடியம்
• ஸாப்ட்
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு–நீடித்த உழைப்பு




இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர்
வழிகாட்டி
ESTRELA
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELA BATTERIES LTD
BOMBAY
எஸ்ட்ரேலா
எஸ்டிரெல்லா பாட்டரீஸ் லிட்.
பம்பாய் — கல்கத்தா — டில்லி — கான்பூர் — மதராஸ் — நாகபூர்
E-1
WAS-56

செலவு குறைய

சுந்தரம் TVS புதுப்பித்த டயர்

TVS



பஸ், லாரி சொந்தக்காரர்கள்
செலவை குறைக்க முயல்வது அவசியம்.
பல செலவுகளில், டயர் செலவு மிக அதிக
மானது. டயர் தேய்ந்தால் புதிய டயர்
வாங்குவது சிக்கனமல்ல.
தேய்ந்து வழுக்கையான டயர்களை
சுந்தரம் (T V S) புதுப்பிக்கும்
முறையில் உருவாக்கி மீண்டும் உபயோ
கித்து சரிக்குச் சரி மிச்சம் காணலாம்.
பலகோடி மைல்கள் உபயோக
அனுபவத்தில் உருவானது

சுந்தரம் TVS புதுப்பிக்கும் முறை

சிக்கனம் பெரிது
உழைப்பும் உயர்ந்தது.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை · சென்னை

TVSZ 95

உடையவர்கள் என்று இந்த உலகம் உள்ளளவும் மனிதர்கள் போற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இதை நீ நிறைவேற்றினால்தான் என் ஆத்மா சாந்தி அடையும்...''

அதற்குமேல் அது பேசவில்லை. அதன் கரு விழிகள் ஆழத்தில் போய்ச் செருகிக் கொண்டன. அதன் பிறகு பெண் குருவியும் நீண்ட நாட்கள் உயிரோடு இருக்கவில்லை.

குழந்தைக் குருவிகள் இரண்டும் பெற்றோரின் பிரிவை ஒருவாறு மறந்து மகிழ்ச்சியோடு வாழமுற்பட்டன. அக்காவும் தம்பியும் வெகு ஒற்றுமையாக இருந்தார்கள். அளவுக்கு மீறிய அன்பு என்பதை அவர்களிடம்தான் காணலாம். அத்தனை பாசம் அவர்களிடையே மண்டிக் கிடந்தது. ஒரு நொடிகூட அவர்கள் பிரிந்திருந்தது கிடையாது. எங்கே போனாலும் இரண்டு பேராகவேதான் இருப்பார்கள்.

அக்காவிடம் தம்பிதான் உயிரையே வைத்திருந்தான். 'அக்கா' என்றால் அத்தனை பற்றுதல் தம்பிக்கு.

இத்தனை, அன்பும் அன்யோன்யமும் மிருந்த அவர்களிடையே திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது நிர்மலமான வானத்தில் நீர் மேகம் சூழ்ந்ததுபோல் ஆயிற்று. அக்கா குருவிதான் இதற்குக் காரணமாக இருந்தது. சகோதரியின் புரியாத போக்கைக் கண்டு தம்பி தனியாய்த் தவித்தான்.

முன்போல் அக்கா குருவி தம்பியோடு சரசமாய்ப் பழகுவதில்லை. அடிக்கடி தனியாகவே எங்கேயோ போய் விட்டு வந்தாள். தம்பியும் கூடப் புறப்பட்ட பொழுதெல்லாம் ஏதோ சாக்குபோக்கு சொல்லிச் சொல்லி அவனைத் தட்டிக் கழித்து விட்டாள். சில நாட்களில் இரவில் கூடக் கூட்டுக்குத் திரும்பாமல் இருந்து விடுவாள்.

அக்காவின் இந்த மாற்றத்தைக் கண்டுபிடிக்கத் தம்பிக்காரன் எவ்வளவோ யத்தனங்கள் செய்தும் பலனற்றுப் போய் விட்டன.

அன்று தம்பியின் பொறுமை அளவுகடந்து விட்டது. சேர்ந்தாற்போல் இரண்டு நாட்களாக அக்காவைக் காணவிட்டால் யாருக்குத்தான் பொறுமையாய் இருக்க முடியும்?

பறவை மகனின் உள்ளம் பதறியது. அக்காவைக் கண்டு பிடிக்காமல், அவள் மாற்றத்துக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் கூடு திரும்புவதில்லை என்ற உறுதியோடு சடசடவென்று சிறகடித்து நாலா திசைகளிலும் திரிந்து அலைந்தது. நாள் முழுவதும் இறக்கை ஒடியப் பறந்தும் பலன் கிட்டவில்லை. அஸ்தமன நேரமும் நெருங்கியது. தம்பிக்கு அழுகை அழுகையாக வந்தது. 'இனி அக்காவைக் காண முடியாதோ?' என்ற நினைவு அவனை உரலில் போட்டு உலக்கையால் இடிப்பதைப் போன்றிருந்தது.

சட்டென்று ஒரு திவ்யமான குரல் அருகிலிருந்த நந்தவனத்திலிருந்து கேட்டது. வான வெளி முழுதும் அந்த இனிய நாதம் அலைமோதிக் கொண்டிருந்தது. உள்ளத்தைத் தொடும் அந்த அற்புத கானத்தை இதுவரையிலும் தம்பிக்காரன் கேட்டதில்லை. அவன் உள்ளத்தில் பலப் பல சந்தேகங்கள் உதித்தன. அவன் தந்தை மரணத்தறுவாயில் கூறியது நினைவுக்கு வந்தது.

அவன் உடலில் ஒரு முறுக்கு தோன்றியது. சொல்ல முடியாத உற்சாகம் பிறந்தது. 'எங்கள் குலத்தின் பரம எதிரி இன்றோடு தீர்ந்தான்' என்று வெறியோடு கூவிக் கொண்டே 'சர்' ரென்று நந்தவனத்தை அடைந்தான்.

அங்கே அற்புதமான காட்சி ஒன்று தென்பட்டது. பூத்துக் குலுங்கி நின்ற சண்பக மரக்கிளை ஒன்றில் ஒரு பறவை தன்னை மறந்த நிலையில் பாடிக் கொண்டிருந்தது. அந்த இசையில் தன்னை இழந்து, அந்தப் பாடும் பறவையை அணைத்தாற் போல் மற்றொரு பறவை அமர்ந்திருந்தது. அந்தப் பறவை?

அவன் உடன் பிறந்த சகோதரிதான். என்ன கொடுமை! தம்பிக்காரன் எரிமலையையும் தோற்கடித்தான். பொங்குமாங்கடலையும் விஞ்சினான். அடுத்தகணம் மின்னல் போல் பாய்ந்தான். பாடும் பறவையைத் தன் பலம் கொண்ட மட்டும் தாக்கினான். பாடும் பறவையும் சளைக்கவில்லை.

அந்த அழகான நந்தவனத்திலே கோரமான துவந்த யுத்தம் ஆரம்பமாயிற்று. இத்தனை நேரமும் காதல் இன்பத்தில் திளைத்திருந்த அக்கா குருவி அஞ்சி நடுநடுங்கிப் போனாள். அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது. தந்தையின் கட்டளையைத் தனயன் நிறைவேற்றுகிறான் என்பதை உணர்ந்து கொண்டாள்.

தம்பியை அறைகூவி அழைத்தாள். ''ஐயோ! அவரை ஒன்றும் செய்யாதே. தவறு என்னுடையதுதான்....'' என்று ஏதேதோ புலம்பினாள். எவ்வளவோ கூறினாள். ஆனால் அவை ஒன்றும் தம்பிக்காரன் காதில் சிறிதும் விழவே இல்லை.

யுத்தம் முடிந்தது. பாடும் பறவை இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தது. தம்பி மாபெரும் வீரனைப் போல் இறக்கையை அடித்துக் கொண்டு ஒரு கிளையில் போய் அமர்ந்தான்.

அக்கா அலறி விழுந்து அழுதாள். பாடும் பறவையின் முகத்தோடு தன் முகத்தை வைத்துக் கொண்டு தேம்பினாள். இரத்த வெள்ளத்தில் உயிரற்றுக் கிடந்த தன் காதலனை அப்படியும் இப்படியும் புரட்டிப்





பார்த்து விட்டுத் தன் இறக்கைகளால் அணைத்தபடியே வெகு நேரம் கதறினான்.

கடைசியில் அவன் அழுகை ஓய்ந்தது. அப்பொழுது அவள் செய்த ஆச்சரியகரமான ஒரு செயல் தம்பியின் உள்ளத்தைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. மரத்திலிருந்த பசுந்தளிர்களை ஒவ்வொன்றாகத் தனது அலகினால் எடுத்து வந்து பாடும் பறவையின் சவத்தைச் சுற்றி மூடினாள். பின் அந்தச் சிதையை மூன்று முறை வலம் வந்து கீழே விழுந்து தண்டனிட்டு வணங்கி விட்டுத் தம்பியைப் பார்த்து, ''இப்போது திருப்திதானே! இனியாவது சந்தோஷமாக இரு'' என்று கூறி விட்டுக் கூட்டை நோக்கிப் பறந்தாள்.

தம்பியும் அவளைத் தொடர்ந்து கூட்டை அடைந்தபொழுது அக்கா கூட்டிலிருந்து வெளிப்பட்டாள். அந்த இடத்தில் அழகான இரண்டு முட்டைகள் காட்சி அளித்தன. தம்பிக்காரன் அவற்றையே கண் கொட்டாது கவனித்தான். அக்காவோ கண்ணீர் மல்கப் பார்த்து விட்டுச் சரக்கென்று மேற்கு நோக்கிப் பறந்தாள்.

தம்பியும் ஒன்றும் புரியாதவனாக அவளைத் தொடர்ந்து, ''அக்கா! என்னை விட்டு எங்கே போகிறாய்? நான் செய்ததையெல்லாம் மறந்துவிடு அக்கா. உன்னைப் பிரிந்து என்னால் ஒரு கணம் கூட உயிர் வாழ முடியாது அக்கா...'' என்று பலவாறு கூறிப் பலபலவென்று கண்ணீர் விட்டான்.

அக்கா எதற்கும் மசியவில்லை. கடைசியில் வேறு வழி இல்லாமல், ''நீ எப்பொழுதுதான் திரும்பி வருவாய்?'' என்று கேட்டான். அதற்கு மட்டும், ''புது வெள்ளம் வரும் பொழுது நானும் வருவேன்'' என்று கூறி விட்டு, தூர தூர வெளியில் அனாயாசமாகப் பறந்து சென்று தம்பியின் கண்களிலிருந்து மறைந்து போனாள்.

அவள் பதிலில் பொதிந்திருந்த சிலேடையை உணராத தம்பிக்காரன், 'நிச்சயம் வெள்ளம் வந்த பிறகு வந்து விடுவாள்' என்று எண்ணிக் கொண்டே கூட்டை அடைந்தான்.

கூட்டிலிருந்த அக்காவின் இரண்டு செல்வங்களையும் மிகுந்த அக்கறையோடு கண்காணித்தான். இதில் மட்டும் அவன் மனம் திருப்தி அடையவில்லை. அக்காவைக் காண வேண்டுமென்கிற ஆவல் நொடிக்கு நொடி அவனை வேதனைக் குளத்தில் மூழ்கச் செய்தது. தினமும் அக்காவை நினைத்து மேற்குத் திசையை நோக்கி, ''அக்கோவ்.....அக்கோவ்'' என்று கூவினான். தொண்டை வறண்டு போகும்படி கூவினான். புது வெள்ளமும் வந்து சேர்ந்தது. ஆனால் அக்கா தான் வந்து சேரவில்லை.

தம்பிக்கு இனி அக்கா திரும்புவாள் என்ற நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. அதற்குப் பதிலாகத் துயரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க ஆரம்பித்தது. அமர்ந்த இடத்தை விட்டு அசையாமல், 'அன்ன' ஆகாரம் உண்ணாமல் 'அக்கோவ்... அக்கோவ்' என்று அலறினான்.

ஆற்றில் எத்தனையோ முறை நீர் வற்றியது. எத்தனையோ முறை வெள்ளம் வந்தது. ஆனால் அக்கா குருவி மட்டும் வந்து சேரவில்லை. தம்பி கத்திக் கத்திச் செத்த பிறகும் கூட அவள் வரவே இல்லை.

அவள் பெற்ற செல்வங்களும் முட்டையிலிருந்து வெளிவந்ததிலிருந்து 'அக்கோவ்... அக்கோவ்' என்கிற தன் மாமனின் துயர ஓசையைத் தவிர வேறெதையும் கேட்காததால் அவைகளும் அவ்வாறே கூவத் துவங்கின. நீர் வற்றியதிலிருந்து வெள்ளம் வருகிற வரையிலும் 'அக்கோவ்...அக்கோவ்' என்று கூறுவதை ஒரு பழக்கமாகவே ஆக்கிக் கொண்டன. அப்படிக் கூவும் பொழுதெல்லாம் விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி உண்டாகி அவைகளை வேதனைப் படச் செய்தது.

இந்தப் பழக்கம் சங்கிலியைப்போல் தொடர ஆரம்பித்தது. அந்தப் பாடும் பறவையின் சாபம் பலித்து விட்டது. எங்கள் முன்னோனின் பொறாமையால், அவன் சந்ததியிலே வந்த நாங்கள்வேனிற்காலம் முழுவதும் ''அக்கோவ் ...அக்கோவ்'' என்று அலறி வேதனையால் துடிதுடித்துக் கண்ணீர் விடுகிறோம்....

கதை முடிந்தது. கண்ணீர் விட்டுக் கொண்டே சொல்லப்பட்ட அந்தக் கதையால் என் கண்ணீரை வரவழைக்க முடியவில்லை. ஆனால் போட்டி, பொறாமை, காதல் முதலிய ஆசாபாசங்கள் மனித இனத்தில் மட்டுமின்றிப் பறவை இனத்திலும் விலங்கினத்திலும் கேவலம், புழு, பூச்சிகளிடமும் கூட மலிந்து கிடக்கின்றன என்ற ஒரு உண்மையைப் புரிந்து கொண்ட நிறைவு எனக்கு உண்டாயிற்று. அந்த நிறைவோடு, ஆடைத் தயிரும் பழைய சோறும் நினைவு வரவே வீட்டை நோக்கி வேகமாக நடக்கலானேன்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

